படைப்பு

ஊற்று-6 | நதி-11 | மார்ச் - 2024 | திங்களிதழ்

ISSN : 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com



## அரசியல் இல்லாமல் வாழ்வே இல்லை என்கிறபோது இலக்கியம் மட்டும் எப்படி அதில் விதிவிலக்காக இருக்க முடியும்..

- கவிஞர் இளம்பிறையுடனான நேர்காணல்



- காட்சி

- ஆங்கில மூலம் : எடித் வார்ட்டன்
தமிழில் : கார்குழலி



- மன்னிப்பு

- மலையாள மூலம் : ராஜலட்சுமி
தமிழில் : கே.வி. ஜெயஸ்ரீ



- கிடா நோட்டம்

- ரம்யா அருண்ராயன்

படைப்பு
# தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-6 | நதி-11 | மார்ச் 2024

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர் :
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு :
**சகா(சலீம் கான்)**
**ஜெ. ராஜா ஜெயகரன்**

தலைமை நிருபர் :
**வலங்கைமான் நூர்தீன்**

நிருபர்கள் குழு :
**முனைவர் கோ.நித்தியா**
**க.சோ.திருமாவளவன்**
**கலிங்கப்பட்டி க.கருப்பசாமி**

முதன்மை வடிவமைப்பாளர் :
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு :
**ப.முகம்மது புலவர் மீரான்**

ஓவியக் கலைஞர்கள் :
**அழ.ரஜினிகாந்தன்**
**அன்பழகன்**

படைப்புகள் மற்றும் கருத்துக்களை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி :
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.
admin@padaippu.com
9489375575

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...


- **தலையங்கம்** -பக். 04
- **அரசியல் இல்லாமல் வாழ்வே இல்லை என்கிறபோது இலக்கியம் மட்டும் எப்படி அதில் விதிவிலக்காக இருக்க முடியும்..**
  - கவிஞர் இளம்பிறையுடனான நேர்காணல் -பக். 05
- **துளசி கவுடா**
  - மேனகா ரஹமத் -பக். 24
- **கட்டிப்போடும் கவிதைகள்**
  - ஸ்ரீதேவி கண்ணன் -பக். 27
- **தில்லையாடி வள்ளியம்மை**
  - தி.கலையரசி -பக். 34
- **பெண்ணும் தண்ணீரும்**
  - கோ.லீலா -பக். 45
- **உள்முகத் திறப்பு**
  - விஜயராணி மீனாட்சி -பக். 56
- **ஜனனமும் மரணமும் புதியது இல்லை**
  - ஆதிரா முல்லை -பக். 57

## சிறுகதைகள்


- **காட்சி**
  – ஆங்கிலத்தில்: எடித் வார்ட்டன்
  தமிழில்: கார்குழலி –பக். 14

- **கிடா நோட்டம்**
  – ரம்யா அருண் ராயன் –பக். 29

- **மன்னிப்பு**
  – மலையாள மூலம் : ராஜலட்சுமி
  தமிழில் : கே.வி. ஜெயஸ்ரீ –பக். 39

- **காமம் செப்பாது கண்டது மொழிமோ..**
  – குடந்தை அனிதா –பக். 51

- **தாலி பாக்யம்**
  – சவிதா –பக். 59


## கவிதைகள்


- **ரத்னாவெங்கட்** –பக். 13
- **கனகா பாலன்** –பக். 38
- **பூ.தனிக்ஷா பாரதி** –பக். 38
- **அமுதா தமிழ்நாடன்** –பக். 49
- **கி. சரஸ்வதி** –பக். 50
- **ராஜலட்சுமி** –பக். 50

# தலையங்கம்

**வணக்கம்.**

படைப்பு 'தகவு' எழுபத்தொன்றாவது இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

மார்ச் மாத இதழ் வழக்கம் போல மகளிர் படைப்புகளை மட்டும் தாங்கி வெளிவந்துள்ளது.

கவிஞர் இளம்பிறையின் நேர்காணல் இவ்இதழில் வெளியாகியுள்ளது. கிராமச் சூழலில் வளர்ந்து அச்சூழலின் அத்தனை மனிதர்களையும் பரிமாணங்களையும் உள்வாங்கி இலக்கியமாக்கியவர். இளமைக் காலம், எழுத்துப் பணி, படைப்புச் சூழல், பெண்ணெழுத்து எனப் பலதரப்பட்ட வினாக்களுக்கும் பதிலளித்திருக்கிறார்.

விதைகளுடன் புழங்கிப் புழங்கித் தானேயொரு விதைநெல்லாக உருவெடுத்திருப்பவர் துளசி கவுடா. தான் விதைக்கும் ஒவ்வொரு விதையிலும் எல்லாருக்குமான எதிர்கால வாழ்வை விதைத்துவைத்து அதற்கான அங்கீகாரமாக பத்மஸ்ரீ விருதையும் பெற்றிருப்பவர் குறித்தான கட்டுரை வெளியாகியுள்ளது.

தண்ணீர் தேடலில் பெண்ணின் வாழ்க்கை தொலையும் கணங்களை உரக்கச் சொல்கிறது 'பெண்ணும் தண்ணீரும்' கட்டுரை. அன்றாடமே போராட்டமாகிய வாழ்க்கைதான் பெண்களுக்கு. போராடித்தான் பெற வேண்டும் என்ற உரிமைகளுக்கான போராட்டங்களில் தமிழ்ப் பெண்களின் பங்களிப்பு எப்படி இருந்தது.. இந்த இதழ் முதல் தமிழ் நிலத்து வீர மங்கைகள் குறித்த தொடர் வெளியாகிறது. முதலாவதாக, தில்லையாடி வள்ளியம்மையின் வீர வாழ்வு பேசப்பட்டுள்ளது.

இந்த இதழில் அற்புதமான மொழிநடையில் உருவாக்கப்பட்டுள்ள இரண்டு மொழிபெயர்ப்புச் சிறுகதைகள் வெளியாகியுள்ளன. தனிமையில் தவிக்கும் ஒரு பெண்மணி இயற்கையில் தன்னைக் கண்டெடுத்து வாழ்ந்துகொண்டிருக்கிறார். அந்த இயற்கை அவரை விட்டுப் போய்விடும் என்ற நிலை வந்தபொழுது அவர் என்னவானார்.. எடித் வார்ட்டனின் ஆங்கிலச் சிறுகதையை மிக அழகாக மொழிபெயர்த்துள்ளார் கார்குழலி. ஒரு இளம் ஆசிரியையின் உணர்வுகளை மலையாளத்தில் இராஜலட்சுமி செதுக்கித் தந்த அதே நிலையில் தமிழிலும் தந்திருக்கிறார் கே.வி.ஜெயஸ்ரீ. தமிழின் மிக முக்கிய இரு மொழிபெயர்ப்புகள் இவ்இதழில் வெளிவந்துள்ளன.

திருட்டில் ஈடுபடும் ஒரு மனிதனின் அந்தரங்கத்தைப் பேசும் 'கிடா நோட்டம்', தன் அகத்தைப் புரிந்துகொள்ளாத புறத்தால் மனச்சிதைவுக்குள்ளான ஒரு பெண்ணைப் பற்றிப் பேசும் 'காமம் செப்பாது கண்டது மொழிமோ', அடையாளங்கள் தேவைப்படாத நிலை நோக்கி நகரும் பெண் நிலை கூறும் 'தாலி பாக்யம்' என இந்த இதழில் சிறந்த சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.

கவிதைகள், கட்டுரைகள், தொடர்கள், வாசிப்பனுபவங்கள் என நிறைந்திருக்கும் இந்த மாதத் தகவின் அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

ஆசிரியர்.



- ஆசிரியர்

**பாண்டிச்செல்வி விஸ்வநாதன்**




## - கவிஞர் இளம்பிறையுடனான நேர்காணல்

**ச.பஞ்சவர்ணம்** என்னும் இயற்பெயரைக் கொண்ட கவிஞர் இளம்பிறை அவர்கள், அரசுப்பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிக்கொண்டிருப்பவர். இளவேனில் பாடல்கள், மவுனக்கூடு, நிசப்தம், முதல் மனுசி, பிறகொரு நாள், நீ எழுத மறுக்கும் எனதழகு, அவதூறுகளின் காலம் போன்ற கவிதைத் தொகுப்புகளும் வனாந்திரப் பயணி, காற்றில் நடனமாடும் பூக்கள் போன்ற கட்டுரைத் தொகுப்புகளும் இவரால் எழுதப்பட்டவை. பல்கலைக்கழகங்களிலும், அரசு உயர்கல்வி நிறுவனங்களிலும், பள்ளிக்கல்வியிலும் இவரது கவிதைகள் பாடங்களாக இடம்பெற்றுள்ளன. தமிழக அரசின் சிறந்த பாடநூல் பரிசு, திருப்பூர் தமிழ்ச்சங்க விருது, களம் இலக்கிய விருது, கவிஞர்கள் தின விருது, சேலம் தமிழ்ச்சங்கம் விருது, பாவலர் இலக்கிய விருது, சிற்பி இலக்கிய விருது, புரட்சிக் கவிஞர் விருது எனப் பல விருதுகளைப் பெற்றவர். கவிஞர் இளம்பிறை அவர்களுடனான ஒரு **நேர்காணல்...**

**நீங்கள் வாசிக்க வந்த காலம் எப்படி இருந்தது.. உங்களுக்கு வாசிக்க வேண்டும் என்ற ஆர்வம் எப்படி வந்தது? முதல் நாள் பள்ளி அனுபவம் பற்றிச் சொல்லுங்கள்..**

நான் படிக்கத் தொடங்கிய காலம் புத்தகங்கள் அதிகம் கிடைக்காத, இல்லாத காலம். வீட்டுக்கு வருகிற கடிதங்கள் மற்றும் மற்றவர்களுக்கு வருகிற கடிதங்களைப் படித்துச் சொல்வது, பிறருக்குக் கடிதங்கள் எழுதித் தருவது எனக் கடிதங்கள் எழுதியதில்தான் தொடங்கியது என் எழுத்து என்று சொல்லலாம். பிறர் சொல்லச் சொல்லக் கடிதங்கள் எழுதுவது ஒரு மகிழ்வான பொழுதுபோக்காகக்கூட இருந்தது எனக்கு. கடிதங்களில் அவர்கள் பல்வேறு விஷயங்களை எழுதச் சொல்வார்கள். உதாரணமாக, இங்கு மாமரம் பூ பூத்துவிட்டது, மாடு கன்று போட்டுள்ளது, வரும்போது எடுத்துச் செல்வதற்குச் சுத்து முறுக்கு சுட்டுத் தருகிறேன், அவசியம் எல்லோரும் சித்ரா பௌர்ணமி திருவிழாவுக்கு வரவும் என்றெல்லாம் எழுதச் சொல்வார்கள். இது தவிர வீட்டிற்கு வருகின்ற கோயில் திருவிழாக்கள், நாடகங்கள் பற்றிய பத்திரிகைகளை எல்லாம் எடுத்து எடுத்துப் படிப்பேன். ஒரு புத்தகம் கிடைத்தால் போதும், அதை அவர்கள் திருப்பிக் கேட்கும் வரை கொடுக்க மாட்டேன். திரும்பத் திரும்பப் படித்துக்கொண்டே இருப்பேன். நாளிதழ்களோ இலக்கியப் புத்தகங்களோ கிடைக்காத காலம் அது என்பதால் பாடப் புத்தகங்களை நன்கு படிக்கத் தொடங்கினேன்.

என்னுடைய முதல் நாள் பள்ளி அனுபவம் பற்றி ஏற்கனவே ஒரு நேர்காணலில் சொல்லியுள்ளேன். ஒரு ஆசிரியர் என்னைப் பள்ளியில் சேர்க்கும்படி வீட்டிற்கு வந்து தொடர்ச்சியாக என் பெற்றோரை வற்புறுத்திக்கொண்டே இருந்ததால் அப்பா என்னைப் பள்ளியில் சேர்க்க அழைத்துச் சென்றார். பள்ளி பூட்டிக் கிடந்தது. அதனால், அப்பா அந்த ஆசிரியரைச் சத்தம் போட்டுத் திட்டத் தொடங்கினார். வரச் சொல்லிவிட்டு இப்படி பள்ளிக்கூடத்தைப் பூட்டி வைக்கலாமா என. அப்போது அருகில் இருந்த மற்றொருவர் சொன்னார், "ஐயா இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை. பள்ளிக்கூடம் திறக்க மாட்டார்கள்" என்று. அப்போதும் அப்பா ஓயவில்லை. "என்ன கிழமையா இருந்தால் என்ன? வரச் சொல்லிவிட்டுப் பள்ளியை மூடி வைக்கலாமா?" என நியாயம் பேசியதோடு என்னையும் அதட்டி வீட்டிற்குப் போகச் சொன்னார். போகும் வழியில் பெரியாச்சி, முனியன் கோயில் எல்லாம் வரும். அவையெல்லாம் துஷ்டமான தெய்வங்கள் என்றும் வெயில் நேரத்தில் அங்கெல்லாம் போகக்கூடாது என்றும் கூறக் கேட்டிருந்ததால் மிகவும் பயந்து வீட்டுக்குத் திரும்பி ஓடிவிட்டேன். வீட்டிற்குச் சென்றதும் அம்மா சொன்னார், "அவ்வளவுதான் உனக்குப் பள்ளிக்கூட ராசி இல்லை, இனிமேல் நீ பள்ளிக்கூடமே போக வேண்டாம்" என்று. மாறாக வாழ்க்கை எனக்குப் பள்ளிக்கூடத்திலேயே நாளில் அதிக நேரம் இருப்பது போல் அருமையான வாய்ப்பை வழங்கி இருப்பது மகிழ்ச்சியான முரணாகும்.

**ஆமாம்.. பள்ளிக்கூடம் பக்கம் எட்டிப் பார்க்கக் கூடாது என்று சொன்ன அதே வீட்டிலிருந்து ஆசிரியர் பயிற்சிக்குச் சென்று வேலையும் வாங்கி இருக்கிறீர்கள். இந்த முரண் வாழ்வை எப்படி பார்க்கிறீர்கள்?**

வீட்டினர் பள்ளிக்கூடம் போக வேண்டாம் என அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தாலும் பள்ளிச் செலவிற்கு ஏதாவது காசு கேட்கும்போதுதான் அதிகமாகத் திட்டுவார்கள். ஆனாலும் திட்டிவிட்டு மனசு கேட்காமல் காசும் கொடுத்துவிடுவார் அம்மா. எனவே அம்மாவின் உதவியால்தான் நான் படித்தேன் என்று சொல்ல வேண்டும். கூடவே விடுமுறை நாட்களில் செங்கல் ஜல்லி உடைக்க, நாற்று நட, களை பிடுங்கச் செல்வேன். கூடவே மாந்தோப்பு வைத்திருந்த ஒரு அம்மா எண்ணித் தரும் மாங்காய்களை மாலை பள்ளி விட்டு வந்ததும்



ஒரு கூடையில் சுமந்து போய் விற்று வந்து அவர்களிடம் விற்ற காசைக் கொடுத்தால் அந்த அம்மா எனக்கும் கொஞ்சம் கூலியாகக் காசு தருவார்கள். இதைப் போலவே முருங்கைக்காய் விற்கப் போவேன். சின்னச் சின்ன கட்டுகளாகக் கட்டி அதை ஒரு அன்னக்கூடையில் வைத்துச் சாயங்காலம் போய் விற்று வருவேன். அதற்கும் எனக்குக் கொஞ்சம் கூலி கிடைக்கும். அப்புறம் அம்மா அரவை மிஷினில் காசு கொடுத்து அரைக்கும் மாவை நானே அரைத்துவிட்டு அந்தக் காசையும் வாங்கிக்கொள்வேன். கோடை காலத்தில் வேப்பங்கொட்டை, புளியங்கொட்டை சேகரிப்பேன். அதை வாங்கிச் செல்வதற்காக சைக்கிளில் பெரிய கோணிப்பையுடன் வேப்பங்கொட்டை இருக்கா வேப்பங்கொட்டை எனக் கூவியபடி ஒருவர் வருவார். அவரிடம் விற்றுவிட்டு அந்தக் காசில் வளையல், மணி, ரிப்பன், நோட்டு, பேனா, பென்சில் எல்லாம் வாங்கிக்கொள்வேன். இதுபோல் எனது வயதுக்குத் தகுந்தாற்போன்ற வேலைகளை அவ்வப்போது செய்து எனக்கான தேவைகளை நானும் கொஞ்சம் கவனித்துக்கொண்டேன். அதனால்தான் தொடர்ந்து என்னால் படிக்க முடிந்தது.

**படிக்கும்போது மிகவும் நன்றாகப் படிக்கும் மாணவியா நீங்கள்?**

இல்லை. சுமாராகத்தான் படிப்பேன். படிப்பை விட பிற வேலைகள் செய்வது, வேடிக்கை பார்ப்பது, கதைகள் கேட்பது, விளையாடுவது போன்றவற்றில்தான் விருப்பம் அதிகமாக இருந்தது. ஆனாலும், எனக்கு வெயில் அறவே பிடிக்காது. பள்ளிக்கூடம் சென்றால் நிழலிலேயே உட்கார்ந்து இருக்கலாம் என்பதற்காகவே எல்லா நாளும் பள்ளிக்கு ஓடிவிடுவேன். நிறைய மதிப்பெண்கள் எல்லாம் எடுக்க மாட்டேன். மிகவும் மோசமாகவும் படிக்க மாட்டேன்.

ஓரளவு தேர்ச்சி பெறும் அளவு படிப்பேன். தேர்வின்போது படித்து எழுதுவதை விட நானாக யூகித்து நிறைய எழுதுவேன். எனவே, பள்ளியில் ஆகச் சிறந்த மதிப்பெண் பெறுகிற படிக்கின்ற மாணவி எல்லாம் இல்லை நான் எப்போதும்.

**சிறுவயதில் கிராமியப் பாடல்கள் எழுதும் ஆர்வம் உங்களுக்கு எப்படி வந்தது.. 13 வயதில் நீங்களாகவே பாடல்கள் எழுதத் தொடங்கி இருக்கிறீர்கள், அந்தப் பாடல்கள் நினைவில் உள்ளனவா?**



சிறுவயதிலேயே எழுதத் தொடங்கினேன் என்றாலும் அவை பாடல்களா கவிதைகளா என்பது பற்றி எல்லாம் எனக்குத் தெரியாது அப்போது. ஆனால் கிராமியப் பாடல்கள் நிறைய கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. குறிப்பாக நாற்று நடும் பெண்கள் அலுப்புத் தெரியாமல் இருப்பதற்காக நாற்று நடும்போதும் களை பிடுங்கும்போதும் பாடும் பாடல்கள். அந்தப் பாடல்கள் நல்ல சந்தமாக இருக்கும். நன்றாகப் பாடத் தெரிந்த ஒருவர் பாடுவார், அதை மற்றவர்கள் வாங்கிப் பாடுவார்கள். கேட்பதற்கு மிக இனிமையாக இருக்கும். அர்த்தச் செறிவோடும் இருக்கும்.

இப்படிப்பட்ட பாடல்களை அப்பா, அம்மாவிற்கு வயலுக்கு டீ, சாப்பாடு எடுத்துச் செல்லும்போதெல்லாம் வரப்பில் உட்கார்ந்து கேட்பேன். அப்போதெல்லாம் பெரும்பான்மையானோர் வீட்டில் வானொலி கூட இருக்காது. எனவே பொழுதுபோக்கு என்று எதுவும் தனியாக வீட்டில் இல்லாததால் பெண்கள் எல்லாரும் மாலை நேரங்களில் ஒன்றாகக் கூடிப் பேசிக்கொண்டிருப்பார்கள். இந்தப் பேச்சு சில நேரங்களில் சண்டையாகக் கூட முடியும். ஆனாலும் அவற்றையும் தாண்டிப் பல நல்ல விஷயங்களும் நடப்பதைப் பார்த்திருக்கிறேன். எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து பாடிக்கொண்டே இரவில் கும்மியடிப்பார்கள். இந்தக் கும்மிப் பாடல் வரிசை வரிசையாகப் பூச்சரம் தொடுப்பது போல் மாலை கோர்ப்பது போல் அழகாக ஒரே மாதிரியான இசையுடன் இருக்கும். இவை தவிர வீட்டில் அம்மா பாடும் தாலாட்டு, ஒப்பாரி பாடல்களைக் கேட்பேன். அது போல் நானும் எழுதிப் பார்க்கும் எண்ணம் தோன்றியது. இப்படித்தான் எழுதத் தொடங்கினேன். அப்படி எழுதிய பாடல்கள், கவிதைகள் இப்போது ஒன்றும் என் நினைவில் இல்லை. ஆனால் எதைப் பற்றி எழுதினேன் என்பது நினைவு இருக்கிறது. தூங்குமூஞ்சி மரத்தைப் பற்றி ஒரு பாட்டு எழுதினேன். குலதெய்வம் ஐயனாரைப் பற்றியும் முருகனைப்

பற்றியும் பாட்டு எழுதினேன். பின் மரங்கள், கொடிகள் என ஏதாவது தோன்றுவதைப் பற்றி எல்லாம் எழுதி வைத்திருந்தேன்.

எங்கள் வீடு பனை மரத்துக் கரையில் இருந்தது. வரிசை வரிசையாக நிறைய பனை மரங்கள். அவற்றிற்கிடையே ஒரு புங்கை மரமும் இருந்தது. நான் எழுதுவது படிப்பது என்றால் அந்தப் புங்கை மரத்தின் நிழலில் போய் உட்கார்ந்துவிடுவேன். வீட்டில் ஆடு, மாடு, கோழி, சிறிய திண்ணை, ஒரே ஒரு பெஞ்ச் எனப் படிப்பதற்கு எழுதுவதற்கான சூழல் இல்லாததால் அந்த மரத்தடியிலேதான் தேர்வின்போதெல்லாம்கூட உட்கார்ந்து படித்துக்கொண்டிருப்பேன் அப்போது.

**உங்கள் அக்கம் பக்கத்து உறவினர்கள் எந்த மாதிரியான கதைகளைக் கூறக் கேட்பீர்கள்.. அவர்களின் எந்தெந்தக் கதைகளை எல்லாம் உண்மை என நம்பியிருக்கிறீர்கள்.. அவைகளை எழுதி உள்ளீர்களா?**

பெரும்பாலும் பேய், பிசாசு, மந்திரம், தந்திரம், சாமி, திருடர்கள் கதைகளைத்தான் கேட்டிருக்கிறேன். அவற்றில் பேய்க் கதைகளை உண்மை என நம்பி மிகவும் பயந்துகொண்டிருப்பேன். பின்பு படிக்கத் தொடங்கிய பின்னர் மகாகவி சுப்பிரமணிய பாரதி, தந்தை பெரியார், காரல் மார்க்ஸ் போன்றவர்களே என் மனதில் இருந்த அச்சம் விலகக் காரணமானவர்கள் ஆவார்கள். அதிலும் குடுகுடுப்பைக்காரர் பற்றி நிறைய கதைகள் பேசிக்கொண்டே இருப்பார்கள். அவர்கள் பௌர்ணமி அன்று சுடுகாட்டிற்குத் தனியாகச் செல்வார்கள், மண்டையோடுகளை எடுத்து மந்திரிப்பார்கள் என்றெல்லாம் சொல்வார்கள். மண்டையோடுகள் கிடைக்காதபோது பிள்ளைகளைப் பிடித்துப் போய்விடுவார்கள் என்பதாகப் பேசிக்கொள்வார்கள். எனவே, குடுகுடுப்பைக்காரர் என்றால் மிகவும் பயந்து ஒதுங்கிவிடுவேன் நான்.

**கதைகள் கேட்பதைத் தாண்டி**




**உங்களுக்கென்று இருந்த பெரிய பொழுதுபோக்கு எது.. அப்படியான பொழுதுபோக்கிற்கு என்னவெல்லாம் செய்வீர்கள்?**

கதைகள் கேட்பதைத் தாண்டிப் பிடித்தமான பொழுதுபோக்கு என்றால் நீர்நிலைகளில் அதிக நேரம் நீச்சல் அடித்து விளையாடுவது, ஆடு மாடுகள் மேய்ப்பவர்களோடு உடன் செல்வது, வயலுக்கு எரு ஏற்றிச் செல்லும் வண்டியின் பின்னால் சென்று அவ்வண்டி திரும்பி வரும்போது அதில் ஏறி வருவது, கல்லாங்காய் விளையாடுவது, ஓடிப் பிடித்து விளையாடுவது, எப்போதாவது தெருவில் உள்ள மின்கம்பத்து ஒளியில் உட்கார்ந்து வாய்ப்பாடு படிப்பது, களிமண்

தேடி மண்பாண்டங்கள் செய்து சோறாக்கிக் குழம்பாக்கி விளையாடுவது, இப்படித்தான்...

**குடும்பம் பணிச்சுமை என்று தொடர்ச்சியான நேர நெருக்கடி இருக்கும் சூழலில் உங்களை எழுதத் தூண்டிக்கொண்டே இருப்பது எது?**

பல்வேறு பணி நெருக்கடி வேலை நெருக்கடிகளுக்கு இடையே என்னை எழுதத் தூண்டுவது என்றால் நிச்சயமாக எனது உள்ளுணர்வு என்றுதான் சொல்வேன். 2016ஆம் ஆண்டு பெரும் சாலை விபத்தில் சிக்கிக் காலில் இரண்டு எலும்புகள் முறிவு. அப்போது மருத்துவமனையில் இருந்தபோது எனக்கு அடிக்கடி வந்த நினைவுகள்.. இன்னும் இவற்றையெல்லாம் எழுதாமல் இருக்கிறோமே எழுத முடியாமல் போய்விடுமோ என்பதுதான். அதுவே பெரிய கவலையாக இருந்தது.

முன்பு எப்போதையும் விட இப்போதுதான் நான் கடினமாக உழைப்பதாக உணர்கிறேன். ஒவ்வொரு நாளும் அதிகாலை 3:30 மணிக்கு விழித்துவிடுகிறேன். அப்போதிலிருந்து வேலைகளைச் செய்யத் தொடங்கினால்தான் அன்றைய வேலையை முழுமையாக முடிக்க முடிகிறது. ஆனாலும் இவ்வளவு முன்பு எழுந்தும் எழுத முடியவில்லையே என்ற வருத்தமே ஒவ்வொரு நாளும் மனதில் வந்து போகும். இதை ஒரு ஏக்கம் தாகம் என்று கூடச் சொல்லலாம். இதனால் எல்லோரையும் போல் நாமும் இருந்திருந்தால் கொஞ்சம் நிம்மதியாக இருந்திருக்கலாமோ.. இவ்வளவு புத்தகங்களைக் கட்டிக்கொண்டு எழுத வேண்டும் என்ற மனதை வேறு வைத்துக்கொண்டு அவஸ்தைப்படுகிறோமே என்ற நினைவும்கூட அடிக்கடி வரும் எனக்கு.

சாதாரணமாக ரசம் வைப்பது என்றால் கூட அதற்கும் ஒரு தயாரிப்பு தேவையாகத்தானே இருக்கிறது. எல்லாமே பிள்ளைகளுக்காகத்தான் செய்கிறேன் என்று இல்லை, எனக்காகவும் சமைக்கிறேன், வேலைக்குச் செல்கிறேன். எனவே எதனைச் செய்தாலும் பிடித்தே செய்கிறேன். பிடிக்காதபோது நிறுத்திக்கொள்வேன். ஆசிரியராக இருந்தவரை நிறைய எழுதினேன். தலைமை ஆசிரியரான பின்பு, எழுத முடிவதில்லை. வீட்டில் வந்தும் பள்ளிப் பணிகளே தொடர்ந்து செய்ய வேண்டி இருக்கிறது. இந்தப் பணியை முடித்துவிட்டோம் என நிமிருவதற்குள் அடுத்த மூன்று பணிகள் தலை மேல் விழுந்துவிடும். எனவே, அவற்றிலிருந்து விடுபட்டு எழுதுவது என்பது இயலாமல் போய்விடுகிறது.

புதிதாகக் கவிதை எழுதும் சிலர் தங்களின் கவிதைத் தொகுப்புக்கு அணிந்துரை எழுதிக் கேட்பதுண்டு. பொதுவாகவே அணிந்துரை எழுதுவது எனக்குப் பிடிக்காது. அதனால், பெரும்பாலும் தவிர்த்துவிடுகிறேன். இதனால் மன வருத்தங்கள் கூட வருவதுண்டு. ஆனாலும், இப்போதும் விழா மலர்கள், ஆண்டு மலர்கள், சிறப்பு மலர்கள் எனச் சிலர் என்னை நினைத்து எழுதிக் கேட்கும்போது தட்டாமல் எழுதிக் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன். ஒரு கட்டத்தில் முழுமையாக எழுத முடியும், எழுதுவேன் என்ற நம்பிக்கையோடு இருக்கிறேன்.

**தனிமனித அனுபவமாக உள்ளே ஒடுங்கியிருந்த மனிதர்களின் வாழ்வைக் கவிதை வெளிக்குள் கொண்டு வந்து நிறுத்தி அசலான நிலக் காட்சிகள், மனிதர்கள், அவர்களின் சுக துக்கங்கள் எனக் கவிதைகளைப் பதிவு செய்கிறீர்கள். படைப்பு என்பது என்னவாக இருக்க வேண்டும்?**

அசலான நிலக் காட்சிகள் என வலிந்து எழுதுவதில்லை நான். நிகழ்வின் இடத்தைப் படைப்பு தேர்வு செய்யும்போது இயல்பாகவே அது நிகழ்கிறது. படைப்பு என்பது உண்மையாகவும் யதார்த்தமாகவும் இருக்க வேண்டும். ஒருவரின் பேச்சு நடை, உடை, பாவனைகள் இயல்பாக இல்லாதபோது அவருடைய எழுத்து மட்டும் எப்படி இயல்பாக இருந்துவிட முடியும்..

தன்னை வானத்தில் இருக்கும் சூரியனாகவும் சந்திரனாகவும் நட்சத்திரமாகவும் கருதிக்கொண்டு, சக மனிதர்களில் தானும் ஒருவர் என்பதை உணராதவர்களால் உன்னதமான படைப்புகளை அவர்கள் எவ்வளவு முயற்சித்தாலும் ஒருபோதும் தர இயலாது. படைப்பாளியின் படைப்புக்குத் தேவை அப்பழுக்கற்ற உண்மைகளே தவிர இழிவான தந்திரங்களல்ல. சமீபமாக, சென்னை இலக்கியத் திருவிழாவில் பேசும்போது கூட நான் இதைப் பற்றிப் பேசினேன். எது நல்ல இலக்கியம் என்றால் படித்தவுடன் உங்களால் மறக்கவே முடியாத கதையாக கவிதையாக எது இருக்கிறதோ அதுவே ஆகச்சிறந்த இலக்கியம் ஆகும். ஒரு உன்னதப் படைப்பானது அதை பற்றி அதுவே எழுத வைக்கும், பேச வைக்கும், நினைக்க வைக்கும். அதற்கு அந்தப் படைப்பில் உண்மையும் எதார்த்தமும் இருக்க வேண்டும்.

இலக்கியச் சுவைக்காக மேம்படுத்திச் சொல்வதற்காக அழகியலுக்காக நாம் கொஞ்சம் எழுதலாம். ஆனால் அதையே படைப்பு எனச் சொல்லிவிட முடியாது. படைப்பிற்கு இவை சிறிது தேவைப்படலாம் அவ்வளவே. படைப்பில் உண்மையும் எதார்த்தமும், ஒரு இலையின் நடுவே நரம்பு இருப்பது போல், ஒரு தென்னங்கீற்றின் ஓலையில் நடுவே ஈர்க்கு இருப்பது போல் அதைத் தாங்கிப் பிடிப்பதாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட படைப்புகளைத்தான் உலகம் என்றென்றும் கொண்டாடி மகிழ்ந்துகொண்டிருக்கிறது.

**படைப்பு தனிமனித வாழ்வில் ஒரு வாசகனை எப்படி செதுக்குகிறது?**

நல்ல நூல்களைத் தொடர்ந்து படிக்கும் வாசகருடைய மனம் உறுதியாகப் பக்குவப்பட்ட மனதாகிறது என்பதை அறுதியிட்டுச் சொல்லலாம். ஒருவர் மனதில் நல்லவிதமான மாற்றங்களைப் புத்தகங்கள் ஏற்படுத்துகின்றன என்பதில் மாறுபட்ட கருத்து இருக்கவே முடியாது. இப்பொழுது எல்லாம் நிறைய புத்தகங்கள் வந்தபடி உள்ளன. இது





நல்ல விஷயம்தான் என்றாலும் அத்தனையும் படிப்பதற்கு ஒரு ஆயுள் போதாது. எனவே தேர்வு செய்து படிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. நல்ல நூல்களைப் படிப்பவர்களால் அறமற்ற செயல்களைச் செய்ய முடியாது. அப்படிச் செய்ய நேரும்போது அதனை அவர்கள் மனமே தடை செய்து உதவும். இதையே வாசிப்பின் உச்ச பயனாக கருதுகிறேன் நான். வாசிப்பால் ஒருவர் மனதளவில் நல் மாற்றங்களைப் பெறுகிறார் என்றால் அது போதுமே, அதைவிடச் சிறந்த பயன் வேறு என்ன இருந்துவிட முடியும். நல்ல நூல்களைப் படித்தவர்கள் சக மனிதர்களுக்கு மட்டுமல்ல, பிற உயிர்களுக்குக் கூட துன்பம் நினைக்க மாட்டார்கள். இதுவே வாசிப்பின் ஆகச் சிறந்த பயனாக கருதுகிறேன் நான்.

**படைப்பில் அரசியல் இருக்கக் கூடாது, ஒரு படைப்பாளன் அரசியல் அற்று நடுநிலையாக இருக்க வேண்டும்.. என்ற வார்த்தைகளை ஏற்கிறீர்களா?**

எல்லாவற்றிலும் அரசியல் இருக்கிறது. படைப்பில் மட்டும் எப்படி இல்லாமல் போய்விடும்? நட்பில் உறவினர்கள் இடையே வேலைத்தளத்தில் சமூகத்தில் ஊரில் தெருவில் வீட்டில் எல்லாவற்றிலும் அரசியல் இருக்கிறது. நிச்சயமாக ஒவ்வொரு இலக்கியப் படைப்பிலும் மறைமுகமாகவோ வெளிப்படையாகவோ ஒரு அரசியல் இருக்கத்தான் செய்கிறது. இதை உணராமல் யாரும் இருக்க முடியாது. அவற்றில் உள்ள நுட்ப அரசியல் வேண்டுமென்றால் சிலருக்குப் புரியாமல் இருக்கலாம் அல்லது கொஞ்சம் தாமதமாகப் புரியலாம். ஆனால், அரசியல் இல்லாமல் வாழ்வே இல்லை என்கிறபோது இலக்கியம் மட்டும் எப்படி அதில் விதிவிலக்காக இருக்க முடியும்..

**பெண் எழுத்துக்கள் 2000க்கு முன்பும் பின்பும்.. எப்படி பார்க்கிறீர்கள்?**

பெண் எழுத்தானது 2000க்குப் பிறகு மிகவும் வலிமை அடைந்திருக்கிறது. பாலினப் பாகுபாடு குறித்தான கேள்விகள் பெண்களின் படைப்புகளில் முன்வைக்கப்பட்டு அவை நுட்பமான மாறுதல்களை நிகழ்த்திக்கொண்டுள்ளன. பெண்கள் தங்கள் மீது புனையப்பட்டுள்ள பொய்களை அதீத கற்பனைகளைத் தகர்க்கும் கடமை இருப்பதை நன்கு உணர்ந்து எழுதிவருகிறார்கள். இவை மிகுந்த வரவேற்பையும் பெற்றுவருகின்றன. அவசியமான தேவையான உளவியல்ரீதியான மாற்றங்களைப் பெண்களின் எழுத்து ஏற்படுத்திக்கொண்டிருப்பதுடன் எதிர்க் குரலாகவும் பெண்கள் எழுத்து இருக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து எடுத்த எடுப்பிலேயே பெண்கள் அவ்வாறே தங்கள் எழுத்தைத் தொடங்குவதையும் கருத்தியல்ரீதியான புரிதலை ஏற்படுத்திக்கொண்டிருப்பதையும் கண்கூடாகவே பார்க்க முடிகிறது.

■

**இனி** என்ன இருக்கிறது
வெம்பி நகர்கையிலெல்லாம்
ஒற்றை அழைப்பில்
தடம் அழித்து வழி மறக்க வைக்கிறாய்
உனது விருப்பங்களை
கொத்தாய் அடர் சிவப்பும்
தளிர்ப் பச்சையும்
மெல்லிதழ்களின் மயக்கு மணமுமாக
அழகிய காகிதம் சுற்றி
மண்டியிட்டு நீட்டுகிறாய்

வானையும் கடலையும்
இணைக்கின்ற தொடுபுள்ளியை
அகஸ்மாத்தாகக் கண்டறிந்ததில்
நீலம் பாரித்து
செவிகளில் ஓங்கரிப்பும்
விரல் நுனிகளால் நெருடி
அளைந்து புறமிட்ட
மணற் பரல்களின் எண்ணிக்கையுமாய்
திசுக்களெங்கும் நிறைந்து கிடக்க
சர்வமும் நீயாகிக் கிடப்பவளுக்குள்
ஆதிப்ரியங்கள் ஆர்ப்பரிப்படங்கி
தொட்டி நீரானதை உணர்வாயில்லை


ஒதுங்கிய கிளிஞ்சல்கள்
பின்னந் தோலழுற்ற
உள்ளூறையும் சுயநலம்
மேல் பரவி உறுத்த
உதிர்ந்து கிடக்கிற மெல்லிதழ்கள்
போர்வையாக
தன்னைத் தின்னக் கொடுப்பவளின்
கருணையை
சாட்டின் ரிப்பன்களால் மட்டுமே
பிணைத்திருப்பதையும்

கடல் கடக்க நினைத்து
கட்டுமரங்களைக் கட்டி
வெற்றாய் அனுப்பி வைக்கிறவளை
அலைகளும் மணல் துகள்களுமே
முற்றுமுணராத வியப்பிலிருக்க
எதைச் செய்தால்
யுகங்கள் உருண்டாலும்
கரையோரம்
காத்திருக்க வைக்க
இயலுமென்பதையும்

கேள்விகளாக்கி உன் முன்
நிற்கையிலெல்லாம்
'வழி கண்டுபிடி'
(Find a path)
என மறைவதையும்
மிகத் தேர்ந்த வன்மத்துடன்
மிகத் துல்லியமான திட்டமிடுதலுமாகத்
தொடர்வதில்
அப்படியென்ன மகிழ்வுனக்கு?

**– ரத்னாவெங்கட்**

ஆங்கிலத்தில்: எடித் வார்ட்டன்
தமிழில்: கார்குழலி




# காட்சி

திருமதி மான்ஸ்டேவின் ஜன்னலின் வழியே தெரிந்த காட்சி குறிப்பிடத்தக்கதாக இல்லை என்றாலும் அவரைப் பொறுத்தவரையில் அழகானதாகவும் உற்சாகமூட்டுவதாகவும் இருந்தது. திருமதி மான்ஸ்டே நியூயார்க் நகரிலிருந்த தங்குமிடமொன்றின் மூன்றாவது மாடியில் பின்புற அறையொன்றில் தங்கியிருந்தார். தெருவில் குப்பை கொட்டும் பீப்பாய்கள் நிறைந்திருக்கும். நடைபாதை கற்களுக்கிடையே இருந்த இடைவெளி நடப்பவர்களைத் தடுக்கிவிழச்செய்யும். பெரிய மொத்தவிலைக்கடையொன்றில் எழுத்தராகப் பணிபுரிந்த கணவர் இறந்த பிறகு தனியாக வசித்துவந்தார் திருமதி மான்ஸ்டே. ஒரே மகள் திருமணம் செய்துகொண்டு மேற்குக் கரையில் கலிஃபோர்னியா மாகாணத்தில் வாழ்ந்துவந்தாள். நியூயார்க்கில் வசிக்கும் அம்மாவைப் பார்க்கவரும் அளவிற்கு வசதியில்லை.

மகள் இருக்கும் இடத்துக்கே திருமதி மான்ஸ்டேவும் போயிருக்கலாம்தான், ஆனால் இருவரும் பல வருடங்களாகப் பிரிந்திருந்ததால் ஒருவருக்கு மற்றொருவரின் அணுக்கம் தேவைப்படவில்லை. கடமைக்காக அவ்வப்போது எழுதிக்கொள்ளும் கடிதங்களைத்தவிர இருவருக்குமிடையே வேறு எந்தத் தொடர்பும் இருக்கவில்லை. மகள் விட்டேற்றியாக எழுதினாள் என்றால் திருமதி மான்ஸ்டே கீல்வாதத்தால் விறைத்துப்போன வலதுகையால் சிரமப்பட்டு எழுதினார்.

திருமதி மான்ஸ்டேவுக்கு மகளின் அருகே இருக்கவேண்டும் என்ற வலுவான விருப்பம் இருந்திருந்தாலும், நாளுக்குநாள் அதிகரித்துவந்த தள்ளாமையினால் தன்னுடைய அறைக்கும் தெருவுக்கும் இடையே இருந்த மூன்று படிக்கட்டுகளை ஏறி இறங்குவதே அச்சுறுத்தும் விஷயமாக இருந்தது. அத்தனை நீண்ட பயணத்தின் தொடக்கமாக, அந்தப் படிக்கட்டை ஏறி இறங்குவதற்குள்ளாகவே

இடைநிறுத்தம் தேவைப்பட்டிருக்கும். அதனால் இந்தக் காரணங்களில் எதையும் சுட்டிக்காட்டாமலே நியூயார்க்கில் தனிமையில் வாழ்வதை இயல்பான விஷயமாக ஏற்றுக்கொண்டாரோ என்னவோ.

உண்மையில் அவர் தனிமையில் இருக்கவில்லை. அவ்வப்போது அவர் அறைக்குச் சில நண்பர்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள்; ஆனால் வருடங்கள் செல்லச் செல்ல அவர்களின் வருகை அரிதாகிப்போனது. திருமதி மான்ஸ்டே மற்றவர்களோடு அதிகம் நெருங்கிப் பழகும் இயல்புடையவரல்ல. கணவர் உயிரோடிருந்தவரையில் அவரின் தோழமையே போதுமானதாக இருந்தது. கிராமத்தில் வசிக்கவேண்டும், தோட்டம் வைத்துக் கோழி வளர்க்கவேண்டும் என்ற ஆசை பல ஆண்டுகளாக இருந்தது. ஆனால் வயதாக ஆக, அந்த ஏக்கமும் மறைந்துபோனது. யாரோடும் அதிகம் பேசாத அவரின் மனதில் தாவரங்கள், விலங்குகள் ஆகியவற்றின் மீது ஒருவிதமான கருணை சுரந்தது. ஒருவேளை, இந்த மெல்லியல்பினால்தான் ஜன்னல் வழியே கண்ட காட்சியின்மீது அளவுக்கதிகமான பற்று ஏற்பட்டதோ என்னவோ. மிகுந்த நன்னம்பிக்கை கொண்டவர்களால்கூட அந்தக் காட்சியில் பாராட்டத்தக்க விஷயம் எதையும் கண்டுபிடிக்க முடிந்திருக்காது.

திருமதி மான்ஸ்டேவின் அறையில் சுவரிலிருந்து வெளியே துருத்திக்கொண்டிருக்கும் ஜன்னலொன்று இருந்தது. அங்கிருந்தபடியே பச்சைப் படர்கொடியையும் இன்னதென்று தெரியாத செடிகளையும் என எல்லாவற்றையும் தெளிவாகப் பார்க்கமுடிந்தது. அவர் தங்கியிருந்த வீட்டின் பின்கட்டு முழுவதையும் பார்க்கமுடியவில்லை. ஆனாலும் அவரது ஜன்னலுக்கு நேர் கீழே இருந்த அய்லாந்தஸ் மரத்தின் மேற்கிளைகளையும் டைசெண்ட்ரா செடியின் வளைந்த தண்டிலிருந்து தொங்கும் இளஞ்சிவப்பு இதய வடிவ மலர்க்கொத்துகளையும் வருடம் தவறாமல் கண்டுகளிப்பார்.

தூரத்தில் தெரிந்த மற்ற தோட்டங்கள் இன்னும் அதிக ஆர்வமூட்டுவதாக இருந்தன. பெரும்பாலும் தங்கும் விடுதிகளுடன் இணைந்திருந்த காரணத்தால் அவை நேர்த்தியாகப் பராமரிக்கப்படவில்லை. வாரத்தின் சில நாட்கள் பலவிதமான ஆடைகளும் நைந்துபோன மேசைத் துணிகளும் காற்றில் படபடப்பதைப் பார்க்கலாம். இருந்தபோதிலும் கண்ணுக்குப் புலப்படும் தூரம்வரையில் காணக்கிடைத்த காட்சிகளை மிகவும் ரசித்தார் திருமதி மான்ஸ்டே. சில முற்றங்கள் கல்லும் கரடுமாக இருந்தன. நடைபாதை விரிசல்களில் புல் முளைத்துக்கிடக்கும். வசந்தகாலத்தில் நிழல் தருவதற்குத் துணி காயும் கொடியைத் தவிர வேறு அடர்த்தியான மரம் இருக்காது. இதுபோன்ற முற்றங்களைத் திருமதி மான்ஸ்டே ஏற்றுக்கொள்வதில்லை, பசுமையான முற்றங்களைத்தான் விரும்பினார். அவற்றின் நேர்த்தியற்ற நிலையையும் பார்த்துப் பழகிவிட்டார். கண்ணுக்கு முன்னால் இருக்கும் விஷயத்தின் இனிமையான பக்கத்தைப் பார்த்து மகிழ்ச்சிகொள்ளும் இயல்பை உடையவர் என்பதால் உடைந்த பீப்பாய்கள், வெற்று பாட்டில்கள், குப்பையான பாதைகள் என இவை எதுவும் அவருக்கு எரிச்சலூட்டவில்லை.

பக்கத்து முற்றத்தில் ஏப்ரல் மாதத்தின் மெல்லிய நீல நிறப் பின்னணியில் மக்னோலியா மரத்தின் அடர் வெள்ளைப் பூக்கள் மலர்ந்ததல்லவா? சிறிது தூரத்தில் இருக்கும் வேலியொன்றைத் தாண்டி ஒவ்வொரு மே மாதமும் விஸ்டாரியாவின் இளஞ்சிவப்பு மலர்கள் அலைகளின் பொங்கும் நுரையைப்போலப் பூத்துக் குலுங்கின. இன்னும் சற்று தொலைவில், ஹார்ஸ் செஸ்ட்நட் மரமொன்றின் மஞ்சளும் இளஞ்சிவப்பு நிறமும் கலந்த பூங்கொத்துகள் பச்சை இலைகளுக்குமேலே உயர்ந்து நின்றன. நேரெதிரே இருந்த முற்றத்தில் ஜூன் மாதத்தில் யாருமே கண்டுகொள்ளாத சிரிங்கா மலர்கள் தன்னுடைய வளர்ச்சிக்கு எத்தனை தடையிருந்தாலும் அதையும் மீறி இனிமையான வாசனையுடைய மலர்களோடு பூத்துக்குலுங்கின.

திருமதி மான்ஸ்டே கண்ட காட்சியில் இயற்கை முதன்மையான இடத்தைப் பிடித்திருந்தது என்றாலும், ஒவ்வொரு



வீட்டின் தனித்தன்மையும் அவற்றில் வசிக்கும் மனிதர்களின் குணாதிசயமும் அவருக்கு ஆர்வமூட்டின. எதிரில் வசிக்கும் மருத்துவரின் ஜன்னலில் சமீபத்தில் தொங்கவிடப்பட்ட அடர்மஞ்சள் நிறத் திரைச்சீலைகள் அவருக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை. ஆனால் சற்றுத் தொலைவில் இருக்கும் ஒரு வீட்டுக்குப் புதிய வண்ணம் பூசப்படுவதைப் பார்த்து மகிழ்ச்சியில் ஒளிர்ந்தார்.

பின் ஜன்னல்களின் வழியே வீட்டின் எஜமானர்களைப் பார்க்கமுடிந்ததில்லை, ஆனால் வீட்டுப் பணியாளர்களைக் காணமுடிந்தது. பெரும்பாலும் உரத்த குரலில் பேசுவார்கள், அழுக்குப்பிடித்துக் காணப்படுவார்கள். அவர்களின் பேச்சையும் நடவடிக்கையையும் அறவே வெறுத்தார். ஆனால் புதிதாக வர்ணம் பூசப்பட்ட வீட்டின் சமையல்காரப் பெண் அமைதியானவள், இரவு நேரத்தில் தெருப்பூனைகளுக்கு ரகசியமாக உணவளிப்பாள். அவளுடைய எஜமானி எப்போதும் அவளை ஏதேனும் சொல்லிக் கொடுமைப்படுத்துவாள். அவள்மீது திருமதி மான்ஸ்டே மிகுந்த இரக்கம்கொள்வார்.

ஒரு சமயம் ஒரு வீட்டுப் பணிப்பெண் அவளது பராமரிப்பில் விடப்பட்டிருந்த கிளிக்கு இரண்டு நாட்கள் வரையில் உணவளிக்க மறந்துவிட்டதைக் கண்டு மனம் பதைத்துப்போனார். மூன்றாம் நாள், கீல் வாதத்தால் பாதிக்கப்பட்ட கையினால் “அம்மையீர், இத்தோடு மூன்று நாட்களாக உங்கள் கிளிக்கு உணவளிக்கப்படவில்லை” எனக் கடிதமொன்றை எழுதத் தொடங்கியபோது அந்தப் பணிப்பெண் விதைகள் நிறைந்த கோப்பையோடு வருவதை ஜன்னல் வழியே பார்த்தார்.

ஆனால் திருமதி மான்ஸ்டே ஆழ்சிந்தனைவயப்பட்டிருக்கையில் தூரத்தில் தெரியும் முற்றங்களே அதிக மகிழ்ச்சியை அளித்தன. அந்தி வேளையில், தூரத்தில் தெரிந்த பழுப்பு நிறக் கற்கோபுரம் உருகியோடி மேற்கு வானின் மஞ்சள் நிறத்தோடு கலப்பதைப் பார்க்கையில் மனக்கண்ணில் மங்கலான கனவுக்காட்சிகளாக மாறிவிட்டிருக்கும் பல ஆண்டுகளுக்கு முன்பு மேற்கொண்ட ஐரோப்பியப் பயணம் குறித்த நினைவுகள் அலைமோதும்.

ஒருவேளை மனதளவில் திருமதி மான்ஸ்டே ஓர் ஓவியக் கலைஞராக இருக்கலாம்; எல்லா நிகழ்வுகளிலும் சராசரிக் கண்கள் கவனிக்காத பல வண்ண மாற்றங்களை அவளால் பார்க்கமுடிந்தது. வசந்த காலத்தின் தொடக்கத்தில் தோன்றும் பச்சை நிறம் அவளுக்குப் பிடித்தது. பனி பொழியும் நாளொன்றின் முடிவில் கந்தக நிறமாக இருக்கும் வானத்தின் பின்னணியில் தெரியும் மரக்கிளைகளின் கருமை நிறத்தையும் ரசித்தாள். மார்ச் மாத வெயிலில் பனி கரைந்தோடுகையில் வெண்ணிறத் தாளில் ஊறும் மைத்துளிகளைப்போலத் திட்டுத் திட்டாக வெளித்தெரியும் நிலத்தைப் பிடித்தது.

பனிக்காலம் முடிந்த பிறகு இலைகளில்லாமல் பனி ஈரத்தில் உப்பிக்கிடக்கும் மரக்கிளைகளும் அழகாக இருந்தன. தொலைதூரத்தில் தொழிற்சாலையில் இருக்கும் புகைப்போக்கி வழியாக வெளியேறும் புகையைக்கூட ஆர்வத்துடன் பார்த்தார். தொழிற்சாலையை மூடியதும் புகை மறைந்தபோது அவள் பார்க்கும் நிலப்பரப்பின் முக்கியமான அங்கமொன்று தொலைந்துபோனதுபோல உணர்ந்தாள்.

ஜன்னல் அருகே கழித்த நீண்ட பொழுதுகளில் திருமதி மான்ஸ்டே ஒன்றும் சும்மா இருக்கவில்லை. சிறிது நேரம் படித்தார், எண்ணற்ற காலுறைகளைப் பின்னினார்; ஆனால் தனிமையான தீவைக் கடலலைகள் உரசி உரசி வடிவமைப்பதுபோல அவர் கண்ட காட்சி அவரது வாழ்க்கையை வடிவமைத்தது. அரிதாக விருந்தினர்கள் வந்தபொழுது எதிரே இருந்த ஜன்னல்களைக் கழுவும் காட்சி குறித்த சிந்தனை, அல்லது பக்கத்து மலர் படுகையில் இருந்த பச்சைப் புள்ளிகள் ஹயாசிந்த் மொட்டுக்களாக மாறுமா மாறாதா என்ற ஆய்வு ஆகியவற்றிலிருந்து விடுவித்துக்கொண்டு விருந்தினரின் முன்பின் அறிமுகமற்ற பேரக்குழந்தைகளைப் பற்றிய கதைகளைச் சுவாரசியத்தோடு கேட்பதுபோல பாவனைசெய்வது கடினமாக இருந்தது. முற்றத்தில் குடியிருக்கும் ஹயாசிந்த் மலர்கள்,

மாக்னோலியா மரங்கள், பச்சைக் கிளி, பூனைகளுக்கு உணவிடும் பணிப்பெண், அடர்மஞ்சள் வண்ணத் திரைகளுக்குப் பின்னே இரவு வெகு நேரம் வரையில் படிக்கும் மருத்துவர் ஆகியோரே திருமதி மான்ஸ்டேவின் உண்மையான நண்பர்கள். சூரியன் மறைகையில் வானில் மிதக்கும் தேவாலயத்தின் கோபுரமே அவர் தன்னுடைய மென்மையான சிந்தனைகளை மனதாரப் பகிர்ந்துகொள்ளும் நம்பிக்கைக்குரிய துணை.

அந்த ஏப்ரல் நாளன்று தன்னுடைய வழக்கமான இடத்தில் அமர்ந்திருந்தார். கைப்பின்னல் வேலையை ஒதுக்கி வைத்துவிட்டு, நீல வானத்தில் பொட்டுப் பொட்டாகத் தோன்றிய வட்ட வடிவ மேகங்களை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார். கதவைத் தட்டிவிட்டு வீட்டின் உரிமையாளப் பெண்மணி உள்ளே நுழையும் ஓசை கேட்டது. திருமதி மான்ஸ்டே வீட்டு உரிமையாளரோடு பெரிய பிரியமில்லை என்றாலும் அவரின் வருகையின்போது தன்னுடைய கௌரவத்தைத் தக்கவைத்துக்கொள்ளும் வகையில் நடந்துகொண்டார். இருப்பினும், இன்று என்னவோ நீல வானத்திலிருந்தும் மலர்ந்துகொண்டிருக்கும் மாக்னோலியாவிலிருந்தும் கவனத்தைத் திருப்பி திருமதி சாம்ப்சனின் உணர்ச்சியை வெளிக்காட்டாத முகத்தைப் பார்ப்பதற்கு வழக்கத்தை விடவும் அதிக முயற்சி எடுக்கவேண்டியிருப்பதை உணர்ந்தார் திருமதி மான்ஸ்டே.

“இந்த ஆண்டு வழக்கத்தை விட முன்னதாகவே மாக்னோலியா மலர்ந்துவிட்டது, திருமதி சாம்ப்சன்,” என்று சொன்னார். தனிப்பட்ட ஆர்வம் குறித்த விஷயங்களைப் பற்றி மிக அரிதாகவே பேசுவார். இன்று ஏதோ அபூர்வமான உந்துதலில் அப்படிப் பேசிவிட்டார். முதலாவதாக, இது அவருடைய விருந்தினர்களுக்குப் பிரியமாக இருப்பதற்குச் சாத்தியமில்லை. கூடவே, அதுகுறித்துப் பேச விரும்பினாலும் தன்னுடைய எண்ணங்களை வார்த்தையில் வடிக்கும் ஆற்றல் அவருக்கு இல்லை.

“என்னது, திருமதி மான்ஸ்டே?” என்றபடியே அவர் என்ன சொல்லவருகிறார் என்பதைப் புரிந்துகொள்வதற்காக அறையைப் பார்வையால் துழாவினார் வீட்டு உரிமையாளர்.

“பக்கத்தில் திருமதி பிளாக்கின் தோட்டத்து மாக்னோலியா,” என்று மீண்டும் சொன்னார் திருமதி மான்ஸ்டே.

“அட அப்படியா? அங்கே மாக்னோலியா இருப்பதே எனக்குத் தெரியாது,” என்று விட்டேற்றியாகச் சொன்னார் திருமதி சாம்ப்சன். திருமதி மான்ஸ்டே அவரை உற்றுப் பார்த்தார். பக்கத்துத் தோட்டத்தில் ஒரு மாக்னோலியா இருப்பதுகூட அவளுக்குத் தெரியாதாமே!

“திருமதி பிளாக் பற்றிச் சொன்னதும் நினைவுக்கு வந்தது, கட்டடத்தை விரிவுபடுத்தும் பணி அடுத்த வாரம் முதல் தொடங்கப்போகிறது,” என்றார் திருமதி சாம்ப்சன்.

இந்தத் தடவை “என்னது?” என்று கேட்பது திருமதி மான்ஸ்டேவின் முறையானது.

“விரிவாக்கம்,” தான் கண்டுகொள்ளாத மாக்னோலியாவின் திசையில் தலையை ஆட்டியபடி சொன்னார் திருமதி சாம்ப்சன். “திருமதி பிளாக் தன் வீட்டை விரிவாக்கம் செய்யப்போகிறார் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? ஆமாம். வீட்டின் பின்புறத்தில் இருந்து தொடங்கி தோட்டத்தின் கடைசி வரையில் கட்டப்போகிறார். இப்போது இருக்கும் இந்தக் கஷ்ட காலத்தில் இந்த விரிவாக்கத்துக்கான பணம் அவரிடமிருக்கிறதா என்பது தெரியவில்லை. ஆனால் எப்போதுமே கட்டடம் கட்டவேண்டும் என்பதில் பைத்தியமாக இருந்தார். பதினேழாவது தெருவில் ஒரு தங்கும் விடுதியை வைத்திருந்தார். அங்கே வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் வளைவான ஜன்னல்களையும் வேறு சிலவற்றையும் மாற்றி அமைப்பதில் காசைத் தொலைத்தார். அத்தோடு இதுபோன்ற வேலைகளை நிறுத்திவிடுவார் என்று எண்ணியிருந்தேன். ஆனால் இது குடிப்பழக்கம் போன்ற ஒரு நோய் என்று நினைக்கிறேன். எப்படியோ, திங்கட்கிழமை முதல் கட்டட வேலை தொடங்கப்போகிறது.”

திருமதி மான்ஸ்டேவின் முகம்

வெளிறிப்போனது. எப்போதுமே நிறுத்தி நிதானமாகப் பேசுவார் என்பதால் இடையில் சிறிது நேரம் எதுவும் பேசாமல் இருந்ததை வீட்டு உரிமையாளர் பொருட்படுத்தவில்லை. “விரிவாக்கம் செய்யப்படும் கட்டடத்தின் உயரம் என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா?” என்று கேட்டார் திருமதி மான்ஸ்டே.

“மொத்த விஷயத்திலும் முட்டாள்தனமானது அதுதான். பிரதான கட்டிடத்தின் கூரைவரையில் கட்ட முடிவு செய்துள்ளனர். எங்கேயாவது இப்படிச் செய்வார்களா?”

திருமதி மான்ஸ்டே மீண்டும் எதுவும் சொல்லாமல் அமைதியாக இருந்தார். “திருமதி சாம்ப்சன், இதனால் உங்களுக்குப் பெரிய இடைஞ்சலாக இருக்குமே?” என்று கேட்டார்.

“ஆமாம், இருக்கும். ஆனால் என்ன செய்யமுடியும். கட்டடங்களை விரிவாக்கம் செய்யவேண்டும் என மக்கள் விரும்பினால் அதைத் தடுக்க சட்டம் எதுவும் இல்லை என்பது எனக்குத் தெரியும்.” இது திருமதி மான்ஸ்டேவுக்கும் தெரியுமென்பதால் அமைதியாக இருந்தார். “என்ன செய்ய முடியும்,” என மீண்டும் கூறினார் திருமதி சாம்ப்சன். “நான் தேவாலய உறுப்பினராக இருந்தால், இந்த முயற்சியினால் எலிசா பிளாக் சிரமத்துக்கு ஆளானால் வருந்தமாட்டேன். நல்லது, நான் கிளம்புகிறேன் திருமதி மான்ஸ்டே. நீங்கள் சௌகரியமாக இருப்பது குறித்து மகிழ்ச்சி.”

மிகுந்த சௌகரியம், மிகுந்த சௌகரியம்! தனியாக இருந்ததால் மூதாட்டி மீண்டும் ஜன்னல் பக்கம் திரும்பினார். அன்றைய காட்சி எவ்வளவு அழகாக இருந்தது! வட்டமான மேகங்கள் திரண்ட நீல வானம் எல்லாவற்றின்மீதும் ஒளியைப் பொழிந்தது; அய்லாந்தஸ் பசுமஞ்சள் நிறத்தில் இருந்தது, ஹயாசிந்த் துளிர்விட்டது, மாக்னோலியா மலர்கள் வெண்சலவைக்கல்லில் செதுக்கிய ரோஜா மலர்களைப்போலத் தோற்றமளித்தன. கூடியவிரைவில் விஸ்டாரியா பூக்கும், அதையடுத்து குதிரை-கஷ்கொட்டையும்தான். ஆனால் அவருக்கு இது எதுவும் தெரியாது. அவரது கண்களுக்கும் அவற்றுக்கும் இடையே செங்கலும் குழைகாரையும் பூசிய தடுப்பு ஒன்று வெகுவேகமாக எழும்பும்; சிறிது நாட்களில் தேவாலயக் கோபுரம்கூட மறைந்துவிடும், அவளுடைய ஒளிமயமான உலகம் மொத்தமாக அழிக்கப்படும். அன்று கொண்டுவரப்பட்ட மாலையுணவைத் தொட்டுக்கூடப் பார்க்காமல் அனுப்பிவைத்தார் திருமதி மான்ஸ்டே. சூரியன் மறைந்து இருட்டு தோன்றும் வரையில் ஜன்னல் அருகில் நின்றபடியே தவித்தாள்; பின்னர், படுக்கையில் படுத்த பிறகும் இரவு முழுவதும் தூங்காமல் கிடந்தாள்.

மறுநாள் அதிகாலையில் எழுந்து ஜன்னலருகே சென்றபோது மழை பெய்துகொண்டிருந்தது. சாய்வான சாம்பல் நிற வலையால் மூடப்பட்டதுபோல இருந்தாலும் அந்தக் காட்சிக்கென ஒரு தனி அழகிருந்தது. மழை மரங்களுக்கு நல்லது. முந்தைய தினம்தான் அய்லாந்தஸ் புழுதிபடிந்திருப்பதைக் கவனித்திருந்தாள்.

“நான் இங்கிருந்து வேறு இடத்துக்குப் போகலாம்,” என்று உரக்கச் சொன்னார் திருமதி மான்ஸ்டே. ஜன்னலைவிட்டுத் திரும்பி அறையைப் பார்த்தாள். அவள் நிச்சயமாக இங்கிருந்து வேறு இடத்துக்குப் போகலாம்; உயிரோடு தோலுரிக்கலாம். ஆனால் அந்த இரண்டில் எதைச் செய்தாலும் அவள் உயிர்பிழைக்க வாய்ப்பில்லை. அந்த அறையைவிடவும் அதிலிருந்து தெரிந்த காட்சிதான் அவளுக்கு அதிக மகிழ்ச்சியைத் தந்தது, அவருடைய இருப்பின் முக்கிய பகுதியாக இருந்தது. அங்கே பதினேழு ஆண்டுகள் வசித்திருந்தார், சுவர்த்தாளில் உள்ள ஒவ்வொரு கறையும், தரைவிரிப்பில் இருக்கும் ஒவ்வொரு கிழிசலும் அவளுக்குத் தெரியும். சூரிய ஒளி அவளுடைய சிற்பங்களின்மீது ஒரு குறிப்பிட்ட பக்கமிருந்து விழுந்தது. அலமாரிகளில் இருக்கும் அவளுடைய புத்தகங்கள் நைந்துபோயிருந்தன. அவளுடைய மலர்களும் கொடிகளும் அவற்றுக்கான ஜன்னலுக்குப் பழகிவிட்டிருந்தன, எந்தப் பக்கமாகச் சாய்ந்தால் சூரிய ஒளியை எட்டலாம் என்பது அவற்றுக்குத் தெரியும். “எங்களால் புதிய இடத்துக்குப் போகமுடியாது. வயதாகிவிட்டது,” என்று வாய்விட்டுச் சொன்னார்.

அன்று மதியம் எல்லாம் தெளிவாகியது,



நைந்துபோன பழைய துணியாக இருந்த மேகங்களின் நடுவே வானின் நீலம் ஈரமாகவும் பிரகாசமாகவும் ஒளிர்ந்தது. அய்லந்தஸ் பளீரென மின்னியது; பூப் பாத்திகளின் நடுவே தெரிந்த மண் செழிப்பாகவும் கதகதப்பாகவும் இருந்தது. அன்று வியாழக்கிழமை. வரும் திங்கட்கிழமையன்று கட்டடப் பணி தொடங்கவிருந்தது.

ஞாயிற்றுக்கிழமை மதியம் கட்டடத்தின் அடித்தளத்தில் தங்கியிருந்தவர்கள் உணவுண்ட பிறகு மீதமானவற்றை எடுத்து வைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது திருமதி பிளாக்கிடம் அந்தத் துண்டு அட்டையை எடுத்துவந்தார்கள். கறுப்புக் கரைபோட்ட அந்த அட்டையில் திருமதி மான்ஸ்டேவின் பெயர் எழுதியிருந்தது.

"திருமதி சாம்ப்சனின் கட்டடத்தில் தங்கியிருப்போரில் ஒருவர்; தங்குமிடத்தை மாற்ற விரும்புகிறார் என நினைக்கிறேன். இந்த விரிவாக்கம் முடிந்ததும் அடுத்த வருடம் அவருக்கு ஓர் அறையைக் கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லிவிடு, டீனா," என்றார் திருமதி பிளாக். "இதோ ஒரு நிமிடத்தில் மேலே வந்து அவரைச் சந்திக்கிறேன் என்று அந்தப் பெண்மணியிடம் சொல்லுங்கள்."

சிலைகளும் அலங்காரத்துணிகளால் அலங்கரிக்கப்பட்ட அறைகலன்களும் கொண்ட அந்த நீண்ட வரவேற்பறையில் திருமதி மான்ஸ்டே நின்றுகொண்டிருப்பதைப் பார்த்தார் திருமதி பிளாக்; அந்த வீட்டில் அவரால் உட்காரமுடியவில்லை.

வேகமாகக் குனிந்து பதிவேட்டைத் திறக்க முயன்றபோது தூசி எழுந்தது. திருமதி பிளாக் தன்னைப் பார்க்க வந்தவரிடம் பேசினார். பார்வையாளரை நோக்கி முன்னேறினார்.

"உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி திருமதி மான்ஸ்டே. தயவுசெய்து உட்காருங்கள்," என்று உரத்த குரலில் பேசினார். கட்டடத்தை விரிவாக்கம் செய்யும் அளவு வசதி படைத்த பெண்ணின் குரல். அதற்காக எதுவும் செய்யமுடியாது; திருமதி மான்ஸ்டே இருக்கையில் அமர்ந்தாள்.

"உங்களுக்கு நான் எப்படி உதவமுடியும் என்று சொல்லுங்கள்," என்றார் திருமதி பிளாக். "எனது வீடு தற்போது காலியாக இல்லை. ஆனால் விரிவாக்கிக் கட்டப் போகிறேன், மேலும்..."

"விரிவாக்கத்தைப்பற்றித்தான் பேச விரும்புகிறேன்," என்று திடீரெனச் சொன்னார் திருமதி மான்ஸ்டே. "நான் ஏழை, ஒருபோதும் மகிழ்ச்சியாக இருந்ததில்லை. உங்களுக்குப் புரியவைக்க வேண்டுமென்றால் முதலில் என்னைப்பற்றிப் பேச வேண்டும், திருமதி பிளாக்."

திருமதி பிளாக் ஆச்சரியமுற்றார் என்றாலும் சலனமடையவில்லை, அவர் என்ன சொல்லப்போகிறார் என்பதைக் கேட்க முனைந்தார்.

"நான் விரும்பியது எதுவும் ஒருபோதும் கிடைத்ததில்லை," திருமதி மான்ஸ்டே தொடர்ந்தார். "ஓர் ஏமாற்றத்துக்குப் பின் இன்னொன்று என்பதுதான் வாடிக்கையாக இருந்தது. பல ஆண்டுகளாகக் கிராமப்புறத்தில் வசிக்கவேண்டும் என்பதுதான் கனவாக இருந்தது. ஆனால் எங்கள் வீட்டில் சூரிய வெளிச்சம் வரும் ஒரு ஜன்னல்கூட இல்லை என்பதால் நான் வளர்த்த செடிகள் அனைத்தும் இறந்துவிட்டன. என் மகள் பல வருடங்களுக்கு முன்பு திருமணம் செய்துகொண்டு போய்விட்டாள். எனக்குப் பிடித்த விஷயங்கள் எதுகுறித்தும் அவளுக்கு அக்கறையில்லை. என் கணவர் இறந்த பின்னர் தனியாக வசித்தேன். அது நடந்து பதினேழு ஆண்டுகளாகிவிட்டது. பிறகு திருமதி சாம்ப்சனின் வீட்டில் தங்கினேன், இப்போதும் அங்கேதான் இருக்கிறேன். இப்போது தளர்ந்துவிட்டது, அடிக்கடி வெளியே செல்ல முடிவதில்லை. நன்றாக இருக்கும் நாட்களில் மட்டுமே போகிறேன்.



பெரும்பான்மையான நேரங்களில் மூன்றாவது மாடியின் பின்புறம் இருக்கும் ஜன்னல் அருகே ஏன் உட்கார்ந்திருக்கிறேன் என்பதை இப்போது புரிந்துகொள்வீர்கள் என நினைக்கிறேன்.”

“நல்லது, திருமதி மான்ஸ்டே,” எனத் தாராள மனதுடன் பேசினார் திருமதி பிளாக். “பின்புறத்தில் இருக்கும் அறைகளில் ஒன்றை உங்களுக்கு நிச்சயம் கொடுக்கிறேன். விரிவாக்கம் செய்யும்போது கட்டும் புதிய அறைகளில் ஒன்றை...”

“வீட்டை மாற்றுவது என் விருப்பமில்லை; என்னால் அங்கிருந்து மாறமுடியாது.” திருமதி மான்ஸ்டே பேசியது அலறுவதைப்போல இருந்தது. “உங்கள் கட்டடத்தை விரிவாக்கம் செய்தால் என்னுடைய ஜன்னல் வழியே தெரியும் காட்சியெல்லாம் மறைந்துபோகும் என்பதைத்தான் சொல்லவந்தேன்... எதுவுமே தெரியாது! நான் சொல்வது உங்களுக்குப் புரிகிறதா?”

திருமதி பிளாக் தான் பைத்தியம் பிடித்த ஒருவரிடம் நேருக்கு நேர் சந்தித்துப் பேசுவதாக நினைத்துக்கொண்டாள். பைத்தியக்காரர்களிடம் நகைச்சுவையாகப் பேசவேண்டும் என்றும் கேள்விப்பட்டிருந்தாள்.

“அடடா, அடடா,” என்றபடியே நாற்காலியைப் பின்னே தள்ளிவிட்டு எழுந்தார். “அது மிகவும் மோசமான விஷயமாயிற்றே? ஏன், நான் அதைப்பற்றி ஒருபோதும் நினைத்ததில்லை. நிச்சயமாக, நீட்டிப்பு நீங்கள் காணும் காட்சியில் தலையிடும், திருமதி மான்ஸ்டே.”

“உங்களுக்குப் புரிகிறதா?” பெருமூச்சு விட்டபடியே கேட்டார் திருமதி மான்ஸ்டே.

“புரிகிறது, அதற்காக வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் கவலைகொள்ளாதீர்கள் திருமதி மான்ஸ்டே. எல்லாவற்றையும் சரி செய்துவிடுகிறேன்.”

திருமதி மான்ஸ்டே இருக்கையைவிட்டு எழுந்தார். திருமதி பிளாக் கதவருகே நகர்ந்தார்.

“சரிசெய்கிறேன் என்று எதைச் சொல்கிறீர்கள்? விரிவாக்கம் செய்வது குறித்து உங்கள் மனதை என்னால் மாற்றமுடியும் என்று சொல்கிறீர்களா? ஓ, திருமதி பிளாக், நான் சொல்வதைக் கேளுங்கள். என் வங்கிக் கணக்கில் இரண்டாயிரம் டாலர்கள் உள்ளன, என்னால் உங்களுக்கு ஆயிரம் டாலரைக் கொடுக்க முடியும்...” என்று சொல்லச் சொல்ல திருமதி மான்ஸ்டேவின் கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியது.

“வருத்தப்படாதீர்கள், திருமதி மான்ஸ்டே,” என மெல்லிய குரலில் சமாதானம் சொன்னார் திருமதி பிளாக். “இதற்கான முடிவை நாம் காணலாம். இன்னும் சிறிது நேரம் உங்களுடன் இதுகுறித்துப் பேச முடியாமைக்கு வருந்துகிறேன். இது மிகவும் பரபரப்பான வேலை நேரம், இரவுணவைத் தயார்...”

கதவின் கைப்பிடியில் கையை வைத்தவரின் மணிக்கட்டைத் திடீரென வீரியத்துடன் எட்டிப்பிடித்தார் திருமதி மான்ஸ்டே.

“நீங்கள் எனக்குத் திட்டவட்டமான பதிலைக் கொடுக்கவில்லை. என் கருத்தை ஏற்றுக்கொண்டுவிட்டதாகச் சொல்கிறீர்களா?”

“நிச்சயமாக யோசித்துப் பார்க்கிறேன் திருமதி மான்ஸ்டே. எந்தக் காரணத்துக்காகவும் உங்களைத் தொந்தரவு செய்யமாட்டேன்...”

“ஆனால் நாளை வேலை தொடங்கப்போவதாகச் சொல்லப்பட்டதே,” என விடாமல் கேள்விகேட்டார் திருமதி மான்ஸ்டே.

திருமதி பிளாக் தயங்கினார். “தொடங்காது,

என உறுதியளிக்கிறேன்; இன்று இரவே கட்டட நிறுவனத்திடம் பேசுகிறேன்.'' திருமதி மான்ஸ்டேவின் பிடி இறுகியது.

''என்னை ஏமாற்ற நினைக்கவில்லையே?'' எனக் கேட்டார்.

''இல்லை, இல்லை,'' தடுமாறியபடி சொன்னார் திருமதி பிளாக். ''என்னைப் பற்றி எப்படி அப்படி நினைக்கலாம், திருமதி மான்ஸ்டே?''

மெதுவாக திருமதி மான்ஸ்டேவின் பிடி தளர்ந்தது, திறந்திருந்த கதவு வழியே வெளியேறினார். முன்னறையில் சற்றுநேரம் நின்று ''ஓராயிரம் டாலர்கள்,'' என மீண்டும் சொன்னார். பின்னர் வீட்டைவிட்டு வெளியேறி இரும்புக் கிராதிகளைப் பற்றியபடி படிக்கட்டில் இறங்கினார்.

''ஆகா,'' என்று உரத்த குரலில் சொன்னபடி முன்னறையின் கதவை மூடித் தாழிட்டார் திருமதி பிளாக். ''இந்தக் கிழவி ஒரு கிறுக்கு என்பது இன்றுதான் தெரிந்தது. எத்தனை அமைதியாக, பெரிய மனுஷி போலத் தோற்றமளித்தாள்.''

அன்று இரவு திருமதி மான்ஸ்டே நன்றாகத் தூங்கினார், ஆனால் மறுநாள் அதிகாலையில் சுத்தியலின் சத்தம் கேட்டு விழிப்புற்றார். அவசரமாக அவசரமாக ஜன்னலருகே சென்று பார்த்தார், திருமதி பிளாக்கின் முற்றத்தில் வேலையாட்கள்கூட்டமாக நிற்பதைக் கண்டார். அவர்களில் சிலர் சமையலறையிலிருந்து முற்றத்திற்குச் செங்கற்களைச் சுமந்துசென்றனர். இன்னும் சிலர் திருமதி பிளாக்கின் வீட்டின் ஒவ்வொரு நிலையிலும் இருந்த பழைய பாணி மரப் பலகணிகளை உடைக்கத் தொடங்கினர். இடிக்கத் தொடங்கினர். தான் ஏமாற்றப்பட்டோம் என்பது திருமதி மான்ஸ்டேவுக்குப் புரிந்தது. முதலில் தனது பிரச்சனை குறித்துத் திருமதி சாம்ப்சனிடம் பேச நினைத்தார், ஆனால் நம்பிக்கையின்மையும் சோர்வும் ஆட்கொண்டதால் என்ன நடக்கிறது என்பதைக்கூடப் பார்க்காமல் மீண்டும் படுக்கையில் சென்று படுத்துக்கொண்டார்.

பிற்பகல்வாக்கில் என்னதான் நடக்கப்போகிறது என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்று தோன்றியது. எழுந்து ஆடையைத் திருத்திக்கொண்டார். கைகள் வழக்கத்தைவிட அதிகமாக விறைத்துப்போயிருந்ததால் கொக்கிகளையும் பொத்தான்களையும் அணிவது கடினமாக இருந்தது.

வேலையாட்கள் பலகணியின் மேற்பகுதி முழுவதையும் அகற்றிவிட்டதையும் காலையிலிருந்ததைவிடவும் அதிகமான செங்கற்கள் இருப்பதையும் ஜன்னல்வழியே கண்டார். வேலையாட்களில் ஒருவர், பார்க்க வீங்கிய முகத்துடன் கரடுமுரடாக இருந்தார், மாக்னோலியா மலரொன்றைப் பறித்து முகர்ந்துவிட்டுத் தரையில் வீசினார்; அடுத்து செங்கற்களைச் சுமந்துகொண்டு வந்த மனிதர் அந்தப் பூவை மிதித்துவிட்டுக் கடந்துசென்றார்.

''கவனமா இரு, ஜிம்,'' புகைப்பிடித்துக்கொண்டிருந்த மனிதரிடம் இன்னொருவர் சொன்னார். ''பேப்பர் இருக்கும் பீப்பாய்களில் தீக்குச்சியை வீசிவிடாதே. மொத்த வீடும் ஒரு நொடியில் பற்றிக்கொண்டுவிடும்.'' திருமதி மான்ஸ்டே முன்னால் எட்டிப்பார்த்தார். அந்த மரப்பலகணியின் கீழே பேப்பரும் குப்பையும் வழியும் பல பீப்பாய்கள் இருப்பது தெரிந்தது.

அந்தி சாய்ந்ததும் வேலை நிறுத்தப்பட்டது. சூரிய அஸ்தமனம் எந்தக் குறையுமின்றித் துல்லியமாக நடந்துமுடிந்தது. தொலைதூரத்தில் தெரிந்த கோபுரத்தின் வடிவத்தை இளஞ்சிவப்பு நிற ஒளி மாற்றியமைத்து நீண்ட நேரம் மேற்கு வானில் நீடித்து இருக்கச்செய்தது. இருள் சூழ்கையில், திருமதி மான்ஸ்டே திரைச்சீலைகளை இழுத்து மூடிவிட்டு வழக்கம்போல விளக்கை ஏற்றச்சென்றார். விளக்குக்கான மண்ணெண்ணெய் அலமாரியில் உள்ள ஒரு சிறிய ஜாடியில் தயாராக இருக்கும். எப்போதும் விளக்கில் மண்ணெண்ணெயைத் தானே ஊற்றி ஏற்றிவைப்பார். விளக்கு வெளிச்சம் அறையை நிறைத்து அமைதியைப் பரவச்செய்தது. புத்தகங்களும் ஓவியங்களும் செடிகளும் தங்களது எஜமானியைப்போல அந்த அமைதியான மாலைப்பொழுதை எதிர்கொள்ளத் தயாராகின. திருமதி மான்ஸ்டே வழக்கம்போல நாற்காலியை மேசையருகே இழுத்துப்போட்டுக்கொண்டு பின்னல்வேலையைச் செய்ய ஆரம்பித்தார்.

அன்று இரவு உறக்கம் வரவில்லை.

வானிலை மாறிக் காற்று வேகமாக வீசியது. வானில் இருந்த மேகங்கள் நெருக்கமாகக் கூடி நின்று நட்சத்திரங்களை மறைத்தன. திருமதி மான்ஸ்டே ஓரிரு முறை எழுந்து ஜன்னலுக்கு வெளியே பார்த்தார்; ஆனால் எதிர்ப்பக்கமிருந்த வீடுகளின் ஜன்னல்களில் தெரிந்த மங்கலான ஒளியைத் தவிர வழக்கமான காட்சி எதுவும் தெரியவில்லை. இறுதியில் அந்த விளக்குகளும் அணைக்கப்பட்டன. அதற்காகக் காத்திருந்த திருமதி மான்ஸ்டே அவசர அவசரமாக இரவு ஆடையின்மீது மேலங்கியை அணிந்து தலையை ஒரு சிறிய துணியால் போர்த்திக்கொண்டார். அலமாரியில் இருந்த மண்ணெண்ணெய் ஜாடியைக் கவனமாக வெளியே எடுத்தார். மறக்காமல் தீப்பெட்டியை எடுத்துச் சட்டைப் பையில் வைத்தார். முன்னெச்சரிக்கையோடு அறையின் கதவைத் திறந்து வெளியே வந்தார். முன்னறையின் பின்பக்கம் எரிந்த சிறிய விளக்கின் ஒளியின் உதவியோடு இருட்டில் மெதுவாகப் படிக்கட்டில் இறங்கத் தொடங்கினார். ஒருவழியாகப் படிக்கட்டின் கடைசிப் படியை அடைந்தார். கட்டடத்தின் அடித்தளம் முழுவதும் இருளில் மூழ்கியிருந்ததால் அந்தப் பகுதியில் இறங்குவது மிகவும் கடினமாக இருந்தது. இருப்பினும், யாராவது தான் நடக்கும் ஓசையைக் கேட்டுவிடுவார்களோ என்ற அச்சமின்றி நடக்கமுடிந்தது. அடுத்து வெளிமுற்றத்துக்கு இட்டுச்செல்லும் இரும்புக் கதவைத் திறக்க முனைந்தார். திடீரென வீசிய குளிர்ந்த காற்றில் நடுங்கியபடியே துணி காயப்போடும் கம்பியின் கீழே நின்றுகொண்டிருந்தார்.

அதிகாலை மூன்று மணியளவில் நெருப்பு அலாரம் ஒலித்ததால் திருமதி பிளாக்கின் வீட்டு வாசலுக்குத் தீயணைப்பு வண்டி வந்துசேர்ந்தது. திருமதி சாம்ப்சனின் வீட்டில் குடியிருந்தவர்கள் எல்லோரும் அதிர்ச்சியோடு எழுந்துவந்து ஜன்னலின் வழியே எட்டிப் பார்த்தனர். திருமதி பிளாக்கின் வீட்டின் பின்புறம் இருந்த மரப்பலகணி எரிந்துகொண்டிருந்தது. தீப்பிழம்புகள் மேலெழும்புவதை எட்டிப் பார்த்தவர்களில் திருமதி மான்ஸ்டேவும் ஒருவர்.

எப்படியோ, விரைவில் தீ அணைக்கப்பட்டது. வீட்டில் குடியிருந்தவர்கள் தீப்பற்றியதும் அலறியடித்துக்கொண்டு இரவு ஆடைகளோடு வெளியே ஓடிவந்திருந்தனர். விடியற்காலையில் பாதிப்புகளைப் பார்க்க எழுந்து வந்தனர். ஜன்னல் கண்ணாடிகளில் விரிசல் ஏற்பட்டிருந்தது. புகை மண்டியதால் உட்கூரை கருத்துப்போயிருந்தது. உண்மையில், தீயினால் அதிகம் பாதிக்கப்பட்டவர் திருமதி மான்ஸ்டேதான். காலையில் விடிந்ததும் நிமோனியாவால் மூச்சுத்திணறல் ஏற்பட்டது. அந்த வயதில் மெல்லிய இரவு ஆடையை மட்டும் அணிந்தபடி ஜன்னலைத் திறந்துவைத்துக்கொண்டு வெளியே எட்டி வேடிக்கை பார்த்ததுதான் காரணம் என எல்லோரும் பேசிக்கொண்டார்கள்.

அவரின் உடல்நிலை மிகவும் மோசமாக இருந்தது தெரிந்தது, ஆனால் மருத்துவரின் பரிந்துரை அத்தனைக் கடுமையானதாக இருக்கும் என்று யாரும் நினைத்திருக்கவில்லை. அன்று மாலை திருமதி சாம்ப்சனின் உணவுமேசையில் கூடியிருந்தவர்கள் திகைத்துப்போய், கலக்கத்துடன் காணப்பட்டனர். குடியிருந்தவர்கள் எவருக்கும் திருமதி மான்ஸ்டேயை அதிகம் தெரியாது, அவர் யாருடனும் நெருங்கிப் பழகவில்லை. அவர்கள் யாருக்கும் தன்னோடு பழகும் தகுதியில்லை என்று நினைத்துத் தனிமையில் இருந்தார் என்ற எண்ணம் எல்லோருக்கும் ஏற்பட்டிருந்தது. ஆனால், வீட்டில் குடியிருந்தவர்களில் யாரேனும் ஒருவர் இறப்பது எல்லோருக்குமே வருத்தமளிக்கும் விஷயமாகத்தான் இருந்தது. “அது நீங்களாகவோ நானாகவோ இருக்கலாமல்லவா,” என ஒரு பெண்மணி இன்னொருவரிடம் சொன்னார்.

ஆனால் திருமதி மான்ஸ்டேதான் பாதிக்கப்பட்டிருந்தார். வாழ்ந்தபோது தனியாக இருந்தார் என்பதைவிடவும் தனிமையில் இருந்தார் என்பதுபோலவே இறப்பை எதிர்நோக்கியிருந்தபோதும் அப்படித்தான் இருந்தார். அவரைப் பார்த்துக்கொள்ள பயிற்சிபெற்ற செவிலியரை அனுப்பியிருந்தார் மருத்துவர். திருமதி சாம்ப்சனும் அவ்வப்போது ஓசையின்றி வந்து பார்த்துவிட்டுப் போனார். ஆனால் இருவருமே ஏதோ கனவுலகில் தொலைதூரத்தில் வந்துபோகும்

உருவங்களைப்போலத் தோன்றினர். நாள் முழுவதும் எதுவும் பேசவில்லை; மகளின் முகவரியைக் கேட்டபோது தலையை ஆட்டி மறுத்தார். சில நேரம் ஏதோ ஓசையை உற்றுக்கேட்க முயற்சி செய்வதுபோலத் தோன்றியது. பிறகு மீண்டும் தூங்கிவிடுவார்.

மறுநாள் காலை அதிக வெளிச்சமின்றி மங்கலாக இருந்தது. செவிலியர் திருமதி சாம்ப்சனைக் கூப்பிட்டார். மூதாட்டியின் உதடுகள் அசைவதைக் கண்டு குனிந்து என்ன சொல்கிறார் என்பதைக் கேட்டனர்.

“என்னைப் படுக்கையிலிருந்து மேலே தூக்குங்கள்,” என மெல்லிய குரலில் சொன்னார்.

கட்டிலில் எழுப்பி உட்காரவைத்தவர்களிடம் விறைத்துப்போன கையை நீட்டி ஜன்னலைச் சுட்டினார்.

“ஓ, ஜன்னலா! ஜன்னலருகே உட்கார விரும்புகிறார். நாள் முழுவதும் அங்கேதான் உட்கார்ந்திருப்பார்,” என்று விளக்கம் சொன்னார் திருமதி சாம்ப்சன். “அதனால் பெரிய பாதிப்பு ஏற்படாதே?”

“இப்போது எதுவுமே பொருட்டில்லை,” என்று பதில் சொன்னார் செவிலி.

இருவருமாகத் திருமதி மான்ஸ்டேயை ஜன்னலருகே இட்டுச் சென்று நாற்காலியில் அமர்த்தினார்கள். விடியத் தொடங்கியிருந்தது, ஒரு மகிழ்ச்சியான வசந்தகாலத்து விடியல். தேவாலயத்தின் கோபுரம் பொன்னிறக் கதிர்களால் ஒளியூட்டப்பட்டது. மாக்னோலியாவும் ஹார்ஸ் செஸ்ட்நட்டும் இன்னும் நிழலில் உறங்கிக்கொண்டிருந்தன. திருமதி பிளாக்கின் முற்றத்தில் அமைதி தவழ்ந்தது. பலகணியின் கருகிய மரக்கட்டைகள் விழுந்தது விழுந்த இடத்திலேயே கிடந்தன. தீவிபத்துக்குப் பிறகு கட்டடப் பணியாளர்கள் வேலைக்குத் திரும்பவில்லை. மாக்னோலியாவின் சிற்பம்போன்ற மலர்களில் சில மலர்ந்திருந்தன. அந்தக் காட்சியைத் தங்குதடையின்றிக் காணமுடிந்தது.

திருமதி மான்ஸ்டேவுக்கு மூச்சுவிடுவது கடினமாக இருந்தது; ஒவ்வொரு கணமும் கடினம் அதிகமாகிக்கொண்டே போனது. ஜன்னலைத் திறக்கச்சொல்ல முயன்றார், ஆனால் அவர்களுக்குப் புரியவில்லை. அய்லந்தாசின் இனிமையான மணத்தைச் சுமந்துவரும் காற்றைச் சுவாசிக்க முடிந்திருந்தால் மனம் இலகுவாகியிருக்கும். ஆனால் அந்தக் காட்சியையாவது பார்க்கமுடிந்தது ஆறுதலைத் தந்தது. தேவாலயக் கோபுரம் பொன்னாக மாறிவிட்டிருந்தது, வானம் முத்துப்போன்ற நிறத்திலிருந்து மாறி நீலமாக ஒளிர்ந்தது. கிழக்கிலிருந்து மேற்கு வரையில் ஒளி பரவியிருந்தது. மாக்னோலியா மலர்களும் சூரியனின் ஒளியில் மின்னின.

திருமதி மான்ஸ்டேவின் தலை பின்னோக்கிச் சரிந்தது, புன்னகையோடு இறந்துபோனார்.

கட்டடத்தின் விரிவாக்கம் அன்றுமுதல் தொடங்கியது.

**

*எடித் வார்ட்டன் (Edith Wharton) (24 ஜனவரி 1862 – 11 ஆகஸ்ட் 1937) நியூயார்க் நகரில் உயர்குடியைச் சேர்ந்த, பெரும் வசதி படைத்த பெற்றோருக்குப் பிறந்தார். குழந்தைப்பருவத்தில் பிரெஞ்சு, ஜெர்மானிய, இத்தாலிய மொழிகளைக் கற்கும் வாய்ப்பைப் பெற்றார். குழந்தைப்பருவம் முதலே கதையெழுதுவதில் ஆர்வமிருந்தது. 1878இல் அவர் எழுதிய, மொழிபெயர்த்த கவிதைகளின் தொகுதி வெளியானது. அடுத்தடுத்த வருடங்களில் அமெரிக்காவின் முன்னணி இதழ்களில் பெயர் குறிப்பிடப்படாமல் அவருடைய கவிதைகள் அச்சாகின.*

*எடித் பிறந்து வாழ்ந்த நியூயார்க் நகர உயர்குடி மக்களின் வாழ்க்கையையும் அதிலிருந்த முரண்களையும் அவருடைய படைப்புகள் ஒளிவுமறைவின்றியும் எள்ளல் தொனியுடனும் பிரதிபலித்தன. `காட்சி` அவருடைய முதல் சிறுகதை.*

*அமெரிக்காவின் தலைசிறந்த எழுத்தாளர்கள் பட்டியலில் இடம்பிடித்தார். புனைவுகளுக்கான முதல் புலிட்சர் பரிசை வென்ற முதல் பெண் எழுத்தாளர் என்ற சிறப்பைப் பெற்றார். யேல் பல்கலைக்கழகத்தின் கௌரவ முனைவர் பட்டம் வழங்கப்பட்டது. அமெரிக்கக் கலை இலக்கியக் கழகத்தின் வாழ்நாள் உறுப்பினராக அறிவிக்கப்பட்டார். இலக்கியத்துக்கான நோபல் பரிசின் பரிந்துரைப் பட்டியலில் மூன்று ஆண்டுகள் அவருடைய பெயர் இடம்பிடித்தது.* ■

கட்டுரை

மேனகா ரஹமத்

# துளசி கவுடா



ஒரு பணியை ஆத்மார்த்தமாகச் செய்யும்போது நமக்கு அங்கீகாரங்களும் தேவைப்படாது, ஊக்க மருந்தும் தேவைப்படாது. அதுவும், இயற்கையோடு கலந்து ஒன்றாக இணைந்து பணி என்று பாராமல், தன்னைப் போல் ஓர் உயிர், தன் குடும்பம் என்று நினைத்துச் செவ்வனே ஒரு பணியைச் செய்வது தவம். தவத்தை அளவுகோலிட இயலாது. நம்மைத் தேடும் ஓர் நிலை. அப்படித்தான் வனமெங்கும் பரவி, ஆயிரமாயிரம் பறவைகள், விலங்குகளுக்காக இருக்கும் வனத்தை அழிவிலிருந்து காப்பாற்றி, அதனை வளப்படுத்தி, லட்சக்கணக்கான மரக்கன்றுகளை நட்டு வளர்த்து, மண்மன வாசமுடன் செவ்வனே தன்னுடைய 12 வயதிலிருந்து தன் செயலின் மூலம் தன்னைத் தேடிக்கொண்டிருக்கிறார், துளசி கவுடா அம்மையார்.

துளசி கவுடா அம்மையார் 1938ஆம் ஆண்டு "ஹலக்கி வோக்கலிகா" என்னும் பழங்குடியினர் குடும்பத்தில் கர்நாடக மாநிலம், ஹோனாலி என்ற கிராமத்தில் பிறந்தார். தன்னுடைய இரண்டாம் வயதிலே தந்தையினை இழந்தார். முப்பத்தைந்து வருடங்கள் தன்னுடைய அம்மாவோடு தினக்கூலியாக வேலை பார்த்திருக்கிறார். சிறுவயதில், தன் அம்மாவுடன் சுள்ளி, விறகு எடுக்கச் செல்லும்பொழுது, துளசிகவுடா அம்மையாரின் அன்னை, தாய் மரம் என்றால் என்ன, விதை எப்படி தேர்வு செய்ய வேண்டும், ஏன் பெரிய மரங்களிடம் இருந்து விதை பெற வேண்டும், தேர்வு செய்த விதையினை நேர்த்தி செய்வது எப்படி, அதனை ஊன்றிக் கன்றாக வளர்த்தெடுப்பது எப்படி என்றெல்லாம் துளசி கவுடா அம்மையாருக்குச் சொல்லிக் கொடுத்துள்ளார். அதனை அப்படியே உள்வாங்கி, அதனைச் செய்முறையாகச் சிறுவயதில் இருந்து செய்ய ஆரம்பித்து இருக்கிறார். தனது நடுத்தர வயதில் வீட்டின் பின் இருந்த வெற்று இடத்தில் தனது உழைப்பால் அடர்த்தியான காடுகளை உருவாக்கியுள்ளார்.

அவருக்கு மரங்கள் பற்றிய அறிவு அபாரமானது. தாய் மரங்கள் அவற்றின் வயது மற்றும் அளவு காரணமாகக் காட்டில்

மிகவும் இணைக்கப்பட்ட முனைகளுடன் அமைந்திருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலத்தடிக் கணுக்கள் தாய் மரங்களை மரக்கன்றுகள் மற்றும் நாற்றுகளுடன் இணைக்கப் பயன்படுகின்றன. ஏனெனில் தாய் மரம் உயிர் கொடுக்கும் ஊட்டச்சத்துக்களைத் தன் கன்றுகளுடன் பரிமாறிக்கொள்கிறது. அவ்வாறு அதனைக் கண்டறிந்து அந்த மரத்தில் இருந்து விதையினைப் பிரித்து எடுப்பதில், எடுத்த விதையினை நேர்த்தி செய்து மரக்கன்றினை வளர்த்து எடுப்பதில் வல்லவர் துளசி கவுடா. சுயம்புவாக, மரங்கள், அதன் விதைகள் பற்றிய அறிவையும் மரங்களைக் கண்டறியும் திறனையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

இந்திய விடுதலைக்கு முன்னர் ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் இரயில் பாதையும் கப்பலும் செய்வதற்காக கர்நாடக மாநிலம் உத்தரகாண்ட் பகுதியில் அமைந்த காட்டினை அழித்துள்ளனர். அதில் அம்மையாரின் சொந்தக் கிராமமான ஹோனாலியும் இடம்பெற்றது. இந்தியா விடுதலை அடைந்த பின்னும் ஆட்சியாளர்கள் நகரவியல் இயந்திரவியல் வளர்ச்சிக்காகக் காட்டினைப் பெரும் அளவு அழித்துள்ளனர் என்று அரசாங்கத் தரவுகள் கூறுகின்றன.

இந்நிலையில், 1983 ஆம் ஆண்டு அரசாங்கத்தின் காடுகள் பாதுகாப்புச் சட்டம் மாற்றம் அடைகிறது. அதனைத் தொடர்ந்து அவ்வாண்டு, இந்திய வனப் பணியின் ஆட்சியாளராக "அடுகோடி நஞ்சப்ப எல்லப்ப ரெட்டி" என்பவர் காடுகளை மீட்டெடுக்கும் கர்நாடக அரசாங்கத்தின் அற்புதமான திட்டப்பணியின் பொறுப்பு ஏற்கிறார்.

அது தொடர்பாக, அரசாங்கத்தால் பாதுகாக்கப்படும் பல மரக்கன்றுகளை வளர்க்கும் இடத்தைப் பார்வையிடுகிறார். அங்கு துளசி அம்மையார் மண்ணில் இருந்த கற்களை அகற்றி மரக்கன்றுகளைப் பக்குவமாக நடுவதைப் பார்த்த அடுகோடி நஞ்சப்ப எல்லப்ப ரெட்டி, மனம் நெகிழ்ந்து உங்கள் கைகளில் மாயாஜாலம் உள்ளது என்று கூறுகிறார். அம்மையாரின் மரங்கள் பற்றிய அறிவு எந்தப் புத்தகத்திலும் காணக் கிடைக்காதது என்றார். ஆதலால், அவர்



அம்மையாரைக் காட்டைப் பற்றித் தனக்கு ஆலோசனை வழங்கும் ஆலோசகராக இருக்கச் சொன்னார். கையில் மாயாஜாலம் கொண்ட அம்மையார் லட்சக்கணக்கான மரங்களை வளர்த்தார்.

அம்மையாரின் பணியினைப் பார்த்துக் கர்நாடக அரசு, அம்மையாருக்கு வனத்துறையில் நிரந்தர அரசாங்கப் பணி வழங்கியது. 48 வருடக் காலம் பணியைச் செய்து, 1998ஆம் ஆண்டு வயது மூப்பின் காரணமாக அரசாங்கப் பணியில் இருந்து ஓய்வு பெற்றார். ஓய்வுக்குப் பிறகும் இவர் "மர நடவு" செய்யும் நடவடிக்கைகளைக் கைவிடவில்லை. கடந்த காலங்களைப் போன்ற செயல்களைச் செய்ய வயது அனுமதிக்காததால், இவர் இன்னும் சுற்றியுள்ள இடங்களில் மரக்கன்றுகளை நடவு செய்கிறார். அவற்றின் வளர்ச்சியை மேற்பார்வையிடுகிறார். 15 வருடக் காலம் கர்நாடக வன ஆலோசகராக இருந்து வருகிறார். இதனைக் கண்ட கிராமவாசிகள், அம்மையாரைத் தெய்வமாகப் பார்க்கின்றனர். காடுகளின் தெய்வம் என்று அழைத்தனர். உள்ளூர்காரப் பெண் ஒருவர் "துளசி அம்மா



அவர்கள் சிறுவயதில் இருந்தே மரங்களைத் தானே பெற்றெடுத்த தாய் போல் அவற்றிடம் பேசுவார்" என்று கூறியுள்ளதாக நியூயார்க் டைம்ஸ் நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

துளசி கவுடா அம்மையார் அவர்கள் இந்திரா பிரியதர்சினி வரிச்சா மித்ரா விருது, 1999 இல் ராஜ்யோத்சவ விருது, கவிதா நினைவு விருது மற்றும் இந்தாவாலு எச் ஹொன்னய்ய சமாஜ் சேவா விருது ஆகியவற்றைப் பெற்றவர். இந்திய அரசு, இவரின் ஈடு இணையற்ற பணியைப் பார்த்து, உயரிய விருதான 2020ஆம் ஆண்டின் பத்மஸ்ரீ விருதினை அம்மையாருக்கு வழங்கிப் பெருமைப்படுத்தியது.

கிராமங்களில் விவசாயிகள், பல நபர்கள் காலணி அணியாமல் இருப்பர். அவர்களிடம் காலணி ஏன் அணியவில்லை என்று கேட்டால், காலணி அணிந்தால் மண்ணிற்குத் தேவையான உயிரினங்கள் அழிக்கப்படும் என்றும், நமக்குச் சோறு போடும் பூமியினைச் செருப்பால் மிதிக்கக் கூடாது என்றும் கூறுவர். ஆம், அம்மையாரும் வெற்றுக் காலுடன் தன் குல உடையில் எப்பொழுதும் இருப்பது போல், உயரிய விருதான பத்மஸ்ரீ விருதினை ஜனாதிபதியிடம் இருந்து புதுடில்லியில் பெற்றுக்கொண்டார்.

அம்மையார் தனது வாழ்வின் அனைத்து நேரங்களையும் காட்டிற்காக அர்ப்பணித்து வருகிறார். நூற்றி ஐம்பது வீடுகளைக் கொண்ட ஒரு சிறு கிராமத்தில், இன்றும் அம்மையாரைக் காணச் சாரைசாரையாக மாணவர்கள், இயற்கை ஆர்வலர்கள் வந்து பார்த்துச் செல்கின்றனர். அம்மையார், தனக்குக் கிடைத்த வரமான காட்டின் அறிவை, அடுத்த தலைமுறைக்குக் கடத்திச் செல்வதே தன்னுடைய கடமை என்று அனைவரிடமும் பகிர்கிறார். அவரிடம், சீதோஷ்ண நிலை மாற்றம் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று வினவினால், அவரின் பதில்.. அதைப்பற்றி எனக்குத் தெரியவில்லை, ஆனால் காடுகள் பெருமளவு மனித தேவைக்காக அழிக்கப்படுகிறது, அதனால் காட்டின் அமைப்பு கெடுகிறது, மனிதன் காட்டை அழிக்காமலே வளமாக இருக்கலாம் என்கிறார். அழித்த காட்டினை மறுபடியும் உருவாக்குவதற்கு நீண்ட காலம் எடுத்துக்கொள்ளும் என்றும், பருவ காலம் மாறியுள்ளது என்றும் கூறுகிறார்.


அம்மையார், இப்பொழுதெல்லாம் தன் இறப்பைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டதாகச் சொல்கிறார்கள். தன்னுடைய உயிர் பிரியும்போது பல கிளைகள் கொண்ட பெரும் மரத்தின் கீழ் தனது உயிர் பிரிந்தால் சிறப்பான இறப்பாக அமையும் என்கிறார். மரங்களை விட தான் இவ்வுலகில் நேசிப்பது வேறெதுவும் இல்லை என்கிறார். துளசி அம்மாவின் மரங்கள் மீதான பாசம் தெற்றென விளங்குகிறது.

துளசி கவுடா அம்மையாரை, காடுகளின் களஞ்சியம் என்று போற்றுகின்றனர். சாமானியப் பெண்ணை, சாதனைப் பெண்ணாக மாற்றியது, அவரின் சுயநலமில்லா, சமூகத்தைச் செழிக்கச் செய்யும் செயல் மட்டுமே.

துளசி கவுடா அம்மையார், மரங்களின் தெய்வம் என்று அவர்கள் குலப் பழங்குடியினரால் அழைக்கப்படுகிறார்.

ஸ்ரீதேவி கண்ணன்

# கட்டிப்போடும் கவிதைகள்






**நூல் : புத்தனின் புனைப்பெயர் ஆந்தை**
**நூலாசிரியர் : வீரசோழன் க.சோ.திருமாவளவன்**

புத்தகத்திற்குள் நுழைந்ததும் முதல் பக்கம் அணிந்துரையின் வரிகளே ஆச்சர்யப்படுத்துகின்றன. திருமாவை நன்கறிந்தவர்கள் கவிதையை விட அழகாக இப்படிச் சொல்லிவிட முடியுமா எனப் பொறாமைப்பட வைக்கும் வரிகள் அவை. புத்த ஆந்தை, புத்தக ஆந்தை. அனைத்தையும் அமைதியாக, பேசாமல் – கத்தாமல் கவனிப்பவன். இப்படி இருக்க எந்த ஞானியும் அவனுக்குக் கற்றுத் தரவில்லை என்கிறார் திருமாவேலன். அபுனைவில் ஒரு நிஜப் பாத்திரத்தை அப்பட்டாகக் காட்சிப்படுத்தும் கலை இது.

மானா பாஸ்கரோ இவரது சட்டைப் பையின் உள்பாக்கட்டில் எப்போதும் அன்பின் ஒரே ஒரு சொல்லாவது கிடக்கும் என்கிறார். இந்நூலாசிரியர் மனிதர்களை அன்பாலும் அமைதியாலும் கட்டிப்போட்டு வைத்திருக்கிறார்.

பார்ப்போம் கவிதைகளை எதில் கட்டிப்போட்டிருக்கிறார் என்று.

பழங்காலப் பண்டங்களைச் சுவரில் அலங்காரமாக மாட்டலாம். நேதாஜி படையிலிருந்த தாத்தனைக் கூட சுவர் தாங்கி நிற்கும். அதில் குறிப்பிட்டிருக்கும் எண்கள் வருடத்தை நினைவுகூரலாம். ஆனால் சுவரில் பதித்த ஆணிகள்தான் காலத்தைப் பதிவு செய்கிறது என்கிறார்.

அவளின் ஞாயிறை ஒரு பெண்ணின் இடத்திலிருந்தே எழுதித் தனக்குச் சாட்டையும் மனைவிக்கு நேர்மையும் செய்திருக்கிறார். ஆண்கள் வேடிக்கை பார்க்கிறார்கள் என்றாலும் அதைப் பற்றிய குறைந்தபட்சக் குற்ற உணர்வையாவது இக்கவிதையில் வெளிப்படுத்தியிருப்பது பாராட்டுக்குரியதே.

எத்தனை நிலாக் கவிதைகள் எத்தனைக் கவிஞர்கள் படைத்திருந்தாலும் ஒவ்வொருவருக்குமான கற்பனை வளத்தையும் அதே நிலாதான் அவர்களுக்கு வழங்குகிறது. அம்மா குழந்தைக்குச் சோறூட்ட நிலாவை 'ஏமாற்றுகிறார்' என ஏமாற்றப்படும் நிலாவாகப் பார்க்கிறார் இக்கவிஞர்.

எலும்புகளின் இல்லம் எனத் தாயின் அருமை பேசும் பாடலில் மகனைக் குறிக்க ஆரம்பத்திலிருந்தே பிண்டம் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். கடைசிப் பத்தியில் முதியோர் இல்லத்தில் சேர்த்தபோதுதான் புரிகிறது அவன் எப்போதோ தர்ப்பணம் செய்து கை கழுவ வேண்டிய பிண்டம் என்று. அங்கே பிண்டம் என்ற சரியான சொல்லாடலைக் கையாண்டிருப்பார்.

சைக்கிள் பற்றிய முன்நோக்கிய நினைவு பற்றிய கவிதை ஒன்று இருக்கிறது. அதில் சைக்கிளின் காற்றுப்பை மெதுவாய் ஆக்சிஜன் ஏற்றிக்கொண்டிருக்கிறது. நான் என் பால்யங்களை நோக்கி சைக்கிள் மிதிக்கிறேன் என்கிறார். இத்தொகுப்பில் கவித்துவமாகக் கண்ட வரி இது.

புது வீட்டிற்கு ஓவியங்கள் வாங்கி ஆங்காங்கே மாட்டுகிறான். அவ்வோவியங்கள் செல்லும் இடங்களிலெல்லாம் இப்படி உயிரோடு பேசுகிறதே! என ஆச்சர்யப்படுகிறார். ஆனால் இதை வரைந்தவனை மட்டும் எப்படிக் காலம் கொன்றிருக்கிறது என ஓவியனுக்குக் கொஞ்சம் உயிரூட்டி வைக்கிறார்.

இதில் கொரானா காலக் கவிதைகளும் இருக்கின்றன. இறப்பு எண்ணிக்கை கணக்கை குத்துமதிப்பாக அரசுக்கு வெள்ளையறிக்கை அனுப்பியதை நினைவூட்டுகிறார். தந்தை இறந்ததை மகன் வீடியோ காலில் பார்க்கிறான். இதை அன்று பதிவு செய்து வைத்திருந்து இன்று ரீவைன் செய்து காட்டுகிறார் அக்கால அகாலக் கொடுமைகளை.

அந்தக் காலகட்டத்தில் நடந்த குழந்தைகளின் இணையவழி வகுப்புகளைப் பற்றியும் அதில் குழந்தைகள் என்ன செய்தார்கள் என்பது பற்றியும் பேசியிருக்கிறார்.

கோடைக் காலத்து மரத்தைப் பற்றித் தாத்தா கதை சொல்லத் தொடங்கியிருக்கிறார். தூங்கி எழுந்த பேரன் வற்றிய குளக்கரையிலும், காய்ந்த மரத்திலும் காக்கை குருவிகளை வரைந்து காட்ட தன் தவறை உணர்ந்த தாத்தா மறுநாள் காக்கைக் குருவிகளுக்காக வசந்தகால மரத்தைப் பற்றிக் கதை சொல்ல ஆரம்பித்திருக்கிறார். குழந்தைகள்தான் எப்போதும் பெரியவர்களுக்குப் பாடம் சொல்லித்தரும் ஆசான்கள் என்பதைத்தான் இப்படிக் காட்டுகிறார்.

நீச்சல் அடிக்க, மீன் பிடிக்க, மீன்களுக்கு உணவு போட, அங்கே துணி துவைக்க எனப் படித்துறையில் நடக்கும் எல்லாவற்றையும் தாத்தாதான் கற்றுக்கொடுத்தார். அமாவாசைக்கு மட்டும் மேற்சொன்ன எதுவும் நடக்காது. அழைத்துப் போக மாட்டார். ஏன் என்று கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் நீயாகத் தெரிந்துகொள்வாய் என்றார். பின்னொரு அமாவாசை நாளில் அதே படித்துறையில் அமர்ந்து அதே தாத்தாவிற்குத் திதி கொடுத்துத் தெரிந்துகொண்டிருக்கிறார் தாத்தா சொல்லாமல் விட்ட விடையை.

தீப்பெட்டி, பட்டாசுத் தொழிலாளர்கள் குறித்தும் இரண்டு கவிதைகள் இருக்கின்றன. வயிற்றை நிரப்பக் கரியும் மருந்தும் கலந்த கோந்துப்பூக்கள் கைகளில் எப்போதும் பூத்தே இருக்கும் என்கிறார்.

சில மைல் தூரம் வயல்வெளி ஊடாக நடந்து பள்ளிக்குச் சென்று படித்ததில் இருந்து அதே நிலங்கள் இன்று மனிதர்களைக் காண ஏங்குவது வரை மனிதன் என்னவாக மாறியிருக்கிறான் என்று காலச் சரித்திரத்தைப் புரட்டுகிறார். பாதம் தேய நடந்த நிலம் ரியல் எஸ்டேட், மால்கள் ஆவதையும் சேர்த்தே பேசுகிறார்.

பாட்டி மகள் பிறந்ததற்குப் பூவரசம் மரம் நட்ச் சொல்கிறாள். அதை வெட்டி அவள் திருமணச் செலவைப் பார்த்துக்கொள்ளலாம் என்று. மகள் முள்ளின் இடுக்கில் பூக்கும் ரோஜாவைப் பார்க்க ரோஜாச்செடி வாங்க வேண்டுமெனப் பணம் கேட்கிறாள். சிறுபிள்ளையாக இருந்தபோது அருகில் இருக்கும் நிலா பெரிய பிள்ளையானதும் தூரமாய்ப் போவதாகச் சொல்லி இந்த இரு சம்பவங்களையும் ஒப்பீடு செய்கிறார். நல்லதொரு உவமானக் கவிதை இது.

அலையும் பறவைக்குக் கூழாங்கல் இளைப்பு மட்டும்தான் ஆற்றுகிறது. போர்வெல் தண்ணீர்தான் தாகம் தீர்க்கிறது எனக் கூழாங்கல் கொண்டு நம்மை இடறிவிழ வைக்கிறார்.

சுருக்கமான சில கவிதைகளும் உள்ளன. அதில் எறும்புகள் போன தடங்களில் தேடிப் பார்த்தாலும் கிடைக்காதது ஒழுங்கும் சுறுசுறுப்பும் என்பது குறிப்பிடும்படியான கவிதை.

கடைசியாக ஒரு இளைஞனைப்போல் தனது வயதிற்கே உரிய சில காதல் கவிதைகளையும் எழுதி முடித்திருக்கிறார். முதல் தொகுப்பைவிட கவிஞரின் இரண்டாவது தொகுப்பு மேம்பட்ட தொகுப்பாக வெளிவந்திருக்கிறது. ■

சிறுகதை

ரம்யா அருண் ராயன்



# கிடா நோட்டம்

"இங்கனயா?" கண்ணில் ஆச்சரியத்துடன் கேட்டான் பாபு.

"ஆமாண்ணே, இன்னிக்கு இங்கனதான், ரோந்துக்காரன்ட்ட சொல்லிவச்சுட்டேன், இந்த ஏரியாவுக்கு இன்னிக்கு வரமாட்டான், நாளைக்கு அவன் வீட்டுக்கு ஆட்டுக்காலும், ரெண்டு கிலோ கறியும் தந்தனுப்பிரு," பதில் கூறிய கிளைவ்விடம்,

"இந்த வீதில கொச்சன் வீட்ல மட்டும்தானடே ஆடு இருக்கு?" என்றான் பாபு.

"அதுக்கு என்னஙண்ணே இப்ப? அந்த ஆடுகாலியும் ஓடுகாலியும்தான் க்ராஸே இல்லாம அம்புட்டும் கொடியாடா வளர்க்குதுக, எந்த வீடாருந்தா என்ன? எத சொளமாத்துனாலும் காசுதாங் கேட்டியா?"

ஆட்டோவை அந்தச் சந்திற்குள்ளேயே நிறுத்திக்கொண்டார்கள்.

நிசப்தமாய் இருந்தது. இரவு என்பதால் இல்லை, பகலிலேயே அந்த முடுக்கு நிசப்தமாய்தான் இருக்கும். காரணம், சொத்துத்தகராறில் சிதலமடைந்து கொண்டிருக்கிற, ஆளற்ற, அந்தப் பெரிய பங்களா வீடு. ஊரின் பிரதான வீதியில் தலைவாசலைக் கொண்ட அதன் இடப்புறமுள்ள முடுக்கினை, பின்புறமுள்ள முடுக்கு ஒரு கூட்டல்குறிபோல் சந்திக்கும் இடத்தில், பங்களாவின் இடிபாடுகள் விழுந்து அடைத்திருக்கும்.

பின்கட்டின் சமையலறை மேற்கூரை விழுந்து பாளைக்கற்கள் துருத்தியபடி தெரிவது அந்த இடத்துக்கே ஒரு விகாரத்தை வழங்கியிருந்தது. பழம்பொருட்கள் திருட இரவில் அவ்வப்போது ஆள் நடமாடுவதாய் அரசல் புரசலாய் ஊருக்குள் கதை உலவுவதுண்டு, ஆனால் இதுவரை எதையும் யாரும் கண்டதில்லை. எப்போது வேண்டுமானாலும் இடியலாம் என்ற அபாயத்தைச் சிறுவர்களிடம் சொன்னால் புரியாது என்பதால் பேய்க்கதைகளும் பூச்சாண்டிக் கதைகளுமாய் ஏகப்பட்ட கதைகட்டி வைத்திருந்தனர் பங்களாவைச் சுற்றி.

பங்களாவின் வலப்புறமுள்ள தென்னைகள் கருகிய சிறிய தோட்டத்தின் சுற்றுச்சுவருக்கு அந்தப் பக்கம் மூன்று வீடுகள். அதில் மூன்றாவது வீடு, கொச்சனின் வீடு. அங்குதான் இன்றைய ஆடு திருட்டை நிர்ணயித்திருக்கிறான் கிளைவ். பாபு, கறிக்கடை வைத்திருக்கிறான். விலைபேசி வாங்கும் ஆடுகள் தவிர திருட்டாடுகள் என எல்லாம் சேர்ந்து வசதியாக வைத்திருக்கிறது அவனை. கிளைவ் அவனது பல தூண்டில்களில் ஒரு தூண்டில். ஆனால் திறமையான தூண்டில்.

பாபு மற்றவர்களுக்கெல்லாம் திருட்டில் உடன்செல்வது இல்லை, ஆனால் கிளைவின் திருட்டை உடனிருந்து வேடிக்கை பார்ப்பதே அலாதியானது என்பதால் பலமுறை அவனுடன் சென்றிருக்கிறான். இன்று கிளைவ் உள்ளூரிலேயே குறி வைத்திருக்கும் அந்த வீடு உண்மையிலேயே பாபுவுக்கு சுவாரசியத்தை இன்னும் அதிகமாக்கியது.

இந்தக் கொச்சனுடன்தான் கிளைவ் மனைவியான வெயிலாள் ஒன்றரை வருடம் முன்பு ஓடி வந்துவிட்டாள்.

“ஏன்டா கிளைவ்! ஒன்னவிட்டு ஓடிப்போற அளவுக்கு அப்டி என்னத்த காணாததக் கண்டுட்டா உன் பொண்டாட்டி அந்தக் கொச்சன்கிட்ட?”

“வெளயாட்டுத்தனமா இருந்துட்டம்ண்ணே. அப்பல்லாம் அடிக்கடி போலிஸ்ல மாட்டிக்குவேன், என்னய வெளிய கொண்டுவர கொச்சன்தான் அவளுக்கு உதவி செஞ்சதா அப்பப்ப சொல்லுவா... கவனிக்காம உட்டுட்டேன் நானும்.

ஒருநா செயில்லருந்து நான் திரும்புறப்ப கையில ஒரு சோடி ஆட்டுக்குட்டியோட இருந்தா, அதுவளுக்குக் கழுத்துச் சலங்கைமணி போட்டு விட்டுட்டு இருந்தா... ஏதுடினு கேட்டா பிறந்தநாள் பரிசா இந்த ரெட்டக்குட்டிய கொச்சன் கொடுத்தான்னா... எப்ப பொறந்தநாளுனு அப்றம்தான் கேட்டேண்ணே இந்த முட்டாப்பய... அவளுக்கு நான் எதுவுமே செய்யாம செயில்ல கெடந்திருக்கேண்ணே! என் பொறந்தநாளுக்கு ஆச ஆசையா அவ கொலுசுலருந்து முத்தெடுத்து அத சேர்த்துப் பின்னின கருப்புக்கயிற அருணாக்கொடியா கட்டிவிட்டா எனக்கு... திருடப்போறப்ப அதைக் கழட்டி வச்சுட்டுதான் போவேன், ஏன்னா மாட்டிக்கிட்டா செயில்ல போடுறப்ப அருணாக்கொடியல்லாம் அறுத்துவிட்ருவாங்கல்லண்ணே, தொலஞ்சுறக்கூடாதுல்ல, ஆனா இன்னிக்குக் கழட்டி வச்சுட்டு வரல்ல” என்றபடி இடுப்பைத் தொட்டுப் பார்த்துக்கொண்டான்.

“ஒனக்கு சந்தேகமே வரலயாடா அவமேல?”

“வந்துச்சுண்ணே, ஆனா அப்ப எல்லாமே கையை மீறிப்போயிருச்சு... ஒருநா மனுவேல் வீட்ல திருடப்போறேன்னு அவகிட்ட சொல்லிட்டுத்தான் போனேன்... மனுவேல் வீடு எங்கனயிருக்கு...? கொச்சன் வீடு எங்கனயிருக்கு...? அம்மாந்தூரம் வந்து என்னய கையாற மெய்யாற பிடிச்சது அன்னிக்குக் கொச்சன்தான். கரெண்ட் கம்பத்துல கட்டிவச்சுப் போறவாரவன்லாம் யோக்கியனுவ மாதிரி அடிச்சானுவ, ஆனா கொச்சன்தான் திருக்கைவால வச்சு சொடுக்கிச் சொடுக்கி அடிச்சாம்ண்ணே! அவ்ளோ கொடூரமா போலிஸ் கூட அடிக்க மாட்டாங்கண்ணே! என்மேல எம்புட்டு வெறி தெரியுமா அவனுக்கு?

அப்பதான் எனக்கு வெயிலா மேல சந்தேகம் வந்துச்சு. இவ பூச்சொல்லித்தான் அவன் வந்திருப்பானோன்னு. அந்தத் தடவை அவ செயில்ல வந்து என்னய பார்க்கவே இல்லைண்ணே! ஆனா அவ அவன் வீட்டுக்கே போயிட்டதாவும் அவனயே கல்யாணம் பண்ணிக்கிட்டதாவும் செயில்லயே கேள்விப்பட்டேன். அந்தப்போதான் தண்டனை மொதோதடவையா தண்டனையா தெரிஞ்சுது...

தண்டன முடிஞ்சு வீடு திரும்பினா வீட்ல அவ இல்ல, அவ பொருள் ஒன்னும் இல்ல, அந்த ரெட்ட ஆட்டுக்குட்டிங்க இல்ல, வீடு வெறுமையா இருந்துச்சு. அவ நடமாடுன இடமெல்லாம் எனக்கு நடமாடக் கூசுச்சுண்ணே! அவ்ளவா வீட்டுக்கே போறதில்ல நானு. இப்ப நானும் என் திருட்டும் மட்டும்தான், அததான் ரசிச்சுப் பண்றேன்.

அந்தச் சம்பவத்துக்கு அப்றமா போலிஸ்ல மாட்டவும் இல்ல. சொல்லப்போனா நிறைய துப்புதுலக்க போலிஸ்க்கு உதவுனதால அங்கயும் ஃப்ரெண்டு பிடிச்சுக்கிட்டேன்.”

பாபு எதுவும் பதில் கூறவில்லை, பதிலை எதிர்பார்த்து இப்போது கிளைவ் பேசவில்லை என்பது அவனுக்குத் தெரியும். மேலும் திருட்டுக்குப் பழகிய கிளைவ் குரல்போல இறுக்குரல் இல்லை பாபுவுக்கு. சந்தைகளில் ஏலம் எடுக்கவும், கடையின் கூட்டத்தில் இரைந்துபேசவும் பழகிய குரல் அது. அதனால் மிகக் குறைவாகவே பேசினான்.

இடிபாடுகளின் மீது ஏறி பங்களாவின் சமையலறையை அடைந்ததும் கிளைவ் முதுகில் தொங்கிய பையை எடுத்துத் தரையில் வைத்துவிட்டுக் குத்தவைத்து அமர்ந்துகொண்டான். பைக்குள்ளிருந்து இரு சோடி கையுறைகளை எடுத்தவன் தானும் அணிந்துகொண்டு பாபுவுக்கும் கொடுத்தான். பைக்குள் நெகிழித்தாளில் இருந்த வேகவைத்த கறித்துண்டங்களோடு ஏதோ மாத்திரையை எடுத்துக் கல்லால் பொடித்துக் கலந்து மறுபடியும் நெகிழித்தாளில் சுற்றிக்கொண்டான்.

சமையலறையிலிருந்து தோட்டத்திற்குச் செல்லும் வழியில் நுழைந்து சுற்றுச்சுவர் பக்கமாய் நின்றுகொண்டு கொச்சன் மாதிரியே மெல்லிய சீழ்க்கை ஒலி எழுப்பினான். இருந்த மூன்று நாய்களும் ஓடிவந்தன. சற்று சந்தேகமாக நிமிர்ந்து மதிலைப் பார்த்துக் குரைத்தன. கறித்துண்டங்களை ஓரத்தில் குவிந்து கிடந்த தென்னை ஓலைகள் மீது ஒவ்வொன்றாய் எறிந்தான். ஒரு நாய் உண்ணத்தொடங்கியதும் மற்ற நாய்களும் குரைப்பதை விட்டுவிட்டுச் சற்று வேடிக்கை பார்த்தன, பிறகு அவையும் உண்ணத்தொடங்கின. கொச்சனின் இருசக்கர வாகனம் இல்லையாதலால் வீட்டிற்கு இன்னும் வரவில்லை போலத் தெரிந்தது. வீட்டுக்குள் வெயிலாவின் நடமாட்டம் இருந்தது.

அவள் செய்கிற தேங்காய்ப்பால் விட்ட பூண்டுச்சோறு மணத்தை இத்தனை காலங்கள் கழித்தும் அவன் நாசி அடையாளம் கண்டுகொண்டு நாவில் நீரூறவைத்தது. எப்படியும் இதற்குக் கருப்பு உளுந்து வறுத்து அம்மியில் அரைத்த துவையல்தான் வைத்திருப்பாள். நினைக்கும்போதே மதில் தாண்டி எகிறிக் குதித்துப்போய் எனக்கொரு வாய் ‘ஆ’ எனக் கேட்டுவிடலாம் போல வந்தது கிளைவுக்கு. சிறிதுநேரம் மதில்மேல் தலைசாய்த்துக்கொண்டு நின்றான்.

பாபுவைத் திரும்பிப் பார்த்த கிளைவ்,

“நேரமிருக்கு அண்ணே! மருந்து வேல செய்யனும்... கொச்சன் வீட்டுக்கு வந்து சாப்பிட்டுத் தூங்கனும், காத்திருப்போம் வா!” என்றான். இருவரும் மறுபடி பங்களா சமையலறைக்கு வந்தனர்.

“மாடியறைக்குப் போலாம் வர்றியாண்ணே? மண்டைல கல்லு விழுந்துருமோனு பயமாருந்தா நீ கெளம்பு, நான் பாத்துக்கறேன். எல்லாம் தயாரானப்றம் ஃபோன் அடிக்கேன் வா!”

“இல்ல வர்றேன்... வா...”

சமையலறையிலிருந்து வரவேற்பறைக்குள் நுழைந்து மரப்படிகளில் ஏறி மாடி அறையை அடைந்தனர். ஒரு படி மட்டும் சேதாரமாகியிருந்தது. அதைத் தாண்டி எட்டுவைத்து அடுத்த படியில் ஏறவேண்டிய இடத்தில் தடுமாறிய பாபுவைத் தாங்கி ஏற்றிவிட்டான் கிளைவ்.

மாடி அறையிலிருந்த பலகணியிலிருந்து கொச்சன் வீடு முழுவதும் நிலா வெளிச்சத்தில் தெளிவாய்த் தெரிந்தது. தென்னங்கருக்கு மட்டையால் ‘ட’ வடிவில் வேலியிடப்பட்டிருந்த இடத்தில் வலது மூலையில் ஓட்டுச்சரிவு வீடு, வீட்டை ஒட்டி கல்நார் கூரையிட்ட கழிவறை, இடது மூலையில் பெரிய தண்ணீர்த்தொட்டியை மையப்படுத்தி கிடுகுகளால் சுவர் எழுப்பப்பட்ட குளியலறை, மீதி காலியிடம் பூராவும் ஆங்காங்கு முளையடித்துக் கட்டிய ஆடுகளும் குட்டிகளுமாய் எப்படியும் ஒரு இருபத்தைந்தாவது இருக்கும். எல்லாம் கொடியாடு வகைதான். இதற்குள் கொச்சன் வந்துவிட்டான் போலிருந்தது, அவனது

இருசக்கர வாகனம் இருந்தது. நோட்டம் விட்டுக்கொண்டிருந்த கிளைவை பாபுவின் குரல் கலைத்தது.

“இது என்னதுடா கிளைவ்? இத்தா பெரிய துணியை மேலே தொங்கவிட்டுருக்காங்க?”

அறையின் மேற்புறத்தில் நீளமான மரச்சட்டத்தில் தொங்கிய அந்தத் துணி அவ்வளவு மசங்கலான இரவிலும் கண்ணுக்குத் தென்பட்டது.

“அது பேரு பங்கா ண்ணே! இதான் அந்தக் காலத்துக் காத்தாடி. நீளமா மரச்சட்டத்துல இப்டி கெட்டித் துணிய தொங்கவிட்டுருப்பாங்க... சட்டத்துலருந்து கயிறு கட்டி எதுனா சாளரம் வழியா வெளில கயித்தோட நுனியை வச்சிருப்பாங்க, அதைப் பிடிச்சு இப்டியும் அப்டியுமா இழுக்க வேலையாளுங்க இருப்பாங்க. அது அசையுறப்ப காத்து வீசும்ல்ல, அதான் டெக்கினிக்கி.”

“ராசவாழ்க்கை.”

“நீ படுக்கறியாண்ணே இந்தத் தேந்தாக் கட்டில்ல, நான் பங்கா போடுறேன்” எனக் கூறியவாறே சுவரின் அந்தப் பக்கம் போய்க் கயிறை இழுத்து அசைக்க அறையெங்கும் காற்றோடு தூசியும் பரவியது. சற்று சிரமத்தோடு தும்மலை அடக்கிக்கொண்டான் பாபு. வௌவால்கள் கலைந்து பறக்கத்தொடங்கியது. ஒரு வௌவாலுக்காகக் குனிந்து விலகிய பாபு சற்று பயம் தனக்குள் தொடங்கியிருப்பதை உணர்ந்தான். புகைக்கவேண்டும் போலிருந்தது. ஒரு சிகரெட்டை எடுத்து வாயில் வைத்து, பற்ற வைப்பதற்காக லைட்டரைப் பொருத்தியவன் அந்த ஒளியில் கண்முன் தெரிந்த அந்தப் பிரமாண்ட ஓவியத்தைப் பார்த்தான்.

கம்பீரமான ஒரு பெண் உருவம், அவளது அறையாகத்தான் இருக்கவேண்டும் அது. அவளது ஆடை ஒவ்வொரு நுனியும் நீண்டு அந்த சுவர் முழுக்கப் பரவிக்கிடந்தது. ஒரு கணம் அந்தச் சல்லாத்துணிக்குள் தானே மாட்டியிருப்பதுபோல் உணர்ந்தான்.

“அண்ணே அதையெல்லாம் பாக்காதண்ணே! இந்த மாதிரி பாத்தமின்னா நம்ம புத்தி அமானுஷ்யத்துல போகும்... அப்றம் ஒவ்வொரு திருடனும் புத்தி பேதலிச்சுத்தான் போவனும்... நாமதான் மத்தவங்கள பயமுறுத்தனுமே ஒழிய நம்ம பயந்துரக்கூடாது” சொல்லியபடியே கிளைவ் பலகணியில் போய் அமர்ந்துகொண்டான்.

கொச்சன் வீட்டில் அரவங்கள் குறைந்தன. சாப்பாட்டுத் தட்டோடு வந்து நாய்த்தட்டங்களில் உணவிடும் வெயிலாவை வெறித்த கிளைவ்,

“அப்டியே கட்டுடாம இருக்கா தளுக்கி” வாய்விட்டே சொன்னான். நாய்கள் உணவுத்தட்டத்தின் அருகில் நின்று அவளுக்கு வாலை ஆட்டினவே தவிர உண்ணவில்லை. அவள் நாய்களிடம் கையை ஆட்டி ஆட்டி ஏதோ பேசினாள். பிறகு வீட்டுக்குள் நுழைந்தவள் தோளில் மாற்றுத்துணியோடு வந்தாள். குளியல் பிறையில் குண்டு பல்பு எரிந்தது.

ஏதோ கேட்டுக்கொண்டு அருகில் வந்த பாபுவை “நீ இங்க வராதண்ணே! என் பொண்டாட்டி குளிக்கா...” என்றான். அவனை விசித்திரமாய்ப் பார்த்த பாபு உள்ளே நகர்ந்து தரையில் அமர்ந்துகொண்டான். கீழ்க் குளியலறையில் வெட்டவெளிச்சமாகிக் கொண்டிருந்த வெயிலாவைப் பார்த்த கண்களை கிளைவ் அசைக்கவே இல்லை. அவனது கண்களில் தெரிந்த பல்பின் பிம்பங்களை பாபு பார்த்தபடி இருந்தான், அவை நீரில் மிதந்து மிதந்து உருண்டு வழிந்தும் கண்களில் இருந்து வற்றாமல் இருந்தன. கண்ணின் ஒளி அணைந்தபோது பெருமூச்சுடன் திரும்பியவனிடம் பாபு, “குளிச்சு முடிச்சுட்டாளா?” என்றான்.

“ம்ம்...”

“ஏன்டா இந்த அகாலத்துலயுமா குளிப்பாங்க?”

“அவ அப்டிதாண்ணே! அவ ராவுல குளிச்சா அன்னிக்கு ராப்பூரா கூட இருக்கவன தூங்க விடமாட்டானு அர்த்தம்...” கிளைவின் குரல் நனைந்து ஒலித்தது. அவனை அணைத்து ஆறுதல் சொல்லவேண்டும் போல இருந்தது பாபுவுக்கு, ஆனால் ஆறுதல்கள் எதையும் மீட்டுவிடாது என்பதைப் புரிந்துகொள்ளும் சந்தர்ப்பங்களே அதிகம் நிறைந்த ஒரு வாழ்க்கையை வலிக்க வலிக்க

வாழ்கிறவர்களுக்கு, ஆறுதல் சொல்வதைவிட அபத்தம் வேறொன்றுமில்லை. அவன் கவனத்தை, அவனது ரசனைக்குரிய ஒன்றிற்கு மடை மாற்றுவதே இப்போதைய தேவை என உணர்ந்து,

"ராப்பூரா அவிங்க கண்ணு முழிச்சா நம்ம எப்டிறா திருடுறது?" என்றான் பாபு.

"தூக்கத்த விட இதாம்ணே இன்னும் வசதி! இறங்குவோம்ண்ணே! சரியா இருக்கும், நீ வாசலுக்கு வெளிய நில்லு, நான் உள்ள போயி ஆட்டோட வாரேன்."

"செம்போர கெடச்சா கொண்டு வா, தோலுக்கு ஏக டிமாண்டு."

சம்மதமாய்த் தலையாட்டினான் கிளைவ்.

இருவரும் இறங்கி இடிபாடு தாண்டி கொச்சன் வீட்டுமுன் வந்து நின்றனர். பனைமட்டை வேலியில் கருக்குமட்டை படலாலேயே கதவு இருந்தது. படலின் உட்புறமாய்ச் சங்கிலியைப் பிணைத்துத் தொங்கவிடப்பட்டிருந்த பூட்டைப் பார்த்து எள்ளலாய்ச் சிரித்தவன், கதவையும் வேலியையும் இணைத்த நார்க்கட்டுகளை ஆக்சா ப்ளேடு கொண்டு அறுத்துப் படலைத் திறந்தான். முதலில் நேரே வீடு நோக்கிச் சென்றவன், பூட்டியிருந்த கதவுகளின் அந்தப் பக்கம் ஏதோ சினிமாப்பாடல் ஓடுவதை உணர்ந்தான். அது அவன் வீட்டில் முன்பெல்லாம் அடிக்கடி ஒலிக்க விடப்படுகிற மிகப் பழக்கமான பாடல்களில் ஒன்று. ஆனால், அந்தப் பாடலை முழுதாய்க் கேட்டு ஒன்றரை வருடம் இருக்குமென எண்ணிக்கொண்டான்.

இடுப்பிலிருந்த அருணாக்கொடியை உருவி எடுத்து விரல்நுனிகளால் பிடித்து ஓரிரு நொடிகள் அதை உற்றுப்பார்த்தவன், அதைக்கொண்டு இரண்டு கதவுகளின் கைப்பிடிகளையும் சேர்த்து இறுக்கிக் கட்டினான். பிறகு ஆடுகளிடம் வந்தவன் அந்தக் கழுத்து மணி போட்ட ஆட்டுக்குட்டிகளைத் தேடினான். ஒரே முளையில் கட்டிப்போடப்பட்டு கழுத்துமணியோடு இருந்த அந்தச் செம்போரையும் கரும்போரையும் இப்போது கிடாய்களாகியிருந்தன. அருகில் வந்து வெறுப்போடு அவற்றைப் பார்த்தபடி நின்றவன், அதனதன் தலைக்கயிறை அறுத்து, அதனதன் முன்னங்கால் இரண்டும் ஒரு கட்டு, பின்னங்கால் இரண்டும் ஒரு கட்டு எனக் கட்டினான். கழுத்து மணிகளை அறுத்தவன், அதை எடுத்து வீட்டு வாசலிலேயே கொண்டுபோய் வைத்தான். அவற்றின் சிறுசிறு சத்தங்கள் எதையும் அவனும் பொருட்படுத்தவில்லை, மூடிக்கிடந்த கதவுகளும் பொருட்படுத்தவில்லை, மயக்கத்திலிருந்த நாய்களும் பொருட்படுத்தவில்லை.

ஒரு ஆட்டைத் தூக்கி அலேக்காகத் தோளில் போட்டுக்கொண்டு வெளியே ஓடி வந்தவன் தயாராய் இருந்த பாபுவிடம் கொடுத்துவிட்டு, ஓடிப்போய் மறு ஆட்டையும் தூக்கி வந்தான். இருவருமாக வேகமாக ஓடிவந்து, இடிபாடுகள் கடந்து ஆட்டோவை அடைந்தனர். ஆடுகளை ஆட்டோ பின்னிருக்கையில் போட்டுப் பூட்டிவிட்டு பாபு வண்டியைக் கிளப்பி சாலைக்குச் சென்றான், பின்னாலேயே கிளைவ் வண்டித்தடத்தைக் கால்களால் மண்ணைத் தள்ளித்தள்ளி அழித்தபடியே ஓடிவந்து வண்டியில் ஏறிக்கொண்டான்.

வண்டியை ஓட்டிக்கொண்டிருந்த பாபுவிடம் கிளைவ், "அண்ணே! அந்த க்ளவுசக்கொடு! செருப்பையும் கொஞ்ச நாளைக்கு ஒளிச்சு வச்சிரு! இந்தத் தடம்லாம் சாட்சிண்ணே!" என்றான்.

"பெரிய வெண்ணெயாட்டம் பேசுடா இதுலாம்... ஏன்டா மயிராண்டி... அறிவிருக்காடா ஒனக்கு? அருணாக்கொடிய கொண்டு கதவுல மாட்டுனா நீதான்னு கண்டுபிடிச்சுட மாட்டாங்களா?"

"கண்டுபிடிக்கட்டும்ண்ணே... போலிஸ் கண்டுபிடிக்கறதுக்குனு ஒரு தடயத்தையும் விடல்ல, ஆனா என் பொண்டாட்டி கண்டுபிடிக்கத்தான் அந்தத் தடயத்த விட்டுட்டு வந்திருக்கேன்... அந்த அருணாக்கொடி அவளுக்கு மட்டும்தான் தெரியும், இன்னும் அதோட நெனப்பு அவளுக்கு இருக்கானு எனக்குத் தெரியனும்ண்ணே!" என்றான்.

■

தொடர் - 1

**தமிழ் நிலத்து வீர மங்கையர்கள்**

**தி.கலையரசி**








# தில்லையாடி வள்ளியம்மை

இந்தியாவில் நடந்த போராட்டங்கள் மிக நீண்ட வரலாற்று அடையாளங்களைக் கொண்டவை. மற்ற பகுதிகளை விட தமிழ்ச் சமூகத்தில் வாழ்ந்த பெண்கள் சுயமரியாதை உணர்வுகளால், அறிவார்ந்தச் சிந்தனைகளால், செயல் திறன்களால் சமூகப் பிணிகளைப் போக்குவதற்குச் செய்த தியாகங்கள் மகத்தானவை.

காலனி ஆதிக்க ஒழிப்புக்கும், சாதி மதம் ஆணாதிக்கம் போன்ற கருத்தாக்கங்களுக்கு எதிரான போராட்டங்களுக்கும் வழிவகுத்த பெண்களின் பொறுப்பும் வீரமும் பண்டைய காலம் முதற்கொண்டே தமிழ் நிலம் புகட்டியவை. அனைத்து வித அடக்குமுறைகளையும் வீழ்த்திய வரலாறு நம் தமிழ்ப் பெண்களுடையது.

ஆண்களை அடக்கியாளும் அளவிற்கு உடல் வலிமையும் மனோதிடமும் பெண்களுக்கு இருந்திருக்கின்றன என்பதை ஆய்வுகளில் முன்னோடியான அறிஞர் ஏங்கெல்சு கூறியுள்ளார். பெண்ணின் தலைமையிலேயே மனித இனம் சமுதாயமாகப் பரிணாம வளர்ச்சி அடைந்திருக்கும் என்பது அவரின் குடும்பம் தனிச்சொத்து அரசு என்கிற நூலின்வழி அறியப்படுகிறது.

ஆனால் காலப்போக்கில், பெண் பலவீனமானவள், ஆண் துணையைச் சார்ந்துதான் வாழ இயலும் போன்ற எண்ணங்கள் நம் மனங்களில் எப்படியோ விதைக்கப்பட்டுவிட்டன. இங்கு மட்டுமல்லாமல், உலகின் ஏனைய பகுதிகளிலும் சொத்துடைமைச் சிந்தனையும், மதங்களும் தோன்றிய பிறகு பெண்கள் புனிதப்படுத்தப்பட்டார்கள். ஆணுக்குக் கீழ்ப்படிந்து வாழ வேண்டிய நிர்ப்பந்தம் பெண்களுக்கு ஏற்பட்டது.

கல்வி, கருத்துச் சுதந்திரம், தனி மனித உரிமைகள் போன்றவை மறுக்கப்பட்டு இழிநிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அதிலும் சமூகத்தின் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை சமூகப் பெண்கள் அனுபவித்த இன்னல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இந்த நாட்டிலா இத்தகைய கொடுந்துயரங்கள் நடந்தனவென்று நெஞ்சம் கலங்க வைக்கும் அவலங்கள் அவை.

இந்தியாவுக்கான சுதந்திரப் போராட்டங்களிலும், சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிரான விடுதலைப் போராட்டங்களிலும் பெண்களின் பங்களிப்பு அளப்பரியவை. தமிழ் மண்ணில் செறிந்த அறிவும் துணிவும் மிக்க பெண்களின் செயல்பாடுகள் வியப்புக்குரியவை.

எல்லாக் காலகட்டங்களிலும் சமூகமானது மதம், கல்வி, அரசு, நீதி, கலை, இலக்கியம், பொருளாதாரக் கோட்பாடு போன்றவற்றில் மாற்றங்களைப் பார்க்கும்போது, ஆண் - பெண் உறவிலும் அந்த மாற்றங்கள் நிகழ்வதைக் காண முடிகிறது. பாலியல் பேதமற்ற சமத்துவச் சமுதாயம் எத்தகைய சிக்கல்களையும் சரிகட்டும் திறன்களையும் தானாகவே தகவமைத்துக் கொள்கிறது. அதனை உணர்ந்த பெண்களின் போராட்ட வரலாற்றினை எதிர்காலத்தின் குறிப்பேட்டில் நாம் சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

தமிழ் இயக்கங்களில் பெண்களின் ஈடு இணையில்லாத பங்களிப்புகளைத் தொடர் கட்டுரையாகத் தகவு இதழில் எழுதத் தொடங்குகிறேன்.

இதன் வரிசையில் இம்மாதம்...

தில்லையாடி வள்ளியம்மை

*******************************

படுக்கையில் உடல் குன்றி இருந்தபோதும் மனம் குன்றாத உறுதியுடன் படுத்துக் கிடக்கும் வெறும் 15 வயதே நிரம்பிய சிறுமியைக் காண வருகிறார் காந்தியடிகள்.

“சிறை சென்றதால்தானே உன் உடல்நலம் இப்படி ஆகிவிட்டது. அதற்காக வருத்தப்படுகிறாயா?” என்று அவர் கேட்டதற்கு,

“வருத்தமா? நிச்சயமாக இல்லை! இப்போது இன்னொரு முறை கைது செய்யப்பட்டால் கூட சிறை செல்ல நான் தயார்” என்று பதில் தருகிறார் அந்தச் சிறுமி.

உள்ளத்தில் இருக்கும் தைரியத்தை வியந்து மீண்டும் காந்தி கேட்கிறார்,

“சிறையில் நீ இறந்துபோவதாக இருந்தால் என்ன செய்வாய்?”

“அதைப்பற்றிய கவலை எனக்கில்லை. தாய் நாட்டுக்காக உயிரைக் கொடுக்க விரும்பாதவர்கள் யார் இருப்பார்கள்?” என்கிறார் அதே தெளிவுடன்.

பாரிஸ்டர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி, மகாத்மா காந்தியாக உருவெடுக்கும் பாதையை அந்த நிலைதான் வழிவகுத்துக் கொடுத்தது.

“எனக்கு முதன் முதலில் விடுதலை உணர்வை ஊட்டிய பெருமைக்குரியவர்” என்று காந்தி பாராட்டியது வேறு எந்தப் பெரிய தேசத் தலைவர்களையும் அல்ல; மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள தில்லையாடி என்ற ஊரைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழ்ப்பெண் ‘வள்ளியம்மை’ என்ற உள்ளத்துணிவு மிக்கவளைத்தான்.

லண்டனில் 1914ஆம் ஆண்டு லாலா லஜபதிராய், முகமது அலி ஜின்னா, கவிக்குயில் சரோஜினி தேவி ஆகியோர் கலந்துகொண்ட கூட்டத்தில் வள்ளியம்மையைக் குறிப்பிட்டு, “இப்படிப்பட்டவர்களே இந்திய நாட்டை உருவாக்குவார்கள். இத்தகைய தியாகிகள் முன் நம்மைப் போன்றவர்கள் எல்லாம் சாதாரண மனிதர்களே!” என்கிறார் காந்தி.

யார் இந்த வள்ளியம்மை? இவரின் குடும்பப் பின்னணியைக் கொஞ்சம் பார்ப்போம்.

தமிழ்நாட்டுக்கும் தென்னாப்பிரிக்காவுக்கும் பூர்வீகத் தொடர்பும் பந்தமும் உண்டு. அங்கிருக்கும் தங்கம் வைரச்சுரங்கங்களுக்குத் தமிழ்நாட்டில் இருந்து வேலை செய்ய ஆட்களை அழைத்துப் போவது வழக்கம். தென்னாப்பிரிக்காவும் இந்தியாவும் பிரிட்டிஷார் ஆதிக்கத்தில் இருந்தன. ஓர் அடிமை தேசத்தில் இருந்து இன்னோர் அடிமை தேசத்துக்கு மக்களை அழைத்துப் போனார்கள். பழவேற்காட்டிலும், நாகப்பட்டினத்திலும் சதுரங்கப்பட்டணத்திலும் இருந்து அழைத்துப் போய்த் தென்னாப்பிரிக்காவில் நியூகேப், நேடால், டிரான்ஸ்வால், ஆரஞ்சு ஆகிய மாகாணங்களுக்குத் தமிழர்களைக் குடியேற்றினார்கள்.

1860ஆம் ஆண்டு, முதல் கப்பல் போனது. 1911ஆம் ஆண்டு வரை இந்த ஆள் பிடிக்கும் வர்த்தகம் நடந்தது. தோராயமான கணக்கின்படி அந்த 50 ஆண்டுகளில் ஒரு லட்சத்து 52 ஆயிரம் தமிழர்கள் தென்னாப்பிரிக்காவுக்கு அழைத்து வரப்பட்டனர். கரும்புத் தோட்டத்திலும் சுரங்க வேலையிலும் அயராது உழைத்துத் துன்புற்றனர். அதற்குப் பரிகாரமாகக் குறைந்தபட்ச மரியாதையும் உரிமையும் கூட தரப்படவே இல்லை.

இந்த மக்களுள் ஒருவர்தான்

தில்லையாடியைச் சேர்ந்த ஆர்.முனுசாமி. காய்கறிக்கடை வைத்திருந்த இவர், ஜோகன்ஸ்பர்க்கில் வாழ்ந்து வந்த ஜானகியைத் திருமணம் செய்துகொண்டார். இவர்களின் மகள்தான் வள்ளியம்மை.

காந்தி வரலாற்றில் ஒன்றை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ரயிலில் முதல் வகுப்பு பயணச்சீட்டு வாங்கிப் பயணம் செய்த அவரை, நிறவெறி கொண்ட வெள்ளையன் அதில் இருந்து இறக்கித் தள்ளிவிட்ட நிகழ்வு. தென்னாப்பிரிக்காவுக்கு ஓராண்டு காலம் வேலைக்குப் போன காந்தியை 20 ஆண்டுகள் தங்க வைத்ததற்குக் காரணம், இந்த நிறவெறி பிடித்த செயல்தான். இதே காலகட்டத்தில்தான் முனுசாமி போன்ற தமிழர்கள் ஒன்றுகூடி 'டிரான்ஸ்வால் தமிழ் பெனிஃபிட் சொஸைட்டி' என்ற நிறுவனத்தையும், 'இந்தியன் காங்கிரஸ்' என்ற அமைப்பையும் தொடங்கினார்கள். இந்த அமைப்போடு தன்னை இணைத்துக்கொண்டார் காந்தி.

அங்குள்ள இந்திய மக்களுக்குச் சாதாரண அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்டன. 1906ஆம் ஆண்டு இந்தியர்கள் அனைவரும் பெயரையும் கைரேகையையும் பதிவு செய்தே அனைத்து இடங்களுக்கும் செல்ல வேண்டும் என்ற அவசரச் சட்டம் ஒன்றை இயற்றியது அந்த நாட்டின் ஆங்கிலேய அரசு. இதை எதிர்த்துக் காந்தியின் தலைமையில் இந்தியர்கள் டிரான்சுவல் மாகாணத்திற்குள் நுழையப் பேரணியாகச் சென்றனர். இந்திய மக்களுக்கு அங்கே நுழையத் தடை விதிக்கப்பட்டது. இவ்வாறான துயரங்களுக்கு இடையே, காந்தியின் உரிமைப் போராட்டங்களைச் சிறுவயதில் இருந்தே உள்வாங்கி அறப்போர்களில் பங்குகொள்ளத் தொடங்கினார் வள்ளியம்மை.

மேலும் இந்தியர்கள் அனைவரும் 'தலைவரி' செலுத்தியே ஆகவேண்டும் எனக் கடுமையான சட்டமும், கிறித்துவ முறைப்படி மட்டுமே திருமணம் செய்ய வேண்டும் என்ற விதியும் கொண்டுவரப்பட்டன. காந்தியின் போராட்டங்களில் பெண்களும் பங்கேற்றார்கள்; கஸ்தூரிபாய் தலைமையில் பெண்கள் அணி உருவானது. 2,221 பேர் இந்தியர்களில் 127 பேர் பெண் போராளிகள்; 57 பேர் குழந்தைகள். அதில் 15 வயது நிரம்பிய வள்ளியம்மையும் ஒருவர்.

சுமார் 2000 பேர் இருந்த கூட்டத்தில் உறுதிமொழித் தாளை எடுத்துப் படிக்கப்போன காந்தி, 'யார் படிக்கிறீர்கள்?' என்று கேட்டபோது 'நான் படிக்கிறேன்' என முன்வந்தார் வள்ளியம்மை. புன்னகைத்துக்கொண்டே காந்தி அவரிடம் தாளைக் கொடுத்தார். 'வெள்ளை ஏகாதிபத்தியத்தின் விலங்கொடிப்போம் வாருங்கள்' என்று முழக்கமிட, மக்களின் புரட்சிப் பயணம் தொடங்கியது.

இந்தியர்கள் வரக்கூடாது என்ற நேடால் மாகாணத்துக்குள் நுழைவதுதான் காந்தியின் திட்டம். அதற்கு முன்னதாகக் கலவரம் ஏற்படுத்திக் காந்தியைச் சுடத் திட்டமிட்டது தென்னாப்பிரிக்க போலீஸ். அவரைக் குறிவைத்து ஒரு போலீஸ்காரர் நெருங்கி வர, அதைக் கவனித்துவிட்டார் வள்ளியம்மை. திடீரெனக் காந்திக்கு முன் வந்து நின்று, 'என்னை வீழ்த்திவிட்டுக் காந்தியடிகளைச் சுடு' என்று மன வலிமையோடு எதிர்த்தார் வள்ளியம்மை. இதனை மகாத்மா தனது சுயசரிதையில் வியப்புடன் குறிப்பிட்டுள்ளார். 56 நாட்கள் நடைப்பயணம் தொடர்ந்தது. இறுதியில் எல்லோரும் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சிறுமியையும் கைது செய்து பெயரைப் பதிவு செய்கின்றனர். அப்போது தனது பெயரைக் கூறி, இந்திய நாட்டைச் சேர்ந்தவர் என்று சொன்னதற்கு 'இந்தியா என்ற நாடும் கிடையாது; அந்த நாட்டுக்கென்று ஒரு கொடியும் இல்லையே' என்று ஆங்கிலேய அதிகாரிகள் நகைத்தார்கள். அதைக் கேட்டுவிட்டுத் தனது ஆடையில் ஒரு பகுதியைக் கிழித்து ஆங்கிலேயர் முன் 'இதுதான் என் நாட்டுக்கொடி' என்று வீர முழக்கத்துடன் பதிலளித்தார். இதனால் ஆத்திரமடைந்த அதிகாரிகள், அவர்மீது கடுமையான பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து சிறையில் அடைத்தனர். அவரிடமிருந்து அந்தத் துணியை வாங்கிய கஸ்தூரிபாய், அதனைப் பாதுகாப்பாகக் காந்தியிடம் கொடுத்தார் என்பதும் வரலாறு.

அவருக்குச் சரியான உணவுகள் சிறையில் தரப்படவில்லை. இதில் வள்ளியம்மையின் உடல்நலம் மிக மோசமாகப் பாதிப்படைந்தது.

சிறை அதிகாரிகள், சிறு அபராதம் கட்டி மன்னிப்புக் கடிதம் எழுதினால் விடுதலை கிடைக்கும் என்று கூற, `அகிம்சை வழி வந்த எனக்கு மன்னிப்புக் கடிதம் இழுக்கு, அவமானம். சிறையிலேயே உயிர் போனாலும் மன்னிப்பு கோர மாட்டேன்` என்று உறுதியோடு மறுத்தார் வள்ளியம்மை.

மெலிந்த தேகம் கொண்ட அந்தச் சிறுமியின் நலத்தைச் சிறை மேலும் சிதைத்தது. விஷக்காய்ச்சல் ஏற்பட்டது. தூக்கமின்மையிலும் சோர்விலும் அவதிப்பட்டார். பிறகு காந்திக்கும் அரசுக்கும் இடையே ஏற்படுத்திக்கொண்ட தற்காலிக ஒப்பந்தங்கள் மூலம் அனைவரும் விடுதலை அடைந்தார்கள். "பாவம் இந்தக் குழந்தை! இது எதற்காகச் சிறைக்கு வரவேண்டும்?" என்று பரிதாபமாகக் கேட்ட அதிகாரியிடம், "நான் குழந்தையும் அல்ல. பாவமும் அல்ல" என்று சீறினார் வள்ளி. நன்றாக மருத்துவ சிகிச்சை பெறுமாறு அவரை அறிவுறுத்தினார் காந்தி.

விடுதலையான பத்து நாட்களில் உடல் நலிவுற்று 1914ஆம் ஆண்டு பிப்ரவரி 22ஆம் நாள் வீரமரணம் அடைந்தார் வள்ளியம்மை.

இந்தச் செய்தியறிந்தபோது காந்தி இங்கிலாந்து பயணத்தில் இருந்தார். திரும்பி வந்தவர், வள்ளி அடக்கம் செய்யப்பட்ட ஜோகன்ஸ்பர்க் இடுகாட்டில் கண்ணீர் அஞ்சலி செலுத்தினார். தில்லையாடி வள்ளியம்மை, 'இந்தியாவின் மேன்மையான குழந்தை' என்றும், 'என் சகோதரியின் மரணத்தைவிடவும் வள்ளியம்மையின் மரணம் எனக்குப் பேரிடியாக இருந்தது' என்றும், 'நம்பிக்கைதான் அவரது ஆயுதம்' என்றும் 'இந்தியன் ஒப்பீனியன்' இதழில் பதிவு செய்தார். தென்னாப்பிரிக்க வரலாற்றில் தில்லையாடி வள்ளியம்மையின் பெயர் என்றும் நீங்கா இடம் பெற்றிருக்கும் என்றும் 'தென்னாப்பிரிக்கா சத்தியாகிரகம்' இதழில் எழுதினார்.

"ஒவ்வொரு பெண்ணுக்கும் இருக்க வேண்டிய சுய நம்பிக்கை, சுய மரியாதை, நல்லொழுக்கம் ஆகிய உயர்ந்த அடையாளங்களைக் கொண்டவர் வள்ளியம்மை. அவருடைய தியாகம் வீண்போகாது. சத்தியத்திற்காக உயிர்நீத்த அவரின் உருவம் என் கண்முன் நிற்கிறது' என்று கலங்கினார் காந்தி.

இந்திய நாட்டுக்கென்று ஒரு கொடியை உருவாக்கிட முனைந்தார் மகாத்மா. பிங்கலி வெங்கையா மூலம் உருவாக்கப்பட்ட கொடி, தில்லையாடி வள்ளியம்மை உருவாக்கிய சுதந்திர நெருப்பில் உருவான கொடியே; அக்கொடியே இன்று நாம் போற்றும் தேசியக்கொடி என்பதும் இங்கு பதியப்பட வேண்டிய வரலாற்றுத் தரவாகும்.

1997ஆம் ஆண்டு நெல்சன் மண்டேலா அவர்களின் முயற்சியின் மூலம் தென்னாப்பிரிக்காவில் அவரின் கல்லறை புதுப்பிக்கப்பட்டு விழா எடுத்து அவரைப் போற்றினர். அந்த நாட்டில் வாழும் குழந்தைகளுக்கு இவரின் வீர வரலாறு கற்பிக்கப்பட்டு வருகிறது.

வள்ளியம்மையின் நூற்றாண்டு நினைவுக் கல்வெட்டைத் திருப்பனந்தாள் ஆதீனத்தின் சன்னிதானங்கள் திறந்து வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு அரசு சார்பில் தில்லையாடி கிராமத்தில் நினைவு மண்டபம், நினைவு நூலகம் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் சென்னையில் உள்ள 600வது விற்பனை மையத்திற்கு 'வள்ளியம்மை மாளிகை' என்று பெயரிட்டுள்ளது. வண்டலூர் பூங்காவில் பிறந்த புலிக்குட்டிக்குத் 'தில்லையாடி வள்ளியம்மை' என்று பெயர் சூட்டப்பட்டது. இந்திய ஒன்றிய அரசு சார்பில் 2015ஆம் ஆண்டு நூற்றாண்டு நினைவு தினத்தில் அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

இந்திய மண்ணில் பிறக்காதபோதும், இந்த மண்ணில் காலடியே வைக்காதபோதும் சிறுமியாக இருந்தபோதும் தாய்நாட்டின் விடுதலைக்காகவும், மக்களின் உரிமைகளுக்காகவும் அகிம்சை வழியில் போராடி,16 வயதிலேயே உயிர்த்தியாகம் செய்த தமிழ்ச் சிறுமி தில்லையாடி வள்ளியம்மை நம் சுதந்திர ஜனநாயக தேசத்துக்கு வழிவகுத்த மறக்கமுடியாத இளம் ரத்தம் என்பதில் துளியும் ஐயமில்லை.

இன்னும் வீரமங்கைகள் வலம் வருவார்கள். ■

**ஒரு** புறம்
மேற்தோல் உரசிய புளியமுத்துக்களை
சோழியாகக் குலுக்கி
உன் முன் வீசுகிறேன்.

ஐந்து முயற்சிக்குப்பின்
விழுகிறது தாயம்
அடுத்தடுத்துத்தான் இருக்கிறது
வேடிக்கை

ஏணி ஏற்றிவிடுகிறது
பாம்பு சறுக்கிவிடுகிறது
சிரிப்பும் வருத்தமுமாக
நூறு கட்டங்களுக்குள்ளேயே
சுற்றிக்கொண்டிருக்கின்றன
உனதும் எனதுமான கண்கள்

இன்னும் இரண்டு விழுந்தால்
வெற்றி உறுதியாகும் சமயத்தில்
அவசர வேலையென்று
கழண்டு செல்கிறாய்
விளையாட்டிலிருந்தது

அடுத்தவனின் அறைவெளிச்சத்தைக்
காணச் சகிக்காது
உன் வீட்டுக் கதவை
இப்படியா இழுத்து மூடுவாய்

நிலை பிறழுமட்டும்
புளியமுத்துக்களை
குலுக்கி வீசுகிறேன்
எதிரில் நீயில்லை

ஆனாலுமென்ன
வென்றது நான்
விழுந்தது இரண்டு

அவ்வளவுதான் ஆட்டம்.

**– கனகா பாலன்**

●●

## என் படுக்கை அறை சன்னல்

**என்** படுக்கை அறை சன்னல்
கூர்தீட்டிய கத்திகளால் ஆனது
என் வீட்டின் பின்னால் இருக்கும்
அந்த உடைந்த வீட்டை
அந்த மா மரத்தை
கீழே ஒடும் சாலையை
என எல்லாவற்றையும்
12 சதுரங்களாக வெட்டி விடுகிறது

அந்த சன்னல் கம்பிகள்
எவ்வளவு மனசாட்சியற்றதென்றால்
அறைக்கு உள்ளே இருக்கும் என்னையும்
வெளியில் இருக்கிற
அந்த வெள்ளைப் பூனையையுமே
12 சதுரங்களாக வெட்டிவிடும் அளவிற்கு
மனசாட்சியற்றது.

**– பூ.தனிக்ஷா பாரதி**

■

மொழிபெயர்ப்புச் சிறுகதை

மலையாள மூலம் : ராஜலட்சுமி
தமிழில் : கே.வி. ஜெயஸ்ரீ



# மன்னிப்பு

*ராஜலட்சுமி (1930 -1965) :*

ராஜலட்சுமி எழுத வந்த 1950களில் மலையாளிகளுக்கு மொத்தம் இரண்டு பெண் எழுத்தாளர்களை மட்டுமே தெரிந்திருந்தது. ஒருவர் லலிதாம்பிகா அந்தர்ஜனம், மற்றொருவர் கே. சரஸ்வதியம்மா. அவர்களுடன் சேர்ந்து ஒரு நாற்காலியைத் தானும் இழுத்துப் போட்டுக்கொண்டு நிமிர்ந்து அமர்ந்தார் ராஜலட்சுமி.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலப் பெண்ணெழுத்தைத் தூக்கி நிறுத்தியவர்கள் இவர்கள் மூவருமே.

சரஸ்வதியம்மா பெரும் துணிவோடும் தைரியத்தோடும் முகத்திலறையும் ஆவேசத்தோடும் கதைகள் எழுதினார்.

பேச்சும் எழுத்தும் வீரியத்தோடு வந்தாலும் அதிலொரு மென்மை இருந்தது லலிதாம்பிகாவின் எழுத்தில்.

பேச விரும்பாத, தனக்குள் உள்ளொடுங்கியிருந்த பெண்ணாக, தன் வாழ்வையே எழுத்திற்கான சாரமாகக் கொண்டு ராஜலட்சுமி செய்த முயற்சிகள் அவரைச் சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தின. தன் சொந்தத் துயர்களை அடிப்படையாகக் கொண்டே அவர் கதைகள் எழுதினார். 35 வயதுக்குள் தன் வாழ்வையும் முடித்துக்கொண்டார்.

படைப்புகள் :

மகள் - நீண்ட கதை

உச்ச வெயிலும் இளம் நிலாவும் – நாவல்

ஓவியங்கள் : சக்தி அருளானந்தம்

கேரள சாகித்ய அகாடமி உருவாக்கப்பட்ட இரண்டாவது ஆண்டே ஒரு வழியும் குறே நிழலுகளும் என்ற நூலுக்கு, முதல் பெண் விருதாளராக ராஜலட்சுமியைத் தேர்வு செய்து விருதளித்தது.

***

*"So the most disgusting of pronouns is..."*

அவள் நிறுத்தினாள்.

*"She.."*

பின்வரிசையிலிருந்து குரல் வந்தது. வகுப்பறை நிசப்தமானது.

அந்த இளவயது ஆசிரியை வெளிறினாள்.

மொழியில் மிகவும் வெறுக்கப்பட்ட பெயர்ச்சொல்... அவள். இருபது மாணவர்கள் மட்டுமே உள்ள வகுப்பறை. அதில் ஒருத்தி மட்டுமே மாணவி. அவள் இன்று வரவுமில்லை.

அந்தச் சின்ன அறையில் பத்தொன்பது ஆண்பிள்ளைகளைத் தவிர, பெண்ணாக இருந்தது அந்த இளம் ஆசிரியை மட்டுமே.

மிகவும் கிண்டலான ஒலி "அவள்."

அவ்வொலி எழுப்பிய குரல் தனக்கு மிகவும் பரிச்சயமானதுதான். அவனை எழுப்பி நிறுத்தித் திட்ட வேண்டுமென்று அவளுக்குத் தெரியாமலில்லை.

அவர்களின் முன்னால் காகிதம்போல் வெளிறிய முகத்துடன் அவள் ஒரு நிமிடம் நின்றாள். பின்னர் மேசை மீதிருந்த புத்தகத்தைக்கூட எடுக்காமல் வகுப்பறையை விட்டு வெளியேறினாள்.

பாடவேளையின் இடையில் அவள் ஓய்வறைக்குத் திரும்பி வந்தபோது வேறு சில ஆசிரியர்களும் அங்கிருந்தனர்.

"ஆஹா, எப்பத் தோணுதோ அப்ப க்ளாச விட்டுட்டு வர்றது வழக்கமாப் போச்சு இல்லையா? சரிதான். பிரின்சிபல் பாக்காதது நல்லதாப் போச்சு."

கர்த்தாவு மாஸ்டர் பாதி கிண்டலாகவும் பாதி அக்கறையோடும் சொன்னார்.

அவளால் சகித்துக்கொள்ள முடியாமல், மேசைமேல் தலைசாய்த்துத் தேம்பித்தேம்பி அழத் தொடங்கினாள். எவ்வளவு முயன்றும் அடக்க முடியாத தேம்பல்கள்.

"அய்யோ, என்னாச்சு மேடம்?"

அனைவரும் எழுந்துவிட்டனர்.

"கர்த்தாவு சார் அவகிட்ட என்ன சொன்னீங்க?" ஒவ்வொருவரின் வீரமும் வெளிவருகிறது.

இது பேரழுகை. இந்த ஆணின் முன்னால் இப்படி அழுவது வெட்கக்கேடு. நல்லவர்ன்னாலும் அவர் அந்நியர் இல்லையா?

இதெல்லாம் யோசனையில் வந்தபோதும், அவளால் தேம்பலை அடக்க முடியவில்லை.

யாரோ ஒருவர் அடுத்த துறைக்குச் சென்று அங்கிருந்த ஒரு பெண் ஆசிரியரை அழைத்து வந்தார்.

மூன்று குழந்தைகளின் தாயான அந்த நல்ல பெண்மணி கேள்விகளெதுவும் கேட்கவில்லை. ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு அமர்ந்து, அவளுடைய தலையில் தடவினார்.

மெதுமெதுவாக அவளின் தேம்பல் நின்றது.

அவர் ஒரு டம்ளரில் தண்ணீர் எடுத்துக் கொடுத்து, "முகம் கழுவு" என்றார்.

அவள் ஜன்னலினருகே சென்று அமர்ந்து முகத்தைக் கழுவினாள்.

டீச்சரின் கசங்கலான கைக்குட்டையால் துடைத்ததாக ஒப்பேற்றினாள்.

"நான் போகட்டுமா மேடம்? என்னால இன்னக்கி க்ளாஸ் போக முடியல."

"ரமா போய்க்கோ. நான் சொல்லிடறேன். போய்ப் படுத்துக் கொஞ்சநேரம் தூங்கு. நாளக்கி வந்தாப் போதும். கிளாஸெல்லாம் நான் அட்ஜஸ்ட் பண்ணிக்கறேன்."

வாசல்வரை அவர் கூடவே வந்தார்.

குடையால் முகம் மறைத்து, அவள் நடந்து செல்வதை வராந்தாவிலும் முற்றத்திலும் நின்றிருந்தவர்கள் கவனித்தனர்.

என்னதான் நடந்தது!

கல்லூரி முழுக்கக் களேபரமானது.

கர்த்தாவு மாஸ்டரே அந்த வகுப்பிலிருந்த மாணவர்களை அழைத்துப் பேசி விஷயத்தைத் தெரிந்துகொண்டார்.

செய்தி காட்டுத்தீ போலப் பரவியது. அந்தக் கல்லூரி வரலாற்றில் இது ஒரு பெருநிகழ்வு, புதுநிகழ்வு.

ஓர் ஆசிரியை வகுப்பிலிருந்து வெளியேறி வந்து அழுதல்.

அதுவும் அந்தப் பாவமான ரமா டீச்சர்.

அவர் பாடம் நடத்துவதைப் பற்றி இதுவரை அப்படியொன்றும் புகார் எதுவும் வந்ததில்லை.

தொடர்ந்த அந்த உரையாடல்கள் அந்நிகழ்வுக்கு ஒரு நாடகத்தன்மையை அதிகரிக்கச் செய்தன.

'டீச்சர் வகுப்பிலிருந்தே அழுதுகொண்டு இறங்கிச் சென்றார்.

ஒரு மாணவன் வகுப்பில் எழுந்து நின்று அநாகரிகமாக எதையோ சொன்னான். அவர் அழுதுகொண்டே வெளியேறினார்.'

யாருக்கும் எந்தத் தொந்தரவும் தராத ரமா டீச்சர். அதுவும் அந்த பால் வர்கீஸ். காலேஜ் யூனியன் பிரசிடெண்ட் பற்றி அதுவரை கேள்விப்படாத வதந்திகள் ஒவ்வொன்றாக வெளிவந்தன.

அவன் கொஞ்சம் பிரச்சனையானவன்தான். பிரசிடெண்ட் ஆன பிறகு சமீபமாக ஆணவமும் கொஞ்சம் கூடி இருக்கிறது.

எப்போதும் அவன் பெண் பிள்ளைகளின் ஓய்வறையைச் சுற்றிச் சுற்றியே திரிகிறான் என யாரோ ஒருவன் கண்டுபிடித்தான்.

அவன் கள்ளுக் கடைக்கு, பின்வாசல் வழியாகச் செல்வதைச் சிலர் பார்த்திருக்கிறார்கள்.

இருபத்துநான்கு மணி நேரத்திற்குள் பால் வர்கீஸ் ஒரு பொறுக்கியாக உருமாறினான். உண்மையில் வகுப்பறையில் என்ன நிகழ்ந்தது? இவ்வளவுதான் நடந்ததா? மற்ற மாணவர்கள் இவனைக் காப்பாற்றப் பொய் சொன்னார்களோ? இவ்வளவுதான் நடந்ததெனில் டீச்சருக்கு என்ன நேர்ந்தது இப்படி உள்ளம் கலங்க? சும்மாவே யாராவது துறைக்குச் சென்று இப்படி அழுவார்களா?

அதையேதான் ரமாவும் யோசித்துக்கொண்டிருந்தாள்.

தான் அங்கே அமர்ந்து அப்படி அழுவதற்குக் காரணம் என்ன? அந்தப் பையன் பேசியதா? அவ்வளவுக்குத் தகுதியற்றவளா நான்? மாணவனைத் தன் கட்டுக்குள் நிறுத்த முடியவில்லை என்றால்...

கர்த்தாவு மாஸ்டர் கேலி செய்ற அளவுக்கு அவ்வளவு தொட்டாச்சிணுங்கியெல்லாம் இல்லை நான்.

ஆனால், பால் வர்கீஸ்மீது சற்றே கரிசனம் இருந்தது உண்மைதான். துடிப்பான, மிடுக்கான பையன். அவன் குரலில் அதைக் கேட்டபோது...

தனக்கு நட்டமடைந்த ஒன்று திரும்பக் கிடைக்காத விதத்தில் கைவிட்டுப் போகிறது என்று திடீரென உணர்ந்துகொண்டதாலா? தான் வாழ்வென்று நினைப்பது உள்ளீடற்ற ஒன்றைத்தான் என்பதை அந்த ஒரு நிமிடத்தில் கருணையற்ற வெளிச்சத்தின் ஒளியில் மறை நீக்கித் தெளிவாகக் கண்டதாலா?


கடந்தகாலத்தின் வேதனை, நிகழ்காலத்தின் பயனின்மை, எதிர்காலத்தின் வெறுமை இவையெல்லாம் அந்த ஒரு நொடி நேரத்திற்கு ஒளிவு மறைவில்லாமல் கண்டதனால் அழுது போனேனா?

மறுநாள் தலை உயர்த்தாமல் அவள் துறைக்குள் நுழைந்தாள். எல்லோருக்கும் மிகவும் மகிழ்ச்சி.

"இறுதியாண்டின் அந்த வகுப்பை இதற்குமேல் நீங்கள் எடுக்க வேண்டாம்" என்று ப்ரொபசர் வந்து சொன்னார்.

அந்த வகுப்புக்குப் போக வேண்டாமா?

மகிழ்ச்சி அடைய வேண்டியதுதான். அங்கேதான் அவமானப்படுத்தப்பட்டிருக்கிறேன். அங்கே இனி போக வேண்டாம். அவர்களை இனி பார்க்க வேண்டாம். அப்படி என்றால் அதில் மகிழ்ச்சியடையத்தானே வேண்டும்.



பால் வர்கீஸ் –

இவ்வளவு பெரிய விஷயமாகுமென்று அவன் அப்போது நினைத்திருக்க மாட்டான். இப்போது அவன் மனதில் தன்னைப் பற்றிய எண்ணம் என்னவாக இருக்கும்? டீச்சர் அழத் தொடங்கியதால் அல்லவா இக்குழப்பம் எல்லாம் என்பதாக இருக்குமா?

எதற்காக அவன் அதைச் சொன்னான்? மனப்பூர்வமாகத் தன்னை அவமானப்படுத்துவதற்காகவா?

ஸ்ட்ராச்சியின் சொற்பொழிவில் மிகவும் வெறுப்புண்டாக்கும் சர்வநாம சப்தம் என்று குறிப்பிடப்பட்டிருப்பது, உத்தம புருஷன். அச்சொல் அவன் என்பதற்கு மாற்றாக உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. நான் அதைக் கற்பித்துக்கொண்டிருந்தேன்.

'நான்' என்ற வார்த்தைக்குள் இருக்கும் பிரியம் –

மிகவும் மனம் சோர்வடையச் செய்யும் சர்வநாம சப்தம் –

ஒரு பெரிய 'நான்' என் முன்னால் இருந்ததல்லவா என்னுடைய குழப்பம் –

நான் என்ற பாவமிஹ, தோன்றாமை வேண்டும் –

அயல்நாட்டவரின் கருத்திற்கும் இந்து வேதாந்தத்திற்கும் நெருக்கம் இருக்கிறது என்றெல்லாம் யோசித்துக்கொண்டுதான் வகுப்புக்குள் நுழைந்தேன்.

பின்னர் முகவுரை கூறிப் பாடத்திற்குள் நுழைந்தபோது, பால் வர்கீஸ் என்ற ஒடிசலான, அமைதியான முகமுடைய இந்தப் பையன், என்னை எதிர்த்துப் பேசி எதைச் சாதிக்கப் போகிறான்?

பிரச்சனை பெரிதாகிக்கொண்டே வருகிறது.

முதல்வரிடம் இந்தப் பிரச்சனை சென்றுவிட்டதென்று கேள்விப்பட்டேன்.

அவர் இதை மிகவும் பெரும்பிரச்சினையாக எடுத்துக்கொண்டிருக்கிறார். பெற்றோரையோ பாதுகாவலரையோ வரச்சொல்லி அனுப்பி இருக்கிறார்.

அப்பா... முடிந்துவிட்டது. ரமா நிம்மதி அடைந்தாள். பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் வருவார்கள். பேசி அனுப்பிவிடுவார்கள். பிரச்சனை தீர்ந்துவிடும். எப்படியாவது முடிந்துவிட்டால் நன்றாக இருக்குமே...

ஆனால் நினைத்த மாதிரி அது முடியவில்லை. பால் வர்கீஸ் பாதுகாவலர்களை அழைத்து வரவில்லை.

அதனால், முதல்வரின் கோபம் அதிகரித்தது. அவர் அவனை எந்த வகுப்பிலும் உட்காரச் சம்மதிக்கவில்லை. திறமையான பையன் என்னால் வகுப்புக்குச் செல்லாமல்...

அதற்கு அவன் அப்பாவை அழைத்துக் கொண்டு வரலாமல்லவா?

ரமா கேட்கும்படியாக இந்தப் பிரச்சனையைப் பற்றி யாரும் பேசுவதில்லை.

அவ கண்ணீர் வடிப்பா என்பதாக இருக்கலாம், அவர்களின் மனதில் இப்போது தன்னைப் பற்றிய அபிப்பிராயம் – ச்சே...

ஆனால், மற்ற துறைகளில் எல்லாம் பேசுபொருள் இதுதான். அங்கேயும் பெண்கள் இருக்கிறார்கள். அவர்கள் கேட்கும்படியாகப் பேசக்கூடாது என்று எந்தக் கட்டாயமும் அவர்களிடம் இல்லை.

அப்படியான செய்திகள் எல்லாம் ரமாவுக்கும் கிடைத்துக்கொண்டிருந்தன.

அப்பாவை அழைத்துக்கொண்டு வராமல் இருப்பது பால் வர்கீசின் குற்றம் மட்டுமல்ல. அவனுடைய அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இடையில் அவ்வளவு பொருத்தமில்லை. அப்பாதான் படிக்க வைக்கிறார், பணம் கொடுக்கிறார் என்பதைத் தவிர வேறெதுவும் விசாரிப்பதில்லை. இவன் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக அவர் ஒருபோதும் வரமாட்டார். பிரச்சனை என்று தெரிந்துவிட்டால் கல்லூரியிலிருந்து நிறுத்திவிடுவார்.

அவ்வளவுதான்.

அவனுக்கு அப்பாவைத் தவிர வேறு நெருங்கிய உறவுகள் என்று யாரும் இல்லை. எனவே அவன் பாதுகாவலரையும் அழைத்து வரவில்லை.

முதல்வரின் வைராக்கியம் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

இரண்டு மூன்று ரூபாய் கொடுத்தால் எத்தனையோ பாதுகாவலர்கள் கிடைக்கின்ற ஊரென்று கேட்டிருக்கிறேன். அப்படிச் செய்வதுதான் அங்கே இருக்கின்ற நிறைய மாணவர்களின் வழக்கம். இவனும் அப்படி ஏதாவது செய்யலாம் அல்லவா? மாமன்மார் எல்லோருக்கும் கிடைப்பார்கள் அல்லவா!

அவன் எதையும் செய்யவில்லை. யூனியன் பிரசிடெண்ட் ஒரு வாரத்திற்கு மேலாக வகுப்பறைக்கு வெளியே இருக்கிறார்.

அந்த வருடம் கடைசி ஆண்டு மாணவன் அவன்.

தன்னால் அவனுக்கு ஏற்பட்ட அவமானம்-

சக்கரத்தை உருட்டி விடுவது மட்டுமே தன்னால் செய்ய முடிந்தது. அதைப் பிடித்து நிறுத்த நான் மட்டும் நினைத்தால் முடியாதா?

ஏதோ குறும்புத்தனம் மனதில் தோன்ற யோசிக்காமல் பேசி இருக்கலாம் அவன். அதற்கு நான் காரணமாகிவிட்டேன்.

முதல்வரைப் பார்த்து ஏதாவது சொல்லலாமா? அந்தப் பையன் சொன்னதற்காக நான் அழவில்லை எனலாமா? பிறகு எதற்காக அழுதீர்கள் என்று கேட்டால் நான் என்ன சொல்வேன்?

எதுவும் சொல்வதற்கு இல்லையே –

யோசித்து யோசித்துக் கடைசியில் வருவது வரட்டும் என்ற முடிவுடன் ரமா முதல்வர் அறைக்குச் சென்றாள்.

அவளைப் பார்த்து அவர் வெள்ளையாய்ச் சிரித்தார். மத்திய வயது கடந்த அந்த மனிதனை மாணவர்கள் 'புலி' என்றுதான் அழைக்கிறார்கள் என்பது அவள் நினைவில் வந்தது.

நல விசாரிப்புகள் முடிந்து, இனி வந்த விஷயத்தைச் சொல்ல வேண்டாமா?

"சார், அந்த பால் வர்கீஸ்..."

"என்ன ஆச்சு? அவன் மறுபடியும் ஏதேனும் பிரச்சனையைக் கொண்டு வந்தானா?"

"இல்ல.. வகுப்புகளுக்குப் போகாமல் இருக்கிறான்."

"நான்தான் போகக்கூடாதுன்னு சொல்லி இருக்கிறேன்."

"அவன் திறமையானவன்."

"அது மட்டும் போதாது."

"இத்தோடு முடித்துக்கொண்டு அவனை வகுப்புக்குச் செல்ல அனுமதிக்கலாம் இல்லையா சார்?"

அவர் சிரித்தார். அறையில் அமர்ந்திருந்த வேறு இருவரும் சிரிப்பில் சேர்ந்துகொண்டனர்.

"நீயே உன்னை முட்டாள் என்று நினைத்துவிட்டாயா, ஒரு பையன் ஏதோ சொன்னான் என்பதற்காக முதலில் அழுவது, பிறகு அவனை வகுப்பிற்குத் திருப்பி அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வந்து நிற்பது.."

"ரமாவுக்குக் கம்பன்க்ஷன் ஒன்றும் வேண்டாம். லேக் ஆப் டிசிப்பிளின் என்பதுதான் இந்தத் தலைமுறையின் குழப்பம். இத்தனைக்கும் அவன் யூனியன் பிரசிடெண்ட் வேற. மாணவர்களின் எலக்டட் ரெப்ரசன்டேட்டிவ். மற்றவர்களுக்கு வழிகாட்ட வேண்டியவனல்லவா? நல்ல தண்டனை கொடுக்க வேண்டும் என்றுதான் நான் முடிவெடுத்து இருக்கிறேன். எல்லோருக்கும் அது ஒரு பாடமாக வேண்டும்."

"ஐயோ சார். என் காரணமாக ஒரு மாணவன்..."

"நீ வந்து இவ்வளவும் சொன்னதால் ஒன்று செய்யலாம். அவனுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கலாம். கல்லூரி மாணவர்களின் முன்பாக மன்னிப்பு கேட்க வேண்டும். இல்லையென்றால் டிசி வாங்கிச் செல்லட்டும்."

"எல்லோருக்கும் முன்பாகவா...?"

"எம்பேரசிங் ஆக வேண்டாம். நாங்கள் எல்லோரும் உங்களுடன் இருப்போம். நீ வந்தால் மட்டும் போதும்."

"ஆனாலும் எல்லா மாணவர்களின் முன்னால் நின்று அவன் எப்படி...?"

முதல்வர் தன்னை விசித்திரமாகப் பார்க்கிறார் என்று அவளுக்குத் தோன்றியது.

தெய்வமே-

"எனக்கு அடுத்த பாடவேளை இருக்கிறது. நான் போகட்டுமா?"

"சரி."

இதுவும் கல்லூரி முழுவதும் தெரிந்துவிட்டது.

பால் வர்கீஸ் மன்னிப்பு கேட்க ஒத்துக்கொண்டான் என்று கேள்விப்பட்டேன்.

அவனுக்கு ஓட்டளித்து அவனை அவர்களின் தலைவனாகத் தேர்ந்தெடுத்த இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களின் முன்னால் மன்னிப்பு கேட்க வேண்டும். திங்கட்கிழமை என்று முடிவு செய்திருந்தனர். சரியாக நான்கு மணிக்குக் கல்லூரி முடிவடைந்தபின் மெயின்ஹாலுக்கு வந்துவிட வேண்டும் என்று நோட்டீசும் வந்தது.

அவள் போகாமல் இருக்கலாமா?

நாலு பத்துக்கு முதல்வர் வந்தார். பிளாட்பார்மில் அந்தக் கல்லூரியில் பயிற்றுவிக்கும் 70க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள். கீழே மாணவர்களின் பெருங்கடல். அந்த 2000 ஜோடி கண்களும் தன்னையே துளைக்கிறதோ? 4:15 வரை முதல்வர் பொறுமையற்றுக் காத்து நின்றார். பால் வர்கீஸ் வரவில்லை.

நம்பர் 3572 - தேர்டு டி.சி. பால் வர்கீஸ் ஒழுக்க விதிகளை மீறியதற்காகக் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டார் என்ற செய்தி எல்லாத் தகவல் பலகைகளிலும் ஒட்டப்பட்டது.

மறுநாள் மாணவர்கள் சொன்ன எவற்றையும் பொருட்படுத்தாமல் அவள் நீண்ட விடுப்பு எடுத்துக்கொண்டு சொந்த ஊருக்குச் சென்றாள்.

சற்றே குளிர்ந்த மனதோடுதான் திரும்பி வந்தாள்.

அறையைத் திறந்து உள்ளே நுழைந்தவுடன் வாட்ச்மேன் ராமன் நாயர் ஒரு பொட்டலத்தைக் கொண்டு வந்து தந்தார்.

"நீங்க போனதுக்கு அடுத்த நாள், ஒரு பையன் உங்களப் பாக்க வந்திருந்தான். நீங்க இல்லன்னு சொன்னப்ப இதோ இந்தப் பொட்டலத்த எங்கிட்ட குடுத்துட்டு, உங்க கையிலதான் குடுக்கணும்னு சொல்லிட்டுப் போனான். பொஸ்தகம்தான். நீங்க இல்லன்னு தெரிஞ்சதும் இத மூடிக் குடுத்துட்டுப் போனான்."

புஷ்கினின் கவிதைத் தொகுப்பின் மலிவுப் பதிப்பு. மாஸ்கோ பப்ளிகேஷன். முதல் பக்கத்தில் வடிவான கையெழுத்தில் இப்படி எழுதியிருந்தது..

"நான் மண்டியிட வந்தபோது நீங்கள் கதவை அடைத்துவிட்டிருந்தீர்கள்" – பால். ■

கட்டுரை

கோ.லீலா



# பெண்ணும் தண்ணீரும்

பெண்கள் சமூக, பொருளாதார, கலாச்சார, அரசியல் தளங்களில் பாலினப் பாகுபாடின்றி உரிமையுடன் சாதிக்கவும், தனது அறிவாற்றலை முழுமையாகப் பயன்படுத்துவதற்காகவும் மகளிர் தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இயற்கை வளங்களைப் பயன்படுத்திக்கொள்வதில் பாலினப் பாகுபாடின்றிப் பெண்களுக்குச் சமஉரிமை அளிக்கப்படுகிறதா? என்றொரு கேள்வி எழுகிறது.

நதியே நதியே காதல் நதியே நீயும் பெண்தானே என்ற பாடலில் பெண்ணைப் புகழ்ந்து தண்ணீரோடு ஒப்பிட்டுப் பாடிப் பெருமை கொள்வதெல்லாம் சரி.. நடைமுறையில் பெண்ணிற்கு அளிக்கப்படும் தண்ணீரின் மீதான அதிகாரம்?

தமிழ்நாட்டு அரசு நீர்வளத் துறை பொறியாளராகவும், சூழலியல் செயற்பாட்டாளராகவும் பெண்களும் தண்ணீரும் என்ற முக்கியமானதொரு கருப்பொருளைப் பற்றிய விழிப்புணர்வு இன்றைய தேவை என்றுணர்கிறேன்.

பொதுவாகக் கூலிப்பணிகளிலும் கூட ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமான கூலி கொடுக்கப்படுவதில்லை. இப்படி ஒரு சமமின்மை ஏற்கனவே சமூகத்தில் இருக்கிறது. அதோடு தண்ணீர் என்று வரும்பொழுது அதே சமமின்மை தொடர்கிறது என்பது வருத்தம் தரும் செய்தி.

ஒரு வீட்டில் குடிநீரையும் சமையல், துவைத்தல், குளித்தல், மற்ற வீட்டு தேவைகளுக்கான தண்ணீரையும் குடும்ப உறுப்பினர்களுக்கான தண்ணீரையும் கொண்டுவந்து சேர்த்தல் என்பது ஒரு பெண்ணுக்கு மட்டுமேயான கடமையாகக் கருதப்படுகிறது.

அப்பெண் எவ்வகை உயரிய பதவியை வகித்தாலும், அல்லது குடும்ப நிர்வாகியாக மட்டுமாக இருந்தாலும், குடும்ப நிர்வாகத்துடன் சிறு தொழில் செய்வோராயினும், ஒரு வீட்டில் நீர் சேகரிக்கும் பொறுப்பு ஒரு பெண்ணிற்கான கடமையாக மட்டுமே கருதப்படுகிறது.

உயர் பதவியில் பொருளாதார வசதியுடன் இருக்கும் பெண்கள் தண்ணீரைச் சேகரிக்க

ஆட்களைப் பயன்படுத்துவது முதல், தண்ணீர்க் கண்டெய்னர்களை வீடு கொண்டு வந்து சேர்க்கப் பணம் செலவழிப்பதுடன் உரிய நேரத்திற்குத் தண்ணீர் வந்து சேர்ந்தனவா என்ற வரையிலும் கண்காணிக்க வேண்டியுள்ளது.

குடும்ப நிர்வாகத்திலோ, துணிகளைத் துவைத்தல், பாத்திரம் கழுவுதல், வீடு மற்றும் கழிப்பிடங்களைத் தூய்மையாக வைத்துக்கொள்ளுதல், குடிநீர் சேகரித்தல், தோட்டங்களைப் பராமரித்தல், சமையல் எனத் தண்ணீர் தேவைப்படும் பல்வேறு பணிகள் ஒரு பெண்ணின் கடமையாகவே உள்ளது.

தண்ணீர் சேகரிப்பதற்காக நீண்ட நடைப்பயணம், தண்ணீருக்காக வரிசையில் காத்திருத்தல், தண்ணீரைச் சுமந்து வருதல் எனத் தன் நேரத்தில் அதிக நேரத்தைத் தண்ணீருக்காகவே ஒரு பெண் செலவிடுகிறாள்.

இதைப் படிக்கும்பொழுது சில ஆண்கள் நாங்களும்தான் தண்ணீர் சேகரித்து வருகிறோம் என்று சொல்லக் கூடும். எனினும் பெண்களின் பங்கு 99% உள்ளது. குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளிலும், வளர்ந்துவரும் நாடுகள் என்று சொல்லக்கூடிய பல நாடுகளிலும் பெண்களுக்குத் தண்ணீர் கொண்டுவரும் பொறுப்பு சுமத்தப்பட்டிருக்கிறது.

குறிப்பாக இந்தியா, ஆப்பிரிக்கா, பொலிவியா மற்றும் கென்யா போன்ற நாடுகளில் பெண்கள் பல கிலோ மீட்டர் தூரம் வெற்றுக் காலுடன் நடந்து சென்று குடம் குடமாக அல்லது கண்டெய்னர் கண்டெய்னராகத் தண்ணீர் சுமந்து வரும் காட்சிகள் நாள்தோறும் இயல்பாக நடக்கின்றன.

இந்தியாவைப் பொறுத்தவரை ராஜஸ்தானியப் பெண்கள் பல மைல் தூரம் நடந்து தலையிலே அடுக்கடுக்காகக் குடங்களில் தண்ணீர் சுமந்து வரும் காட்சியைக் காணமுடிகிறது.

*They want their heads for thinking not for carrying water* என அடிக்கடி சொல்வதுண்டு. கிட்டத்தட்ட 266 மில்லியன் மணி நேரத்தைத் தண்ணீரைச் சேகரிப்பதற்காகச் செலவிடுகிறார்கள். சுமார் 633 மில்லியன் மக்கள் தூய்மையான நீரற்ற நாளை எதிர்கொள்கிறார்கள். பொது இடங்களில் திறந்தவெளிக் கழிப்பிடங்கள் இருப்பதன் மூலம் மழைக்காலங்களில் கழிவுகள் பாதுகாப்பற்ற நதிகளிலும் குளங்களிலும் கிணறுகளிலும் குட்டைகளிலும் கலந்துவிடும் அபாயம் இருக்கிறது. இந்த நீரைத்தான் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பயன்படுத்துகிறார்கள். இந்த நீரிலேயே உணவையும் சமைக்கிறார்கள். இந்த மாசுபட்ட நீர்கூட போதுமான அளவில் பெண்களுக்குக் கிடைப்பதில்லை என்பது பெருந்துயர்.

மனித வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் நீர் மிக முக்கியமானது. உயிரியல் மற்றும் வேதியல்ரீதியாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் டயரியா, குடல் தொற்று நோய், தோல் நோய்கள் போன்றவற்றை வராமல் தடுக்கும். குழந்தைகளின் வளர்ச்சிக்கும் உடலில் உள்ள கழிவுகளை வெளியேற்றவும் போதுமான நீர் அவசியமாகிறது.

இந்தியா, பொலிவியா மற்றும் கென்யா நாடுகளில் கர்ப்பிணிப் பெண்கள், சிறு குழந்தைகள், பருவப் பெண்கள், இளம் மங்கைகள் என அனைத்து வயதுப் பெண்களும் தண்ணீரைத் தூக்கிச்செல்லும் கடினமான வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

போதுமான தண்ணீர் வசதியற்ற இடங்களில் வசிக்கும் பெண்கள் எப்படி இருக்கிறார்கள் என்று பார்க்கும்போது, பருவமடைந்த பல பெண்கள் பள்ளிக்குச் செல்வதை நிறுத்திவிடுகிறார்கள். ஏனென்றால் தங்களைத் தூய்மையாக வைத்துக்கொள்வதற்குத் தேவையான அளவிற்குத் தண்ணீரோ, கழிப்பிட வசதிகளோ இல்லை என்பதே இதற்கு முக்கிய காரணம்.

*Drop out for a Drop* என இதைச் சொல்ல வேண்டும். *Dropout for a drop* என்ற வாசகம் கலங்கச் செய்கிறது. தண்ணீர் பிடிக்க நேரத்தைச் செலவழிப்பதாலும், பூப்பெய்திய பெண் குழந்தைகளுக்குத் தன்னைத் தூய்மைப்படுத்திக்கொள்ள பள்ளியில் போதிய நீர் இல்லாததாலும் தனது படிப்பைக் கைவிடும் அவலம் நிகழ்கின்ற இதே பூமியில்தான், தண்ணீர்ப் புட்டிகளை வைத்து, நாகரிகம் என்ற பெயரில் ஒரு வாய் குடித்துவிட்டு, மீதியைக் குப்பையில் வீசுகிறோம்.

சமத்துவம் என்பது பொருளாதாரத்தைப் பொதுவில் வைப்பதில் மட்டுமல்ல... இயற்கை வளத்தை எல்லா உயிர்களுக்கும் பொதுவில் வைக்கும் கருணை உள்ளமே சமத்துவம் காணும்.

இதைப்போலவே ஒரு கர்ப்பிணி பெண்ணிற்குத் தேவையான அளவு தண்ணீரும், சத்தான உணவும், ஓய்வும் கிடைக்க வேண்டும். மாறாக ஒரு நாளைக்கு இருபதிலிருந்து ஐம்பது லிட்டர் தண்ணீர் வரை, நெடுந்தூரம் நடந்து சென்று சுமந்து வர வேண்டிய சூழல் உள்ளது. அந்தத் தண்ணீரும் சுகாதாரமற்ற தண்ணீர். தண்ணீரை உட்கொள்ளும்போது தாய்க்கும், சேய்க்கும் பல நோய்களும், பாதுகாப்பற்ற வாழ்வியலும், உடல் நலக் குறைப்பாடுகளும் ஏற்படுகின்றன.

தண்ணீர் தேவையான அளவிற்குக் கிடைக்கக்கூடிய அல்லது பெறக்கூடிய ஆற்றலுடைய பகுதியில் வாழும் ஒரு பெண்ணின் வாழ்நிலையையும், தண்ணீர்ப் பற்றாக்குறையுடன் வாழும் பெண்ணின் வாழ்நிலையையும் ஒப்பிடும்போது தெரியவரும் நிதர்சனம், ஒரு பெண்ணின் வாழ்நிலை தண்ணீரால் எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை உணரவைக்கிறது.

தண்ணீர் கிடைக்கக்கூடிய வாய்ப்புள்ள பெண் கர்ப்பிணியாக இருக்கும்பொழுது தன்னைத் தூய்மையாக வைத்துக்கொள்ள, போதுமான தண்ணீரை உட்கொள்ள, தண்ணீருக்காக அலையாதிருக்க, அதன் பொருட்டு ஏற்படும் மனத் தவிப்பில்லாது இருக்க, தண்ணீர் இருக்கிறது என்பதாலேயே சத்துமிக்க காய்கறிகள், உணவுப்பொருட்கள் உண்ண வாய்ப்புகள் அதிகம் உள்ளன. அதனால் ஆரோக்கியமும், பாதுகாப்பான மகப்பேறும் வாய்க்கின்றன.

பிறந்த பெண் குழந்தைக்கும் போதுமான தண்ணீர் கிடைப்பதால் உடல் ஆரோக்கியமும், வளர்ச்சியும் உறுதி செய்யப்படுகிறது. அதே போன்று பள்ளிக்கல்வி, பூப்பெய்திய பின்னரும் கல்வி பெறுதலில் தண்ணீரால் தடையில்லை என்பது உறுதி செய்யப்படுகிறது.

ஆனால், போதிய அளவு தண்ணீர் கிடைக்காத பெண்ணின் நிலை அப்படியே தலைகீழ் என்பதுடன் ஆரோக்கியமின்மை, நேரமின்மையால் சுய முன்னேற்றமின்மை எனப் பெண்ணின் முழு ஆற்றலும் முடக்கப்படுகிறது.

ஆப்பிரிக்காவில், ஒரு நாளைக்கு 16 மில்லியன் மணி நேரத்தைத் தண்ணீர்ச் சேகரிப்புக்காகச் செலவழிக்கிறார்கள். ஆண்கள் 6 மில்லியன் மணி நேரமும், குழந்தைகள் 4 மில்லியன் மணி நேரமும் இதற்காகச் செலவிடுவதாக ஆய்வறிக்கை ஒன்று கூறுகிறது.

தண்ணீர் பிடிக்கச் செல்லும் பெண் குழந்தைகள் 30 நிமிடத்திற்குப் பதிலாக 15 நிமிடம் மட்டும் தண்ணீர் சேகரித்தால் போதுமென்றால், பள்ளியில் 12% வருகை அதிகரித்துவிடுவதாகவும் சொல்லப்படுகிறது. இதைப் படிக்கும்போது இதெல்லாம் உண்மையா? அப்படி எந்தக் குழந்தையையும் பார்க்கவில்லையே என்று தோன்றும். ஆனால் நீங்கள் எண்ணுவது உண்மையில்லை, மாறாக நம்மைச் சுற்றி நாம் கவனிப்பதே இல்லை என்பதே உண்மை.

மேலும் அதீத தாகம் எடுத்தால் மட்டுமே பெண் தண்ணீர் அருந்துகிறாள் எனும் முகத்திலறையும் உண்மை ஒருபுறம்...

பெண்கள் தண்ணீர் சேகரிக்கும் பணியிலிருந்து விடுபடும்போது கல்வி, சுய முன்னேற்றம் எனச் சிறு தொழில் அல்லது அதிகார பொறுப்பிற்குச் செல்லும் வாய்ப்புகள் மிகுதியாகவே உள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை. இதற்கான தீர்வைக் கட்டுரையின் இறுதியில் காணலாம்.

பெண் மட்டுமின்றிச் சாதியப் பாகுபாடு, ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடுகளின் மூலமும் நீர் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படவில்லை என்பதே வலி தரும் உண்மை. இதற்குச் சான்றாக, குற்றாலத்தில் குளிக்க தலித்துகளுக்கு உரிமை மறுக்கப்பட்ட நிகழ்வு முதல், உயர் சாதியினருக்கு எனத் தனிக் குளம் அமைத்துக்கொள்ளுதல் வரை இந்த ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. பணம் படைத்தோர் காசுக்குத் தண்ணீரை வாங்கிவிடுகின்றனர். பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு மாசடைந்த நீர் குறைந்த அளவில்தான்

கிடைக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

மேற்கூறிய சாதிய ஒடுக்குமுறைக்கு ஆளான பெண் எனில், அவளின் துயர் இரண்டு மடங்காக இருக்கும் என்பது வலி தரும் நிதர்சனம்.

தண்ணீர் என்பது அனைவருக்கும் பொதுவான, சமமான இயற்கை வளம். ஆனால் பெண்ணிற்கு அவ்வுரிமை முற்றிலும் மறுக்கப்படுவதும், அதனால் முன்னேற்றம் முடக்கப்படுவதும் கவனத்தில் கொள்ள வேண்டியவை.

"நீருக்காகப் பெண்கள், பெண்களுக்காக நீர்" என்ற இயக்கம் பெண்களுக்கு நீரின் மீதான அதிகாரம், பொறுப்பு, பாதுகாப்பான குடிநீரை வழங்குவதில் உள்ள நேரடியான சிக்கல்களை அறிதல், தண்ணீரைச் சிக்கனமாக பயன்படுத்தும் சாதனங்களின் உபயோகத்தை ஊக்குவித்தல், தண்ணீர் சேமிப்பு, பாதுகாப்பு, சமத்துவமான மற்றும் சமமான பங்கீடு குறித்து அறிதல், விழிப்புணர்வு பெறுதல் மற்றும் அளித்தல் மூலம் பெண் நீரின் மீதான அதிகாரத்தைப் பெற வலியுறுத்துகிறது.

**தீர்வுகள் :**

அரசுகள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் உள்ளூர் சமூகங்கள் தண்ணீர்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான அவர்களின் முயற்சிகள் பாலின-உணர்திறன் உள்ளடக்கியவை என்பதை உறுதிப்படுத்த பின்வரும் நடவடிக்கைகளைப் பின்பற்றலாம்.

1. பெண்களுக்குக் கல்வி மற்றும் அதிகாரம் அளித்தல் :

நீர்மேலாண்மை மற்றும் முடிவெடுப்பதில் பெண்களைப் பங்கேற்கச் செய்வதில் கல்வி முக்கியமானது. பெண்களின் திறன்கள் மற்றும் அறிவை வளர்ப்பது, தண்ணீர் நெருக்கடியை நிவர்த்தி செய்வதில் இன்னும் தீவிரமான பங்கை எடுக்க அவர்களுக்கு உதவுகிறது.

2. நீர் மேலாண்மை மற்றும் முடிவெடுப்பதில் பெண்களை ஈடுபடுத்துங்கள்:

தண்ணீர் எடுப்பது, சமைப்பது மற்றும் பிற வீட்டு வேலைகளில் பெண்கள் பெரும்பாலும் தண்ணீர்ப் பற்றாக்குறையால் பாதிக்கப்படுகின்றனர். தண்ணீர் சார்ந்த முடிவெடுப்பதில் அவர்களை ஈடுபடுத்துவது அவர்களின் தேவைகள் மற்றும் கவலைகள் பரிசீலிக்கப்படுவதை உறுதிப்படுத்த உதவும்.

3. பெண்கள் தலைமையிலான தொடக்கங்கள் மற்றும் வணிகங்களை ஆதரித்தல்:

தொழில்முனைவோரில் பெண்கள் பெரும்பாலும் குறைவாகவே பிரதிநிதித்து வப்படுத்தப்படுகிறார்கள், ஆனால் தண்ணீர் நெருக்கடிக்குப் புதுமையான தீர்வுகளை உருவாக்கப் பயன்படும் தனித்துவமான முன்னோக்குகள் மற்றும் நுண்ணறிவுகளைக் கொண்டுள்ளனர். பெண்கள் தலைமையிலான தொடக்கங்கள் மற்றும் வணிகங்களை ஆதரிப்பது, மிகவும் சமமான மற்றும் நிலையான எதிர்காலத்தை உருவாக்க உதவும்.

4. பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான துப்புரவு வசதிகளுக்கான அணுகலை வழங்குதல்:

சுகாதார வசதிகள் இல்லாதது பெண்கள் மற்றும் சிறுமிகளின் கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் கண்ணியம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும்.

5. மகளிர் குழுக்கள் மற்றும் முன்முயற்சிகளை ஆதரித்தல்:

இது பெண்களின் குரல் கேட்கப்படுவதையும் அவர்களின் தேவைகள் நிவர்த்தி செய்யப்படுவதையும் உறுதிப்படுத்த உதவும்.

6. பாலின அடிப்படையிலான வன்முறைக்குத் தீர்வு காணுதல் :

பெண்கள் பாதுகாப்பான மற்றும் நம்பகமான நீர் ஆதாரங்களை அணுகுவதற்கு வன்முறை தடையாக இருக்கும். பெண்களும் சிறுமிகளும் நீர் ஆதாரங்களைப் பாதுகாப்பாக அணுகவும் பயன்படுத்தவும் முடியும் என்பதை உறுதிப்படுத்த பாலின அடிப்படையிலான வன்முறைக்குத் தீர்வு காண்பது மிகவும் முக்கியமானது.

சுகாதாரமான வாழ்வு, இயற்கை வளம் பேணுவதிலும் பயன்படுத்துவதிலும் உள்ள உரிமை, சுய முன்னேற்றம் போன்றவற்றை உணர்ந்த அறிவார்ந்த பெண்களாக அனைவரும் செயல்பட வேண்டும். ■

**துளியூண்டு** கிள்ளி வந்த
ஆகாயத்தை
உட்சுவரில் ஒட்டிவைத்து
வானம் தரையிறங்கிவிட்டதாய்
குதூகலிக்கிறாள்..

பிஞ்சு விரல்
வழியே ஒழுகியது
போக
உள்ளங்கையில்
அள்ளிவந்த
கடலை
தரையில் இறக்கி
வைத்து
அலையோசை
அறை முழுதும்
வியாபித்திருப்பதாய்
ஆர்ப்பரிக்கிறாள்..

திறந்து கிடக்கும்
வாசல் கடந்து
ஒருக்களித்திருக்கும்
சாளரம் வழி
உள்நுழைந்த
சூரியக் கதிர்களோடு
விழி பொத்தி
கண்ணாமூச்சி ஆடி
ஆனந்தமாய்
களிப்புறுகிறாள்..

துருவிக்கொட்டிய
பென்சில் துகளெடுத்து
வரைந்த மரக்கிளையில்
வந்தமர்ந்த
மஞ்சனத்திப் பறவைக்கு
சோறூட்டி
தாயாகிவிட்டதாய்
புளகாங்கிதம்
அடைகிறாள்..

சாலைக்குழிகளில்
படுத்துறங்கும்
மழைநீரில்
சில்லு விளையாடி
நனைந்த பாவாடையில்
பிரபஞ்சம் குளிர்விக்கிறாள்..

உலகத்தைத் தன்
விரல் நுனியில் ஏந்தி
சிறகடிக்கும்
அந்த
பத்துவயது
பட்டாம்பூச்சி அறியுமா....

பருவமடைந்தபிறகு
தன் தலையில்
ஏற்றிவைக்க
இந்தச் சமூகம்
பெரும் அழுக்குமூட்டையோடு
காத்திருக்கிறது
என்பதை..

– அமுதா தமிழ்நாடன்

## காதல் சமைத்தல்

**என்ன** சமைப்பது என்பது குறித்து
பற்ற வைக்கும் வரை
ஏதோ ஒரு தவிப்பு

இதமான சூட்டில் ஆக்குதல்
என்பது சுவையைக் கூட்டுவதாய்
உறுதிசொல்கிறது உடலியல்

சேர்மானப் பொருட்களை
தேடித் தேடி
சேர்த்துச் சேர்த்து
சுவை மாற்றிக்கொள்ளலாம்

கூட்டியும் குறைத்தும்
தேவைக்கேற்ப கலத்தலில்
புதுப்புது குறிப்புகள்
தோன்றும் துலங்கும்

பக்குவமாய்ப்
பரிமாறும் முன்பாக
அலங்கரித்தலுக்கு
இதழ்கள் மேலாக
இதழ்கள் தூவலாம்

மனதாரச் சுவைத்தலிலும்
உடலாற ரசித்தலிலும்
செழித்து வளர்கின்றன
தலைமுறைச் சாரங்கள்

ஒவ்வொரு பந்தியின் முடிவிலும்
பசித்திருக்கச் செய்தலே
ஆதாம் ஏவாள் சமைத்துப் படைத்த
காதல் விருந்தின் பெரும்
மகத்துவம்

– கி. சரஸ்வதி

**பார்க்க** நேரிடும்போதெல்லாம்
விண் பார்த்து விரல்விட்டு
எண்ணிக்கொண்டே
கடந்துபோகும்
நடுத்தர வயது ஆண்...

அழுக்கு உடைகளையும்
கிழிந்த துணிகளையும்
மாலையெனத் தோள் சார்த்தி
ஏதேனும் ஒரு மூட்டையை
எப்போதும் சுமந்து திரியும்
மத்திம வயதுப் பெண்...

வாகன நெரிசலான
கடைத்தெருவில்
வருவோர் போவோரை
பார்த்துச் சிரித்தவாறே
கையசைக்கும்
நல்ல உடற் கட்டுடைய
இளைஞன்...

கோயில்களிலும்
ஆதுரச் சாலைகளிலும்
தேரோடிய வீதிகளிலும்
வெறித்த பார்வையுடன்
அமைதியாய் அமர்ந்திருக்கும்
ஆதரவற்றோர்...

ஏதோ ஒரு புள்ளியில்
வெடித்து எல்லாம் முடிந்து
நல்ல மேய்ப்பருக்காக
காத்திருக்கும்
வழி மாற்றி அனுப்பப்பட்ட
செம்மறிகள்..

– ராஜலட்சுமி

சிறுகதை



குடந்தை அனிதா

# காமம் செப்பாது கண்டது மொழிமோ..

"ஒரு விடியலில்
ஆதவன்
மல்லாந்து கிடக்கும்
தடாகத்தில்
யானைப் பசியுடன்
நீந்தும் வாத்து
நட்சத்திரங்களை
தேடுவதில்லை."

அம்சவேணி உறக்கம் வராமல் கவிதை ஒன்றை எழுதிவிட்டு நேரம் பார்த்தாள். மணி 3.33 AM என்று காட்டியது. இப்படியாக நேரம் பார்க்கும்போதெல்லாம் அவள் மனம் குதூகலிக்கும் குழந்தையாகத் துள்ளி எழுந்து ஜன்னல் அருகே நின்று வான் பார்த்து இருளை விழுங்கி வெளிச்சத்தைப் பருக... அதோ 'நட்சத்திரங்கள்' ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ண ஆரம்பித்து 24 வது நட்சத்திரம் எண்ணிக்கொண்டு இருக்கும்போதே 3.34 AM ஆகிவிட்டது.

இப்படித்தான் ஆழ் மனதின் எண்ண ஓட்டத்தை ஒரு நிமிடம் பிடித்து வைப்பது கூட கடினமானது. யானைப் பசியுடன் இருந்தாலும் நட்சத்திரங்களை எண்ண மாட்டேன் என்று நினைத்துக் கவிதை எழுதிய வினாடியே ஏதோ ஒரு உந்துதலில் நட்சத்திரம் தேடி எண்ணத்தொடங்கியது மனம். நாளை வாசுவும், அம்முவும் வந்துவிடுவார்கள் என்ற உள்ளுணர்வும் கூட அந்த விநாடியில் கடந்த கால நினைவுகளைத் தேடத் தொடங்கியிருக்கலாம். இப்போது தூரமாய்த் தெரியும் நட்சத்திரத்தைக் கண்களை இடுக்கி வானத்தை ஊடுருவிப் பார்க்க மூன்று நட்சத்திரங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வரிசைகட்டித் தெரிந்ததை அவள் மனம்

ஓவியங்கள் : சக்தி அருளானந்தம்

இவ்வாறு வரிசைப்படுத்தியது.. நான், வாசு, அம்மு.. அவள் முகத்தில் மெல்லிய புன்னகை அரும்பியது.

அதே நேரம் பயணம் தொடங்கியிருந்த அப்பாவும் மகளும் சென்னையை நெருங்கிக்கொண்டு இருந்தார்கள். பேருந்தில் ஏறியதிலிருந்து அம்மு ஏதாவது பேசிக்கொண்டே வந்தாள்.

`அப்பா, நம்மட்ட ஏம்ப்பா ரொம்ப காசு இல்ல?`

திடீரென வந்த மழலை அலை. அதனால் நிலைகுலைந்து போகவில்லை வாசு.

`இல்லைன்னு, உனக்கு யாரு சொன்னா அம்மு?`

`நேத்து நீதான சொன்ன...`

நேற்று என்னைத் தழுவிய காற்று இன்று கடல் தாண்டி எங்கு சென்றதோ? பேசிய வார்த்தையின் கனம் கூடிவிட்டது போல அந்த வார்த்தை இங்கேயே தங்கியிருக்கக்கூடும்... வாசுவுக்கு முன்னே அவன் மனம் பதில் சொல்லிக்கொண்டிருந்தது..

`என்ன சொன்னேன்னு, அப்பா மறந்துட்டேன், நீயே சொல்லு அம்மு..`

`நம்மட்ட எதுக்குப்பா கார் இல்லைன்னு கேட்டனா.. அதுக்கு ரொம்ப காசு வேணும்னு சொன்ன... எதுக்குப்பா? நம்மட்ட ரொம்ப காசு இல்லையா?` என்று ஆரம்பித்த இடத்துக்கே வந்து நின்றாள் அம்மு.

`கார் இருந்தா இந்த மாதிரி பெரிய பஸ்ல ஏத்த மாட்டாங்க அம்மு...`

`போப்பா நீ பொய் சொல்ற, உனக்கு ஒன்னும் தெரியல` என்று சொல்லித் தன் சிறிய கைகளால் தன் நெற்றியில் வலிக்காமல் தட்டிக்கொண்டாள் அம்மு. சில நிமிடம் அமைதியாக இருந்தவள் மீண்டும் அப்பா வாசுவைப் பார்த்து,

`என் ப்ரெண்ட் மும்தாஜ் அம்மா இருக்காங்கள்ல.. அவங்களுக்கு நெறைய பணம் வேணும்னா ஒரு மிஷின்ல கார்டு போட்டு நம்பர் போட்டா, பாரின்ல இருக்குற மும்தாஜ் அப்பா காசு குடுப்பாராம்,` என்றாள்.

`இத உனக்கு யார் சொன்னா?`

`அவதான் சொன்னா... நீயும் பாரின் போய் அம்மாவுக்கு அந்த மிஷின்ல காசு குடுக்குறியா..`

சட்டென வெளிறியது வாசுவின் முகம். பேருந்தின் எதிர் காற்றையும் மீறி வியர்வை அரும்பியது.

‘இந்தா நீயும் உன் பணமும்..’ முகத்தில் வந்து விழுந்த பாஸ்புக்கும் ஏ டி எம் கார்டும் நினைவுக்கு வர தன்னையும் அறியாமல் இரண்டு கை கொண்டு முகம் துடைத்தான் வாசு. அன்றைய தினம்.. வாழ்க்கையைப் புரட்டிப் போட்ட தினம்.. நெஞ்சுக்குழியில் இருந்து மேலெழுந்தது.

`ஏண்டி, சொல்றத புரிஞ்சிக்க மாட்டியா... இன்னும் ஒரு ரெண்டு வருஷம் பல்ல கடிச்சுட்டு இருந்துட்டா போதும்.. இப்போ இருக்குறத விட வசதியா வாழலாம்ல... புது வீடு கட்டுற வேலை முடியட்டும்.. அதோட வந்துடுறேன்...`

`இதையே எத்தனை வருசத்துக்குச் சொல்வீங்க?... முதல்ல, உங்க அம்மாட்ட வந்து இருந்து பாருங்க, அப்புறம் பேசலாம்...`

`வயசானவங்கடீ... நீ எதுக்குச் சரிக்குச் சமமா எதுத்துப் பேசுற? இந்தக் காதுல வாங்கி அந்தக் காதுல விட்டுட்டுப் பேசாம இருந்தா ஏன் சண்டை வரப்போகுது..`

`ஏன் இதையே உங்க அம்மாகிட்ட சொல்றதுக்கு என்னவாம்... கல்யாணம் ஆகி ரெண்டு வருஷம் ஆகல, அதுக்குள்ள புள்ள பொறக்கலைன்னு ஒப்பாரி வச்சாங்க.... கல்யாணத்துக்கு அப்புறம் அபுதாபிக்குக் கூட கூப்பிட்டுப் போய்டுவீங்கன்னு சொல்லித்தானே கட்டிக்கிட்டிங்க, அப்புறம் என்னவோ விசா கிடைக்கல, வேற ஜாப் ட்ரை பண்றேன், அதுக்கு அப்புறம் கூட்டிக்கிட்டுப் போறேன்னு சொல்லிச் சொல்லி போன்லேயே குடும்பம் நடத்தினீங்க, அப்புறம் எங்கிருந்து புள்ள பொறக்கும்? இது உங்க அம்மாவுக்குத் தெரியாதா? வர்றவங்க போறவங்ககிட்ட எல்லாம் கொர சொல்ல வேண்டியது... சரி போகுது கஷ்டமோ நஷ்டமோ வேலைய விட்டு வந்து உள்ளூர்லயே எதாவது வேலைய பார்த்தோமா குடும்பம் நடத்துனோமான்னு

இருக்கச் சொல்ல வேண்டியதுதான.. அப்டி சொல்லத் துப்பு இல்ல. மகன் வெளிநாட்ல வேலை செய்றான்னு பெருமை வேணும், காசு வேணும், நான் புள்ளையும் பெத்துக் குடுக்கணும். நாம சேர்ந்தும் இருந்துடக் கூடாது... நல்லா இருக்கு உங்க வீட்டு நியாயம்..`

இப்படியாகத் தொடங்கிய சண்டை வாசு மீண்டும் வெளிநாட்டுக்குக் கிளம்பும் அன்று வரை தொடர்ந்தது.

தன் சொந்த வீடு ஆசையை நிறைவேற்றிக்கொள்ள அந்தச் சண்டையுடன் அபுதாபி கிளம்பிப் போன வாசு இரண்டு வருடம் கழித்து அடுத்த விடுமுறைக்கு வந்திருந்தபோது, வீடு கட்டி முடித்துக் கிரகப்பிரவேசம் என்று சாதி சனம் ஊரையே அழைத்து விருந்து வைத்து அமர்க்களப்படுத்திவிட்டான்.... என்ன இருந்தாலும் பாரின்காரன் வீடு, வீடு தான்யா என்று ஊரே கொண்டாடியது. அம்மாவுக்குத் தனி ரூம்.. மாடியில் இவர்களுக்கு மாஸ்டர் பெட் ரூம் என்று இழைத்து இழைத்துக் கட்டிய அறையில் வாசுவும் அம்சவேணியும் அன்று இரவு தங்கினார்கள்.

எத்தனை இரவுகள் தனித்தனியாக உறங்கி இருப்பார்கள்... போனில் நேற்றைய முதல் நாள் வரை நினைத்த மாத்திரத்தில் சண்டை போட்டு அலுத்துப்போய் விட்டது.. இன்று நேரில் பார்த்ததும் உடல் இரண்டும் வேட்கையைத் தீர்த்துக்கொண்டிருந்தது. காமம் தலைக்கு ஏற ஆடை துறந்த அம்சவேணியும் வாசுவை விலக விடாமல் இறுகப் பற்றிய உடலில் காற்றுக்கும் இடமில்லாமல் தன்னை மறந்த உடல்கள் இரண்டும் கொண்டாடிக்கொண்டு இருந்தன.. காமன் ஓய்வெடுக்கும் நேரம் ஜன்னல் அளவு வானத்தில் எத்தனை நட்சத்திரம் என்று எண்ணிக்கொண்டு கன்னம் நிறைய முத்தத்தைப் புதைத்துக்கொண்டு அன்று இரவு முழுவதும் ஒருவரில் ஒருவர் தேடிக்கொண்டிருந்ததை நொடி விடாமல் அறையிலிருந்த கடிகாரப் பெண்டுலம் பார்த்துக்கொண்டு இருந்தது.

இனி தன்னுடன் கூடவே இருப்பான் என்ற நம்பிக்கையில் தினம் தினம் மகிழ்ச்சியாக நட்சத்திரம் எண்ணிக்கொண்டு இருந்தாள் அம்சவேணி. 40 நாள் விடுமுறை முடிந்து வெளிநாடு கிளம்ப வேண்டும் என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டான் வாசு. இதைச் சற்றும் எதிர்பாராத அம்சவேணி விறுவிறுவென்று வீட்டுக்கு உள்ளே சென்றாள். `இந்தா நீயும் உன் பணமும்..` பாஸ்புக்குடன் ஏடிஎம் கார்டும் வாசு முகத்தில் வந்து விழுந்தது. `இனிமே இதையே கட்டிக்கிட்டு அழு, நான் எங்க அம்மா வீட்டுக்குப் போறேன்` என்று போய்விட்டாள்.

`சொல்லுப்பா.. ஏன் ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கிறே...` அம்முவின் குரலும் பஸ்சில் உடன் இருப்பவர் சிலர் தன்னையே பார்ப்பதும் தெரிந்து மெல்லிய குரலில் `இப்போ எங்க போறோம் தெரியுமா? சென்னைக்குப் போறோம், அம்மாவ அழைச்சிக்கிட்டு வர... உனக்கு நெறைய காசு வேணுமா? அம்மா வேணுமா? நீ இந்த மாதிரி ஏதாச்சும் கேள்வி கேட்ட அம்மா நம்ம கூட வரவே மாட்டாங்க, பேசாம வேடிக்கை பாரு, இல்லனா தூங்கு அம்மு,` என்றான்.

`ஆமாம் பா.. அம்மாவ நம்ம கூட, கூட்டிக்கிட்டு வந்துடலாம் ப்பா.... பாவம் பா அம்மா... அம்மாக்கு ஊசி எல்லாம் போடுறாங்கன்னு அம்மாச்சி சொன்னாங்கபா...` அம்மு தன் கையிலிருந்த பேப்பர் ஒன்றை வாசுவிடம் காண்பித்தாள்.

`இது அம்மாவுக்குத் தரணும்.`

நீல நிற வானம், தொடர் மலை அடிவாரத்தில் சிறிய குடிசை வீடு வரைந்து அம்மா அப்பா அம்மு என்று எழுதி ஆண் பெண் சிறுமி படம் வரைந்து இருந்தது. `இதுதான் பேமிலின்னு எங்க மிஸ் சொன்னாங்க பா...`

ஐந்து வயது குழந்தையின் கேள்விக்கு விடையில்லை வாசுவிடம். மகளின் கேள்விக்குப் பதில் சொல்லி மாளாது என்று தெரிந்ததும் ‘அப்பாக்குத் தூக்கம் வருது, நான் தூங்குறேன்` என்று அலையை நிறுத்த முடியாமல் கடலிடம் இருந்து தள்ளி நின்றுகொள்ள முயன்றான் வாசு.

மீண்டும் `அப்பா... அப்பா` என்று அழுத்தமாக ஒலித்தது அம்முவின் குரல்.

`அப்பா பஸ் நின்னுடுச்சி, சுச்சு போகணும் கூட்டிட்டுப் போங்க...`

பஸ்ஸில் பாதி பேர் வரை இறங்கி காபி குடித்துக்கொண்டு இருந்தார்கள். பாத்ரூம் பக்கம் மகளை அழைத்துப் போய் விட்டு மீண்டும் பஸ் ஏறி அவர்கள் இடத்தில் அமர்ந்தார்கள். ஒரு வயதிலிருந்து இன்று வரை அம்முவை வாசுதான் பார்த்துக்கொள்கிறான்.

பஸ் பரனூர் டோல்கேட் தாண்டி இருந்தது.. அம்மு தூங்காமல் ஜன்னலோரம் வேடிக்கை பார்க்கத் தொடங்கி இருந்தாள்... அவள் தலையை வருடிக் கொடுத்துக்கொண்டிருந்த வாசுவிற்கு மகளை முதன்முதலாகப் பார்த்த நாள் நினைவில் நிழல் ஆடியது. வாசு அபுதாபி சென்ற சில நாட்களில் அந்த நல்ல செய்தி வந்தது...

`நாலு வருஷத்துக்கு அப்புறம் கர்ப்பம் தங்கிடுச்சி..`

அதுவும் பிள்ளை உண்டான சந்தோஷத்தைக் கூட அம்சவேணி சொல்லவே இல்லை. இதையும் அம்மா சொல்லித்தான் தெரிந்துகொண்டான். வாசு எவ்வளவோ முயற்சி செய்தும் அம்சவேணி அவனுடன் பேசவே இல்லை. அம்சவேணியை எப்படி பேச வைப்பது என்றும் வாசுவுக்குத் தெரியவில்லை. அம்மாவிடம் கேட்டால் `அவ முன்ன மாதிரி இல்லடா, ரொம்ப அமைதியா மாறிட்டா, நீ தைரியமா இரு. நாங்க பாத்துக்குறோம்,` என்று சொல்லிவிடுவார்.

அம்சவேணிக்குக் குழந்தை பிறந்து, ஆஸ்பத்திரியில் இருந்து வீட்டிற்கு வந்தும் கூட குழந்தையைத் தூக்குவது கொஞ்சுவது என்று எந்த ஆர்வமும் காட்டாமல் வெறித்து உட்கார்ந்து இருப்பாள்.

அம்சவேணியின் அம்மாதான் இரவு பகல் பாராமல் குழந்தைக்குப் பால் குடிக்கச் செய்து அருகிலேயே இருப்பாள்.. அப்படியாக பால் கொடுக்க மாராப்பை விலக்கத் தொடங்கியவள் சில நேரம் சீலை முழுவதையும் கழட்டி அருகில் வைத்துவிட்டு உள்பாவாடையோடு ஜன்னலோரம் நின்று வானத்தையே வெறித்துப் பார்த்துக்கொண்டு இருப்பாள்.

`பித்து பிடிச்ச மாதிரி ஏண்டி இப்டி மானத்தை வாங்குற.. பச்ச உடம்புக்காரி புள்ளைய கூட பாத்துக்கத் தெரியாம எத்தனை நாளைக்குத்தான் இப்படி மாராப்பைத் திறந்து கிடப்ப` என்று அம்மா புலம்பினால் விம்மி வெடிக்கும் ஏக்கம் மார்பில் பாலாக வடியுமே தவிர அவள் கண்ணில் துளி கண்ணீர் வராது... காலம் முச்சூடும் இத எப்படி மூடி மறைக்க முடியும்.. டெலிவரி பார்த்த டாக்டரிடம் கேட்டபோது `அவங்களுக்கு உடம்புல ஒன்னும் பிரச்சனை இல்லை, மனசுலதான் கோளாறு. முதல்ல அவங்க வீட்டுக்காரரை வரச்சொல்லுங்க. அதுக்கப்புறம் ஏதாச்சும் மாற்றம் தெரியுதான்னு பாக்கலாம்`னு சொன்னதும் மாப்பிளைக்கு போன் போட்டுச் சொல்லிட்டாங்க.

`குழந்தை பொறந்து கூட ஆறு மாசம் ஆச்சு, இன்னும் நீங்க வரலைன்னா நல்லா இல்லைங்க மாப்ள...`

`எனக்கு மட்டும் ஆசையா என்ன மாமா.. இருக்குற வேலைய விட்டுட்டு அங்க வந்து என்ன பண்ணப் போறோம்னுதான் பயப்படுறேன்.`

`இது என்னமோ இருக்குறத விட்டுப் பறக்குறதுக்கு ஆசைப்படுற மாதிரில்ல இருக்கு... பொண்டாட்டி புள்ள வேணும்னா சீக்கிரம் வந்து சேருங்க... எங்களுக்கு என்னமோ எங்க பொண்ண இழந்துடுவோமோன்னு பயமா இருக்கு` என்று படபடவென்று பேசினார் அம்சவேணியின் அப்பா...

வாசுவின் மனதிலும் ஒருவித வெறுமையும் மகளைப் பார்க்கும் ஆசையும் சேர்ந்துகொள்ள... சேர்த்து வைத்திருந்த பணம் அவனைப் பார்த்துச் சிரிப்பதாகத் தோன்றிய ஒருநாளில் சட்டென முடிவு செய்து வேலையைத் தூக்கி எறிந்துவிட்டு ஊருக்குக் கிளம்பிவிட்டான்.

`அப்பா அப்பா அங்க பாரு, பிளைட் போகுது,` பாரு ஜன்னலில் எட்டி அது மறையும்வரை பார்த்தாள்.

`நம்மகிட்ட கார் இல்லைல, நாம

பிளைட்ல போகலாம் ல பா....`

`ம் போலாம்... பேசாம வா அம்மு, இன்னும் கொஞ்ச நேரத்துல அம்மாவ போய்ப் பாக்கலாம்....`

அம்சவேணியின் அப்பா வாசுவின் அருகில் வந்து அமர்ந்தார். `இந்தக் கண்றாவி எல்லாம் எப்படி உங்ககிட்ட சொல்றதுன்னுதான் தவிச்சுக்கிட்டு இருந்தோம். உள்ளூர் டாக்டர் முடிஞ்ச வரைக்கும் ட்ரீட்மெண்ட் குடுத்துட்டாங்க மாப்ள... பெரிய வைத்தியம் பார்க்கணும்னா கீழ்ப்பாக்கம் போய்க் காட்டச் சொல்றாங்க, என்ன செய்யலாம் ஏதுங்குறத நீங்கதான் முடிவு செய்யணும்.`

`நாளைக்கே போகலாம் மாமா` என்று தாமதிக்காமல் சென்னைக்குக் கிளம்பினார்கள்.

`அப்பா எல்லாரும் எறங்கிட்டாங்க, வாங்க அம்மாவ பாக்கப் போகலாம்` என்ற அம்மு உணவுக்குக் காத்திருக்கும் குருவிக் குஞ்சாய்த் தன் கீச்சுக் குரலால் அப்பாவை நிதர்சன உலகத்திற்கு அழைத்தாள்.

கடந்த கால நினைவுகளால் மனம் சோர்வடைந்து போயிருந்த வாசுக்கு மீண்டும் கீழ்ப்பாக்கம் வரை பஸ்சில் மகளை அழைத்துச் செல்ல விருப்பம் இல்லை. கால் டாக்ஸிக்கு புக் செய்துவிட்டு அம்முவைத் தூக்கிக்கொண்டு அம்சவேணிக்காக எடுத்து வந்த புடவையுடன் காத்திருந்தான். விதவிதமான மனநிலையில் போவதும் வருவதுமாகக் கோயம்பேடு மனிதர்களால் நிரம்பி இருந்தது.

அன்று முதல் முறை கீழ்ப்பாக்கம் வந்தபோது டாக்டர் இரண்டு மூன்று சிட்டிங் இரண்டு பேரையும் வைத்து நிறைய பேசி நோட்ஸ் எடுத்துக்கொண்டார்கள்.. அப்போது கூட அம்சவேணி வாய் திறந்து பேசவே இல்லை.

வாசுதான் பதட்டமாக `மன அழுத்தம்தான் காரணமா டாக்டர்?` என்று மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டு இருந்ததைப் பார்த்த டாக்டர்,

`மன அழுத்தம் இல்லாத வாழ்வைக் கற்பனை செய்தும் பார்க்க முடியாதுங்க வாசு... ஒரு அளவு வரை, மன அழுத்தம் இருப்பது சீரான வளர்ச்சிக்குத் தேவைப்படவும் கூடும். ஆனாலும் அழுத்தம் அதிகமானால் மனநோயைத் தூண்டி மன உளைச்சலை அதிகரிக்கும்ன்னுதான் சொல்றோம். ஒரு நபரின் மன அழுத்தம் தாங்கும் திறன் காலகட்டங்களுக்குத் தகுந்தவாறும் மாறுபடலாம். அடக்க முடியாத ஆசைகள், தேவையற்ற கவலைகள், படபடப்பு, அதீத பயம், பயத்தால் பாதிப்புகள், குணாதிசயத்தில் அடிக்கடி மாற்றங்கள்.. செயல்பாட்டு விளைவுகள் பாதிக்கப்பட்ட நபர் எவ்வாறு செயல்படுகிறார் என்பதில் வெளிப்படும். அம்சவேணியைப் பொறுத்தவரை உங்களை அவரருகில் வரவழைக்க வேண்டும் என்பதற்காகவே மௌனப் போராட்டத்தில் தொடங்கி ஆடை துறப்பு வரை எதிர்வினை செய்யத் தொடங்கியும் யாரும் அவர்மேல் போதிய அக்கறையோ கவனமோ செலுத்தாமல் விட்டதின் விளைவு... தான் நினைத்தது நடக்காமல் போகவே எதிலும் ஆர்வமில்லாமல் சுயம் இழக்கத் தொடங்கிவிட்டார்...


மருத்துவத்தைப் பொறுத்தவரை எதுவும் தாமதமில்லை. இப்போதைய தேவை அவருக்குத் தொடர் சிகிச்சை மட்டுமே... முயற்சி செய்து பார்க்கலாம். சகஜ நிலைக்கு வர சில மாதம், சில வருடங்கள் கூட ஆகலாம். அதுவரை அவர் இங்குதான் தங்க வேண்டும். உங்களுக்கு ஓகேன்னா பார்மாலிட்டிஸ் சைன் பண்ணிட்டு அட்மிட் பண்ணிடுங்க,` என்றார்.

செல்போன் தொடர்ந்து அடிக்க, நினைவைக் கலைத்து நிஜத்திற்கு ஹலோ சொன்னான் வாசு.

`ஊபர் புக்கிங் சார், எங்க வெயிட் பண்றீங்க... கோயம்பேடு உள்ளேயா? அப்டியே முன் கேட் கிட்ட வெளிய வாங்க சார்` என்று சொல்லி இருவரையும் ஏற்றிக்கொண்டு கார் கீழ்ப்பாக்கம் விரைந்தது.

அம்மு தான் வரைந்த ஓவியத்தைத் தயாராக கையில் எடுத்து வைத்துக்கொண்டாள். ■

விஜயராணி மீனாட்சி






# உள்முகத் திறப்பு

**நூல் : லிங்க விரல் (கவிதைகள்)**
**ஆசிரியர் : வேல் கண்ணன்**

எடுத்த எடுப்பிலேயே வாசித்ததும் புரிந்துகொள்ளும் வகைமையிலான கவிதைகள் சாதாரணமானவை என்று சொல்லிவிட முடியாது.

அதுபோலச் சில கவிதைகள் முதல் வாசிப்பைத் தாண்டி வேறு ஒரு உட்பொருள் உணர்த்தினாலும் மீள் வாசிப்பின் கால இடைவெளியில் நாம் அறியாவண்ணம் வேறுவேறு பொருளுணர்த்தும் மாயம் செய்யும் அல்லது ஏதேனும் உள்முகத் திறப்பினை நிகழ்த்தும்.

கலைஞனின் மனம் சுதந்திரமாக இயங்கும் தன்மையுடையது. தனது எண்ணத்தின் எல்லையையும் கடந்து கடந்து பலவிதமான கற்பனைகளையும் உணர்வுகளையும் காட்சிகளையும் படிமங்களையும் நமக்குத் தருகிறார் கவிஞர் வேல் கண்ணன்.

நெளிந்த சொற்களுக்குள் சிக்கிச்சிக்கி ஒவ்வொரு முறையும் மீண்டும் மீண்டும் வாசித்து நெளிவில் சிக்காது பொருள் தேட முயல்கிறேன். சற்றே சிரமமென்று என் வாசிப்பின் எல்லையில் நின்று ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

குறியீடுகளையும் படிமங்களையும் தத்துவங்களையும் கொண்டிருப்பதை அட்டைப்பட ஓவியமும் உள்ளொரு பக்க ஓவியமுமே சூசகமாகச் சொல்கின்றன.

எல்லோருக்குமான உணவை எப்படித் தயாரிப்பதென்பதையே ஒரு பெண்ணின் பார்வையில் உணர்கிறேன்.

நிலா, கடல், அலை, நீலம், மலை, மழை, பறவை, நதி, அருவி எனத் தொடரும் தொன்மங்கள் கவிதைகள் முடிவிலி என்று சொல்லி ஆங்காங்கே அற்புதம் நிகழ்த்துகின்றன. வெளியேறுவதற்கான காரணங்கள் இருந்தும் ஒன்றில் நிற்கிற அல்லது உழல்கிற வாழ்வுதான் போலும்.

எல்லை காப்போனின் வரிகளாய்ச் சில கவிதைகள் நிராயுதபாணியாய், துரோகத்தின் குறியீடாய் மிளிர்கின்றன.

வீணையும் உடுக்கையும் பம்பையும் பறையொலியும் சேகண்டியும் இவையெல்லாம் இசை வடிவமாயினும் அவை தெருக்களின் இசையாக சாதியம் சார்ந்த இசையாக இருப்பதைச் சொல்ல ஒரு கவிதை.

தீநுண்மிக் கவிதைகள் சில. அதிலொரு கவிதையின் மிகச் சிறப்பான வரிகள் இப்படி முடிகின்றன...

"..... இவ்வுலகின் மிக நீண்ட தூரம்
மூக்கிலிருந்து நெஞ்சாங்குழி வரை!"

கனவுகள் தொடர்பான அநேகக் கவிதைகள் அழகியலும் ஆசையும் முரணும் ஆதங்கமுமாக...

"ஒருமுறையேனும் ஓசை எழுப்பாமல்
இரவுக்குள் நுழைந்துவிட வேண்டும்
இரவு நுழைவது போல.."

சிறைப்படுதலையும் அன்றேல் மூழ்கித்திளைத்தலிலிருந்து விட்டுவிடுதலையாவதையும் சில கவிதைகள் தத்துவார்த்தமாக மாயச் சொற்களோடு சொல்லி வலம்வருகின்றன. காடு திறத்தலும் கனவு திறத்தலும் கவிஞனின் கைகளில் கிடைத்த மந்திரத் திறவுகோலாய்..

"விலகிய கனவும்
கைகோர்த்து உலாவிய பகலும்
பரிமாறிக் கொண்டன
தத்தமது விடுபடுதலை.."

கட்டுரை



ஆதிரா முல்லை

# ஜனனமும் மரணமும் புதியது இல்லை

இந்த உலகத்திலேயே மிக மிக மலிவான ஒரு விஷயம் எது? ஒவ்வொரு மனிதருக்குள்ளேயும் இருந்து அவர்களை வளர விடாமல் அல்லது வாழ விடாமல் தடுக்கக்கூடிய ஒரு விஷயம் எது என்று கேட்டால் ஒரே ஒரு பதில்தான் உண்டு. அதுதான் கவலை. எதைப்பற்றியாவது கவலைப்பட்டுக்கொண்டிருப்பதே மனித மனம். அதிலும் மிக மிக முக்கியமான கவலை மரணத்தைப் பற்றிய கவலை.

நல்ல மரணமாக இருக்க வேண்டுமே.. மரணம் வரை வாழ்ந்துவிட்டால் எப்படி வாழ்வோம் என்று கேள்வி. மரணம் வரை நோயில்லாமல் வாழ்வோமா என்ற கேள்வி. மரணம் வரை வறுமை இல்லாமல் வாழ்வோமா என்ற கேள்வி. மரணம் வரை நம் குழந்தைகள் நம்மைப் பாதுகாப்பார்களா என்ற கேள்வி. மரணம் வரை மகிழ்ச்சியாக இருப்போமா என்ற கேள்வி. இப்படியான கேள்விகளோடு இப்படியான கவலைகளோடு வாழக்கூடிய ஒரே உயிரினம் மனிதன் மட்டும்தான். வேறு எந்த ஐந்தறிவு, நான்கறிவு, மூன்றறிவு, இரண்டறிவு, ஓரறிவு உயிரினமும் இப்படிப்பட்ட கவலைகளைக் கொள்வதே இல்லை.

பெண்களைப் பொறுத்தவரை இந்தக் கவலை என்பது எதிர்காலப் புலனாகப் பார்க்க முடியும். எதிர்காலத்திற்குச் சேமித்து வையுங்கள் என்று சொல்வது ஓரளவு கவலையை வெல்வதற்குத்தான். செல்வந்தர்களிடம் இக்கவலை இல்லையா? அவர்களிடமும் இந்தக் கவலை இருக்கும். பணத்தால் ஓரளவு சமாளித்துக்கொள்ளலாம். இந்தக் கவலை எப்போது போகும்? எப்படி போகும்?

நல்ல வேளையாக மரணத்தின் தருணத்தை இயற்கை மறைத்து வைத்துவிட்டது. அதுமட்டும் தெரிந்திருந்தால் அதன் அடிப்படையில் எத்தனை அக்கிரமங்கள் நடக்கும் என்பதை எண்ணிப்பார்க்கவே அச்சமாக இருக்கிறது.

மறைந்தே ஒரு நூறு ஆண்டுகள் கடந்தும் கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கும் பாரதியார் வாழும் காலத்தில் கொண்டாடப்படவில்லை. அன்றாடப் பிரச்சனைகளில் அல்லல் பட்டுக்கொண்டு இருந்தார். அதனால்தான், “என்னைக் கவலைகள் தின்ன தகாதென்று நின்னைச் சரணடைந்தேன்” என்று பராசக்தியை வேண்டினார்.

பன்னிரெண்டு ஆண்டுகள் வனவாசம் முடிந்து பாண்டவர்கள் ஓராண்டு தம்மை வெளியில் காட்டிக்கொள்ளாமல் மறைந்து வாசம் செய்ய வேண்டிய காலம். ஒருநாள் காட்டில் அலைந்துகொண்டிருந்த சமயம் எல்லோருக்கும் தாகம் ஏற்பட, தருமர் நகுலனை அருகில் ஏதேனும் நீர்நிலை தென்படுகிறதா என்று பார்த்து வரும்படி கூறினார். சென்ற நகுலன் ஒரு பொய்கையைப் பார்க்கிறான். முதலில் தன் தாகத்தைத் தணித்துக்கொண்டு சகோதரர்களுக்கும் தண்ணீர் எடுத்துச் செல்லலாம் என்று எண்ணிய நகுலன் பொய்கைக்குள் இறங்குகிறான். அப்போது “சாகசம் செய்யாதே நகுலா, எனது கேள்விகளுக்குப் பதிலளித்த பின் நீர் அருந்தவும்” என்று ஒரு அசரீரி கேட்கிறது. அதை அலட்சியம் செய்து தண்ணீரை அருந்திய நகுலன் மயங்கி விழுந்து விடுகின்றான். நெடுநேரமாகியும் நகுலனைக் காணாததால் சகாதேவனை அனுப்புகின்றார் தருமர். அவனுக்கும் அப்பொய்கையில் அதே நிலைதான். அதே போல அருச்சுனன், பீமன் என்று தேடிச்சென்ற தம்பிமார்கள் நால்வரும் மயக்கமடைகின்றனர். இப்போது தருமரே செல்கிறார். அவரிடமும் அந்த அசரீரி எச்சரிக்கை செய்ய, அவர் கேள்விகளுக்குப் பதிலளிக்கச் சம்மதிக்கிறார். தருமரிடம் நிறைய கேள்விகள்

கேட்கப்படுகின்றன.

புல்லைவிட அலட்சியமாகக் கருதிவிடத் தக்கது எது? என்கிறான் யட்சன். ‘கவலை’ என்கிறார் தருமர். எந்த மனிதன் துணை உள்ளவனாகிறான்? என்று யட்சன் கேட்கிறான். தைரியமுள்ள மனிதன் துணை உள்ளவனாகிறான் என்கிறார் தருமர்.

வயது கூடும்போது நோய்வரும் என்று எந்த இயற்கையின் சட்டமும் கிடையாது. உடலில் இருக்கும் ஒவ்வொரு உறுப்பும் உயிருடன் இருக்கும் அத்தனை நாளும் பயன்படவே படைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே வயதானால் அந்த நோய் வரும், வயதானால் இந்த நோய் வரும் என்று அஞ்சி அஞ்சிக் கவலை நோயில் விழக்கூடாது.

மிருகங்கள் எந்தக் கவலையும் கொள்வதில்லை. மரணிக்கும் வரை தன் வேலைகளைத் தானே செய்துகொள்கின்றன. எந்தச் சிங்கமும், எனக்கு வயதாகிவிட்டது, இனி நீதான் சோறு போட வேண்டும் என்று தன் குட்டிகளிடம் சண்டை போடுவதில்லை. எந்த மாடும் படுத்துக்கொண்டு தன் கன்றிடம் தண்ணீரோ உணவோ கேட்பதில்லை. எந்தப் பூனையோ, நாயோ முதுமையில் படுத்துக்கொண்டு தம் குட்டிகளிடம் கையேந்துவதில்லை. மரணம் அடையும் நாள் வரை சுயமாகத் தன் வேலைகள் அனைத்தையும் தாமே செய்துகொள்கின்றன.

மனிதர்கள் மட்டும்தான், வயதானால் நோய் வரும், இயலாமை வரும் என்று கவலை கொண்டே நோயிலும் பாயிலும் விழுந்துவிடுகின்றார்கள். முதுமை என்பது வயதில் இல்லை; நோய் என்பது உடலில் இல்லை; இயலாமை என்று எதுவுமில்லை, ஆனால் முயலாமை இருந்தால் எதுவும் கிடைப்பதில்லை. முடியும் என்று எண்ணும் மன உறுதியில்தான் எல்லாம் இருக்கிறது என்பதை முதலில் நம்ப வேண்டும். எதை நம்புகிறோமோ அதுவாகவே ஆகிறோம். நான் ஆரோக்கியமாக, மகிழ்ச்சியாக, ஆனந்தமாக வாழ்வேன் என்று நம்பினால் நோயே வந்தாலும் வாழ்வே போனாலும் அப்படித்தான் வாழ்வோம்.

ஸ்டீவன் ஹாக்கின்சை விட ஒரு நோயாளியைப் பார்க்க முடியுமா? மூளையைத் தவிர எந்த உறுப்பும் இயக்கமின்றிச் சக்கர நாற்காலியில் ஒரு சடமாக அமர்ந்திருந்த அவர் எந்த நம்பிக்கையில் சுமார் 75 ஆண்டுகள் இம்மண்ணில் வாழ்ந்தார்? உலகமே வியக்கும் சார்பியல் ஈர்ப்புக் கோட்பாடு, கருந்துளைக் கோட்பாடு, பெரு வெடிப்புக் கோட்பாடு என்று தொடர்ந்து ஆய்ந்து ‘ஹாக்கின்ஸ் கோட்பாடுகள்’ என்று அண்ட ஆய்வில் ஓர் புதிய தடத்தை அமைத்தார். “எனது ஆய்வுப் பணிகளில் நான் வெற்றி கண்டிருக்கிறேன். பல பத்து இலட்சம் பிரதிகள் உலகம் முழுவதும் விற்பனை ஆகும் அளவுக்கு ஒரு பெஸ்ட் செல்லர் நூலை எழுதியிருக்கிறேன். இதற்கு மேல் ஒருவருக்கு என்ன தேவையிருக்க முடியும்” என்று பெருமிதமாகக் கேட்க அவரிடம் இருந்தது நம்பிக்கையும் சிந்திக்கும் அதி அற்புத மூளையுமே.

“ஜனனமும் பூமியில்
புதியது இல்லை
மரணத்தைப் போல் ஒரு
பழையதும் இல்லை
இரண்டுமில்லாவிடில்
இயற்கையும் இல்லை”

என்று வைரமுத்து காத்திரமானதொரு தத்துவக் கவிதையை வடித்திருப்பார். பிறப்பும் இறப்பும் இடைப்பட்ட துன்பங்களும் இயல்பானவை; இயற்கையானவை. அஞ்சுவதாலோ, கவலை கொள்வதாலோ எந்த மாற்றமும் ஏற்பட்டுவிடாது. ஆனால் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்தால் மரணத்தை வென்று பெருவாழ்வைப் பெற முயலலாம்.

பொதுவாக எல்லோரும் காலையில் எழுந்ததும் நாட்காட்டியின் தாளைக் கிழிப்பார்கள். உறவினர் ஒருவர் ஒவ்வொரு நாளும் இரவு உறங்கப் போகும்போது, “இன்றைய நாள் இனிதே முடிந்தது” என்று கூறிக்கொண்டே நாட்காட்டியின் தாளைக் கிழிப்பார். அதுதான் சரியானதும். ஒவ்வொரு நாளும் சிறியதும் பெரியதுமாக எதோ ஒன்றின் காரணமாகக் கவலை வரும். ஒவ்வொரு நாளும் முடிந்தவுடன் நாள்காட்டில் இருந்து ஒவ்வொரு காகிதமாகக் கிழித்து எறிவது போல அந்தந்த நாளின் கவலைகளை அந்தந்த நாளின் முடிவிலேயே கிழித்து எறிவதுதான் நிம்மதியாக, நிறைவாக வாழ்வதற்கான ஒரே வழி. கவலையை ஒதுக்குவதும் தைரியத்தை உற்ற துணைவனாகக் கைக்கொள்வதும் முதுமையைக் கடக்க உதவும் இருவழிச்சாலை. இது இருபாலர்க்கும் பொது. ■

சவிதா

# தாலி பாக்யம்



பெட்ரோல் நிரப்பிக்கொண்டிருக்கும்போதே ஷ்ரேயாவிடமிருந்து அழைப்பு வந்துவிட்டது. ஃபோனை எடுத்துப் பேசவும் முடியாது. வண்டியை வெளியே கொண்டு வந்து காதில் ஃபோனை வைத்துத் தோள்களில் இறுக்கிக்கொண்டே பேசும்போதுதான் அந்த விபத்து நிகழ்ந்தது.

எப்படி ஏதென்றெல்லாம் ஒன்றும் புரியாமல் ரோட்டில் விழுந்து கிடந்தாள் நித்யா. கூட்டம் கூடி எழுப்பிவிட்டதில் பாய்ந்து வண்டிக்குக் கீழே கிடந்த ஃபோனைத்தான் எடுத்தாள். காலில் கையில் லேசான சிராய்ப்புகள். பெட்ரோல் பங்கில் இருந்து வெளியில் வந்த சிவப்புப் பைக்காரன் தன்னை இடித்திருக்கிறான் எனப் புரிந்தது. சுற்றியிருந்தவர்கள் கேள்வி கேட்க, `சாரி மேடம். சாரி..` என்று பதைத்துக்கொண்டிருந்தான்.

ஷ்ரேயா தனியாக பஸ் ஸ்டாண்டில் நின்றுகொண்டிருப்பாளே என்ற பயத்தில் நித்யா தலையாட்டிவிட்டு வண்டியை எடுக்கப் போக, கால் நரம்பு சுரீர் என இழுத்தது. காலை ஊன்றவே முடியவில்லை. கடைசியில் அவன் வண்டியை ஓரங்கட்டிவிட்டு நித்யாவின் வண்டியை ஓட்டி வீட்டில் விடுவதாகப் பேசி முடிவாயிற்று. வண்டியை அவன் எடுக்கும்போதுதான் கவனித்தாள். அவன் கைமுட்டியிலும் சிராய்ப்பிருந்தது.

`ஏங்க.. நீங்களும் விழுந்துட்டீங்களா.. அடி பட்ருக்கு போல.`

`ஆமாக்கா.. நானும் ஃபோன் பேசிக்கிட்டே வந்தேன். பையன க்ளாஸ்ல இருந்து கூட்டிட்டுப் போகணும். அதான். சொல்லிட்டு வந்தேன்.`

அக்கா என்று கூப்பிட்டவுடன் எட்டி ரியர் கண்ணாடியில் முகம் பார்த்தாள். அப்படி ஒன்றும் சின்னப் பையனில்லை. ஆனாலும் அக்காவாம். சரி. பாவம் போகட்டும்.

`சரி. பஸ் ஸ்டாண்டில என் ஃப்ரெண்டு வெய்ட் பண்றா. அங்க ட்ராப் பண்ணிட்டுக் கிளம்புங்க போதும். நாங்க போய்க்கறோம்.`

`தேங்க்ஸ்க்கா.. அங்க எல்லாரும் திட்டவும் பதட்டமா போயிருச்சு. ஃபோன் பேசிட்டு வந்தது தப்புதான். ஆனா.. நீங்களும்..`

இழுக்க இவளுக்குக் கோபம் வந்தது.

`ஏம்ப்பா.. நான் என்ன உன்னை மாதிரி பேசிக்கிட்டேவா ஓட்டினேன். வெளில வந்துதானே.. பேசினேன்?`

`அ.. ஆமாக்கா. ஆனா.. கொஞ்சம் தள்ளி நின்னுருக்கலாம்.`

உண்மை உறுத்த மவுனமாகி ஷ்ரேயாவின் நம்பருக்கு பட்டனைத் தட்டி ஃபோன் செய்தாள்.

`எவ்ளோ நேரமா நிக்கறது. வரியா. என்ன?`

`ஏய். பக்கத்துல வந்துட்டோம். இரு.`

சரவணா வாசலில் நின்றிருந்தாள். இவன் இறக்கிவிடும்போதே அவனுக்கும் ஃபோன் வர, ஷ்ரேயாவிடம் அடிபட்டது பற்றிச் சொன்னாள்.

`ஏய்.. சும்மாவா விட்ட.. வண்டி ஃபுல்லா செக் பண்ணிட்டியா. ஏதாவது செலவு வெக்க போவுது. இப்பவே கேட்டு வாங்கினாத்தான் உண்டு.`

ஓவியங்கள் : சக்தி அருளானந்தம்

`வண்டிக்கெல்லாம் ஒண்ணும் ஆவல. நீயும் என் புருஷன் மாதிரியே வண்டிய பத்தி மட்டும் கவலைப்படு. என்னை பாருடி. நொண்டிக்கிட்டு கிடக்கறேன்.`

குனிந்து பார்த்தவள் அலட்சியமாகச் சிரித்தாள்.

`அப்படி ஒண்ணும் தெரிலயே..`

நித்யா கடுப்பாக அதற்குள் அவன் வந்தான்.

`அக்கா.. பையன் அவன் ஃப்ரெண்டு கூடவே வீட்டுக்குப் போய்ட்டானாம். வாங்கக்கா.. நானே வீட்ல விட்டுட்டுப் போய்டறேன்..`

`அப்ப நான் எப்படி போறது?` ஷ்ரேயா கேட்க, அவன் கேள்வியாக நித்யாவைப் பார்த்தான்.

`என் ஃப்ரென்டு. இவளை ஊர்லருந்து பிக்கப் பண்ணத்தான் வந்தேன். இவ வண்டி ஓட்டுவா. நாங்க போய்க்கறோம். நீங்க கிளம்புங்க.`

`ஓ. அப்படியா. சரிக்கா. தேங்க்ஸ்.`

வண்டி சாவியைக் கொடுத்தான். கிளம்பிவிட்டான். ஷ்ரேயா முறைத்துக்கொண்டே வண்டியை எடுத்தாள். `சரி வா. கேக் வாங்கிக் கொடு.`

பேக்கரியில் நிறுத்தினாள். கால் நடக்க முடியாமல் முன்னாடியே உட்கார்ந்துகொண்டு அவளையே வாங்கி வரச் சொல்லிவிட்டு காபி ஆர்டர் செய்தாள். எதிரில் அவனே மறுபடி வந்து உட்கார்ந்தான்.

`அக்கா.. எனக்கும் படபடன்னு இருந்துச்சு. அதான் காபி குடிக்க வந்தேன்.`

ஷ்ரேயாவும் சேர்ந்துகொள்ள பரஸ்பரம் விசாரித்துக்கொண்டு காபியைக் குடித்து முடித்தார்கள். பில்லுக்கு ஷ்ரேயா எடுக்கப் போக, அவன் தடுத்தான்.

`இல்லப்பா. நான் கொடுக்கறேன். அக்காவைப் பார்த்துக்கோ, சாரி.`

இருவரும் ஒன்றாகப் போய்க் கேக்கை வாங்கிக்கொண்டு வரும்வரை நித்யா டேபிளில் உட்கார்ந்து இருவரையும் முறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

ஷ்ரேயா வந்தாள்.

`நித்யா.. கௌம்பு.`

`சரிங்க்கா.. நான் வரேன். ஷ்ரேயா வரேன்ப்பா.`

நித்யாவுக்கு தாங்கவில்லை.

`அதென்ன. நாங்க ரெண்டு பேரும் ஒரே மாதிரிதானே இருக்கோம். என்னை மட்டும் அக்கான்னு கூப்பிடற?`

அவன் திகைத்து இது என்ன கேள்வி என்பது போலப் பார்த்தான். இருவரையும் மாறி மாறிப் பார்க்க ஷ்ரேயா சிரித்தாள்.

`அது.. அது வந்து.. உங்களுக்குக் கல்யாணம் ஆயிருச்சு. அதனாலன்னு நினைக்கறேன். ஷ்ரேயாவுக்கு இன்னும் ஆகலயா. சின்னப்பொண்ணுன்னு. அப்படி..`

ஷ்ரேயா முடிக்குமுன் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தாள். நித்யாவுக்குக் கடுப்பாக, `இவளா? எனக்கும் அவளுக்கும் ஒரே வருஷம்தான் கல்யாணம் ஆச்சு. நல்லாருக்கு உங்க நியாயம். வாடி.. போலாம்` என்று சொல்லிவிட்டுக் கூட்டிக்கொண்டு போனாள். ஷ்ரேயா வழிநெடுக சிரித்துக்கொண்டே வந்தாள். நித்யா வந்து இட்லிப்பானை ஏற்றி, சட்னி அரைத்துத் தட்டில் போட்டுக்கொடுக்கும் வரை ஷ்ரேயா இந்த அக்கா கதையை பிள்ளைகளிடம், ரவியிடம் சொல்லிக்கொண்டே இருந்தாள்.

ரவி சிரித்து `நீதான் தாலியே போடல ல்ல. அதான் சொல்லிருக்கான்` என்றார்.

`அதைச் சொல்லுங்க. இவ பாட்டுக்குக் கழட்டிப் போட்டுட்டுச் சுத்தறா. சொன்னா கேட்டாதான? உங்களுக்கு மட்டும் குழம்பு தனியா எடுத்து வெச்சுருக்கேன் பாருங்க.`

ரவிக்குச் சட்னி பிடிக்காது.

`ஏய். இப்ப உனக்கு நான் தாலி போடாதது பிரச்னையா.. இல்ல. அவன் உன்னை அக்கான்னு கூப்பிட்டது பிரச்னையா?`

`ரெண்டும்தான்.`

நித்யா குனிந்து அந்தப் பத்தரை சவரன் தாலியைப் பார்த்துக்கொண்டாள். நல்ல கனம். அப்படித்தான் வேண்டுமெனக் கேட்டு வாங்கிக்கொண்டதுதான். செயினுக்குக் கூட வழியில்லாமல் இருந்தபோது பாராமுகங்களெல்லாம் நினைவில் அழுத்த இப்படி கனமாக வாங்கிக்கொண்டாள்.

மஞ்சள் சரடே அவளுக்குப் பிடிக்காது. ஏழ்மையை எடுத்துச் சொல்வது போல் இருப்பதாக ஒரு காம்ப்ளெக்ஸ். அப்புறம் வியர்வை உறிஞ்சி நிறம் மாறிவிடும்.

பிசுபிசுப்பாக இருக்கும். எந்த உடை உடுத்தினாலும் வித்தியாசமாகத் தெரியும். முதல் மூன்று மாதம்தான் அந்த மஞ்சள் சரடின் புதுமயக்கமெல்லாம். அதற்கப்புறம் பராமரிப்பதெல்லாம் எரிச்சல். அம்மாவானால் சங்கிலி இருந்தாலும் சரடுதான் போட்டுக்கொள்வேன் என்று பிடிவாதமாகப் போட்டுக்கொண்டிருக்கிறாள். யாரோ என்னமோ செய்யட்டும். எனக்கு சங்கிலிதான் வேண்டுமென ரவியிடம் கேட்டுக்கொண்டே இருந்தாள்.

மாமியார், நாத்தனார் எல்லாரும் கூட சரடில்தான் போட்டுக்கொண்டிருந்தனர். அதுவும் எப்படி மஞ்சள் தடவுகிறார்கள் என்று ஊன்றிக் கவனித்தபோதுதான் நித்யாவுக்கு அதிர்ச்சியாகிவிட்டது. குளித்துவிட்டு வந்தவுடன் தாலியைக் கழட்டி உள்ளங்கையில் வைத்து ஒரு ஸ்பூன் மஞ்சள் பொடியைக் கொட்டிப் பரபரவெனத் தேய்த்தார். எக்ஸ்ட்ரா மஞ்சளை உதறிவிட்டுக் கண்ணாடி மாட்டியிருந்த ஆணியில் அதைக் காய்வதற்காகத் தொங்க விட்டுவிட்டு மற்ற வேலையைப் பார்க்கப் போய்விட்டார். அய்யோ என நெஞ்சில் கைவைத்துக்கொண்டாள். நாத்தனாரும் அவள் அம்மாவின் வழியில் செல்வது புரிந்தது. நெஞ்சில் கைவைத்து மாங்கல்யத்தைப் பிடித்துக்கொண்டு `நான் மாட்டேன்ப்பா` என்று நினைத்துக்கொண்டாள்.

ஜெயாதான் ஒருமுறை பார்த்துவிட்டு, `என்ன பொட்டுத்தாலி போட்ருக்க.. உங்க ஜாதில அப்டிலாம் போட மாட்டாங்களே..` என்றாள்.

`இல்ல ஜெயா. நாங்க லவ் மேரேஜ்.`

`ஓ.. அப்ப.. உன் வீட்டுக்கார் உங்க ஜாதியில்லயா?`

`இல்ல..`

அடுத்தடுத்த நாட்களில் அவள் முகம் மாறிப்போனதை நன்றாக உணர முடிந்தது.

இன்னும் அதிகமாகத் தாலியை எடுத்து வெளியில் போட்டுக்கொண்டு நித்யா திரிய ஆரம்பித்தாள். ஒரு வழியாக சங்கிலிக்குப் பணம் சேர்த்து வாங்க முடிவானது. ஒரு நிமிடம் யோசித்துப் பக்கத்து வீட்டுக்குச் சென்று மங்களமக்காவையும் கூட்டிக்கொண்டு கடைக்குக் கிளம்பினார்கள்.

கடையில் மஞ்சள் சரடிலிருந்து குண்டுமணியையும் பொட்டையும் கழட்டித் தரச் சொல்ல, ரெடியாக எடுத்து வந்திருந்த மஞ்சள் கயிற்றைக் கழுத்தில் போட்டுக்கொண்டு கழட்டிக்கொடுத்தாள். ரவிக்குப் பெருமை தாங்கவில்லை.

மங்களமக்கா, `பாரேன். வெறுங்கழுத்தா இருக்கக் கூடாதுன்னு புத்திசாலியா சரடை எடுத்துட்டு வந்திருக்கா` எனப் பெருமையாகச் சொல்லிக்கொண்டே வந்தாள். ஒரு நான்கு வருடம் கழித்து மூன்று பவுன் ஐந்து பவுனாக மாறியது. அடுத்த நாள் ரவி கீழே விழுந்து காலை உடைத்துக்கொண்டான். செவ்வாய்க்கிழமை தாலி மாற்றியதுதான் அத்தனைக்கும் காரணமென அழுது கரைந்தாள். மறுபடி ஒரு நல்ல நாள் பார்த்து மாற்றிக்கொண்டு வந்தபிறகுதான் அமைதியானாள்.

அப்புறம் கவிதா அக்கா, மங்களம், மாமி எல்லாரும் பலவிதமாகத் தாலியைத் தவிர நிறைய ஐட்டங்கள் போட்டுக்கொண்டிருந்ததைக் கவனித்து விசாரித்தாள். ஆளாளுக்கு ஒவ்வொன்று சொன்னார்கள். மாமியார் வெறும் கருகமணியை மட்டுமே கூட போட்டிருந்தார். மாங்காய், பவளம், முத்து, லஷ்மி காசு, வாழைக்குலை, இன்னும் என்னென்னமோ இருந்தது.

மங்களமக்கா செட்டிநாட்டைச் சேர்ந்தவள். அவள் சொன்ன தாலித் தங்கத்தின் கணக்கு கண்ணைச் சுழட்டியது. ஒவ்வொரு சமூகத்தின் தாலி வழக்கமும் நித்யாவை ஆச்சரியப்படுத்திக்கொண்டே இருந்தது. ஆனால் ஷ்ரேயா கல்யாணத்தன்று போட்டுக்கொண்டதோடு சரி. அதற்குப் பிறகு அவள் கழுத்தில் பார்த்ததே இல்லை. சரி சென்னைப் பழக்கம் என்று விட்டுவிட்டாலும், அவளின் வெறுமையான கழுத்து எப்போதும் எரிச்சலூட்டியதாகவே இருந்தது.

`என்ன யோசனை?`

`இல்ல. தாலி பத்திதான் யோசிச்சுட்டு இருந்தேன். எவ்ளோ இருக்குல்ல?`

`ம். ஆமாமா. உன் ஃப்ரெண்டுக்கு இதெல்லாம் பழக்கமேல்ல. என்ன செய்யறது? கால் எப்படி இருக்கு..`

`ம். பரவால்ல. தைலம் தடவியிருக்கேன்.`

ஷ்ரேயா தன் பையிலிருந்து டிஃபன் பாக்ஸை எடுத்துத் திறந்து கத்தையாக மடித்து வைத்திருந்த பணத்தை எடுத்து ரவியிடம் கொடுத்தாள்.

`இந்தாங்கண்ணா. ஒரு லட்சம் இருக்கு.`

ரவி கொஞ்சம் தர்மசங்கடமாக வாங்கிக்கொண்டான். கடனாகக் கேட்டிருந்ததுதான். வாங்கும்போது குறுகலாக இருந்தது.

`டிஃபன் பாக்ஸ்ல வெச்சு எடுத்துட்டு வந்தியா. நல்ல ஐடியாதான்.`

`ஆமாடி. நடுவில பாத்ரூம் இறங்கிப் போகக் கூட பயம்மாத்தான் இருந்துச்சு. சேலத்துல இறங்கி நீ வர்ற வரைக்கும் பணம் பைல இருக்குன்னு ஒரே டென்ஷன். அதான் ஃபோன் பண்ணிட்டே இருந்தேன்.`

`ரொம்ப தேங்க்ஸ்மா. நாளைக்கு சமையல்காரங்களுக்கே இதுலதான் கொடுத்தாகணும். நீ கொண்டு வர்ற வரைக்கும் பயம்மாவேதான் இருந்துச்சு. ஒரு ஆறுமாசம். கொடுத்துடறேன்.`

`இருக்கட்டும்ண்ணா. பரவால்ல. அண்ணா..... சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. இவளை ஏதாவது க்ரூப் எக்சாம் எழுதச் சொல்லலாம்ல. அதான் பிள்ளைங்களும் பெரியவங்களாயிட்டாங்க.`

ரவி சிரித்தான்.

`ம். சிபாரிசு பெருசா இருக்கு. அதெல்லாம் போன வாரமே பேசி என்னை கன்வின்ஸ் பண்ணிட்டா. சரி. நிழல்ல உக்காந்துட்டு அக்கடான்னு இருக்க முடியல உன் ஃப்ரெண்டுக்கு. க்ளாசுக்குப் போகச் சொல்லிட்டேன்.`

`ஆமா பெரிய மனசு பண்ணி அப்ரூவ் பண்ணிட்டாரு. அதை விடுடி. உன் மாமியார் கோவிச்சுக்கிட்டாங்களா.. நேர்ல வந்து பத்திரிக்கை கொடுக்காம தபால்ல அனுப்பிட்டோம்னு. சாரிடி.`

`அப்படியாம்மா. அய்யோ தெரிஞ்சுருந்தா நேர்லயே வந்திருப்போம்மா. அதான் முறை. ஏதோ தவறிருச்சும்மா.`

`அட விடுங்கண்ணா. எனக்கும் சரி என் வீட்டுக்காரருக்கும் சரி. எந்த ஃபார்மாலிட்டியும் இல்ல. அத்தை வயசானவங்க. அதான் பேசிட்டே இருந்தாங்க. அதெல்லாம் சமாளிச்சுக்கலாம்ண்ணா. விடுங்க.`

ஷ்ரேயா சமாளித்தாலும் வீட்டில் குழப்பத்தைத் தாண்டித்தான் வந்திருக்கிறாள் என்பது புரிந்ததும் ரவிக்கும் நித்யாவுக்கும் கொஞ்சம் சங்கடமாக இருந்தது.

மறுநாள் கிரஹ ப்ரவேசம் நல்லபடியாக முடிந்தது. எல்லாரையும் சாப்பிட அழைத்தபோதுதான் கொழுந்தனார் மனைவி வந்து காதைக் கடித்தாள்.

`அக்கா. உங்க ஃப்ரெண்டுக்கு என்னாச்சு. அவங்க வீட்டுக்காரரோட இல்லையா?`

`ஏய். அதெல்லாம் ஒண்ணுமில்ல. அவர் ஃபாரின் போயிருக்காரு. அதானாலதான் வர முடியல.`

`அப்டியா சொல்றீங்க. சரி. கழுத்துல ஒண்ணுமில்லையா.. அதான் ஏதோ பிரச்னைன்னு நினைச்சேன்.`

சந்தேகமாகச் சொல்லிவிட்டு நகர்ந்தாள். இந்தத் தாலி பிரச்னை பெரும் பிரச்னையாக இருக்கிறதே.

`ஏண்டி. இன்னிக்கு ஒருநாளாவது போட்டுட்டு வரக்கூடாதா?`

`போடி. என்கிட்ட இருக்கறதுலயே. எக்ஸ்பென்சிவான பொருளே அதான். தனியா வேற வரேன். சேஃப் இல்ல.`

போன மாதம் துப்பட்டாவைச் சுத்திக்கொண்டு நடுராத்திரியில் பயந்து வீட்டுக்கு வந்தது ஞாபகத்துக்கு வந்தது. அம்மா அதே விஷயத்தை எரிச்சலுடன் கேட்டு ஷ்ரேயாவை விசாரித்துக்கொண்டிருந்தாள். ஷ்ரேயா இன்னும் எரிச்சலாய்ப் பதில் சொல்லிக்கொண்டிருந்தாள்.

`தொங்கத் தொங்க தாலி கட்டிக்கணும். நெஞ்சு வரைக்கும் கீழ தொங்கணும். அதான் சுமங்கலி. இப்படியா மொட்ட கழுத்தோட சுத்துவ?`

தாலி நெஞ்சில் கனமாய்த் தொங்கியது. எல்லாரும் சொன்னதைப் போல ஒவ்வொன்றாய்ச் சேர்த்துக்கொண்டதில் லஷ்மி காசு இரண்டு, மாங்காய் இரண்டு, பவளம், முத்து எனத் தனியாக ஐந்தாறு உருப்படி தொங்கியது. கொலுசு, வளையல் சத்தம் போலத் தாலிச் சத்தமும் தனியாகத் தெரிந்தது. அதே ஒரு பெரிய ஆபரணமாய் விளங்கியது. மிக கர்வமாக நித்யா பத்தரைப் பவுன் சொச்சத்தைச் சுமந்து

கொண்டிருந்தாள்.

`எந்த எக்ஸ்ட்ரா நகையும் வாணாம்டி.. இது மட்டும் போட்டுக்கிட்டு நீ கல்யாணத்துக்கே போய்ட்டு வந்துரலாம்.`

கவிதாக்கா சொன்னது பெருமையாக இருந்தது. அந்தப் பைக்காரன் வேண்டுமானால் இன்னும் இரண்டு அக்கா போட்டுக்கொள்ளட்டும். என்ன இப்போ?

இடையில் ஒரு பத்து வருடம் தாண்டிவிட்டது. உலகமே உருண்டு புரண்டு தட்டையாகிவிட்டதைப் போலிருந்தது. எல்லா நியதிகளும் வசதிகளின் பொருட்டு நிறம் மங்கினாற் போல் இருந்தது. நித்யாவுக்கு பிரமோஷன் கிடைத்துச் சென்னையில் மாற்றலாகிவிட்டது. ஷ்ரேயா வீட்டில் போய் இறங்கித்தான் முதல் நாள் வேலையில் சேர்ந்தாள். குவார்ட்டர்ஸ் இன்னும் ஒதுக்கப்படவில்லை. அலுவலகத்திலிருந்து வீட்டுக்கு வரும் வழியிலேயே ப்ளூடூத் மாட்டிக்கொண்டு ஃபோனில் ரவியிடம் எல்லாவற்றையும் ஒப்பித்தாள்.

ஷ்ரேயா ஃபோனில் ஏதோ மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தவள் நித்யாவைப் பார்த்துச் சிரித்தாள்.

`ஏய். சக்சஸ். கார் புக் பண்ணிருந்தேன். எல்லாம் ரெடி, இப்பதான் அட்வான்ஸ் நான்கு லட்சம் ட்ரான்ஸ்ஃபர் பண்ணினேன். இன்னிக்கு என்னோட ட்ரீட்டு. கிளம்பு, வெளில போய்ச் சாப்பிடலாம்.`

`வாவ். செம. நல்ல ஹோட்டலா கூட்டிட்டுப் போ.`

நித்யா வேகமாக உடை மாறினாள். காட்டன் புடவையைக் கழட்டி எறிந்துவிட்டு இலகுவாய் டாப்பும், பேண்ட்டுக்குமாய் மாறினாள். இறுகக் கட்டியிருந்த வாட்ச்சைத் தளர்த்தி எடுத்தபோது அப்பாடி என இருந்தது. பின்னலை அவிழ்த்துத் தலையை உதறி போனிடைல் போட்டாள். முகத்தை நன்கு அலம்பிக்கொண்டு துடைத்துச் சின்னதாய் ஒரு ஸ்டிக்கர். ரெடி.

`நித்து.. வர்ற வாரம் நம்ம சித்ரா பொண்ணுக்குக் கல்யாணம் இருக்குடி. உனக்கு இன்னொரு நாள் எக்ஸ்ட்ரா லீவு கிடைக்கும்னா சொல்லு. அப்படியே நம்ம காலேஜுக்குப் போய்ட்டு வரலாம்.`

`ஆமாடி. வாட்சப்ல இன்விடேஷன் பார்த்தவுடனே நினைச்சேன். போய்ட்டு வரலாம். லீவுதானே. பார்த்துக்கலாம்.. அப்புறம்..`

கழுத்தில் தெரிந்த மருவை நிரடியபடியே சொன்னாள்..

`ஷ்ரூ. நல்ல டெர்மடாலஜிஸ்ட் இருந்தா சொல்லேன். மரு வந்துட்டே இருக்கு.`

ஷ்ரேயா திரும்பிப் பார்த்தாள். வெண்ணிறக் கழுத்தில் மருக்கள் ஒன்றிரண்டாய்ப் பரவி இருந்தன. அதிர்ச்சியாய் நித்யாவைப் பார்த்தாள்.

`ஹேய் என்னடி இது?`

`என்ன? மருதான்.`

`சே.. அதில்ல. உன் தாலி எங்க?`

நித்யா மூடியிருந்த தன் கையைத் திறந்து காட்டினாள். அப்போதுதான் கழட்டி வைத்திருந்த எக்ஸ்ட்ரா மோதிரங்கள், வளையல், அதனுடன் ஒரு மெல்லிய சங்கிலியில் தாலியும் இருந்தது. ஷ்ரேயா ஆச்சரியத்துடன், `ஏய். என்னது இது. உன் தொங்க தொங்க தாலி எங்க? அப்புறம் நிறைய டிங்.. டிங்னு சத்தம்லாம் வருமே. அதெல்லாம் எங்க? இது என்னமோ டாலர் செய்ன் மாதிரி இருக்கு? அதையும் கழட்டிட்ட..` என்று கேட்டாள்.

கையில் எடுத்துப் பார்த்து ஷ்ரேயா சிரித்தாள். மெல்லிய செயினில் தாலிப்பொட்டும் இரண்டு குண்டுமணிகளும் மட்டும் இருந்தது.

`ம்க்கும். இது ஒண்ணுதான் உனக்கு அதிர்ச்சியா இருக்கா. கிளம்புடி. பசிக்குது.`

ஷ்ரேயா சிரித்துக்கொண்டே கிளம்பினாள்.

சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, நெட்டையாக ஒருவர் வந்து,

`ஏங்க. இந்த சேர எடுத்துக்கவா?` என்று கேட்டார்.

நித்யா வாயில் எதையோ வைத்து மும்முரமாய் இருக்க, ஷ்ரேயா பதில் சொன்னாள்.

`ஓ தாராளமா.`

`தேங்க்ஸ் அக்கா.`

ஷ்ரேயா திரும்பி நித்யாவைப் பார்க்க அடக்க முடியாமல் சிரித்ததில் நித்யாவுக்குப் புரையேறத் தொடங்கியிருந்தது.

■

படைப்பு

சென்னையின் மைய பகுதியில்

# படைப்பு அரங்கம்

## Facilities

- Capacity 90 to 100 (Members)
- AC Hall
- POP with Profile Lights
- Tea/Coffee snacks place
- Projector

இலக்கிய நிகழ்வுகளுக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்படும்




முகவரி

படைப்பு குழுமம்
#3, Ground Floor,
Ajantha Tower,
Corporation Colony Street,
Kodambakkam, Chennai
Opp: R2 Police Station

+91 73388 97788 / 73388 47788

padaipppu admin@padaippu.com www.padaippu.com